www.waytosuccess.org

# பள்ளிக் கல்வித் துறை
# சென்னை மாவட்டம்



# 12ஆம் வகுப்பு
# வினா-விடை பயிற்சி ஏடு

**மெல்லப் பயிலும்**
**மாணவர்களுக்கான தொகுப்பு**

## 2013-2014
## தமிழ், ஆங்கிலம்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# தமிழ்

# முதல் தாள்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# செய்யுள் - சிறுவினா - தொகுப்பு

1. கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல் இடம் பெற்றுள்ள நூலும் களமும் யாவை?
   கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல்: கம்பராமாணம் ஆகும்.
   களம் : யுத்த காண்டம் ஆகும்

2. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் கூறுக.
   கவிச்சக்கரவர்த்தி "கல்வியில் பெரியவன்" "கம்பன் கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன் என்பன கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் ஆகும்.

3. கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
   சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி என்பன கம்பர் இயற்றிய வேறு நூல்களாகும்.

4. தமிழரசி குறவஞ்சியில் பாட்டுடைத் தலைவனும் தலைவியும் யாவர்?
   தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் சுவாமிமலையில் கோவில் கொண்டுள்ள முருகப்பெருமான் ஆவார். பாட்டுடைத் தலைவி தமிழன்னையாகிய தமிழரசி ஆவார்.

5. தமிழரசி குறவஞ்சி யார் வேண்டுகோளுக்கு இணங்க இயற்றப் பெற்றது?
   தமிழரசி குறவஞ்சி தமிழவேள் உமாமகேசுவரனாரின் வேண்டுகோளுக்கு இணங்க இயற்றப்பெற்றது.

6. நாம் வாடியதற்குக் காரணம் என்ன?
   இந்தியராகிய நாம் வாடியதற்குக் காரணம் நம்முடைய வாழ்வு மலர வந்தவரும் போனவரும் உதவமாட்டார்கள் என்று நம்பிக் கொண்டு இருந்ததே ஆகும்.

7. தமிழரசி குறவஞ்சியின் அரங்கேற்றம் பற்றிக் கூறுக.
   புலவரேறு அ. வரத நஞ்சையப் பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய "தமிழரசி குறவஞ்சி" என்னும் நூலைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவின் போது, ஞானியார் அடிகள் தலைமையில் அரங்கேற்றினார்.

8. நாமக்கல் கவிஞரை 'மாநில அரசும்', 'நடுவணரசும்' எவ்வாறு பெருமைப்படுத்தின?
   நாமக்கல் கவிஞரை 'மாநில அரசு' 'அரசவைக் கவிஞர்' ஆக்கியும் பின்னர் தமிழகச் சட்ட மேலவை உறுப்பினராகவும் நியமித்துச் சிறப்பித்தது நடுவணரசு, அவருக்குப் பத்மபூஷண் விருதளித்துப் பெருமைப்படுத்தியது.

9. நாமக்கல் கவிஞர் சிறை செல்லக் காரணம் என்ன?
   விடுதலைப் போராட்ட வீரரான நாமக்கல் கவிஞர், உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெற்றக் காரணத்தால் சிறைத் தண்டனை அடைந்தார்.

10. நாடேறும் எதனைப் பாடுதல் வேண்டும்?
    இந்தியர் ஒவ்வொருவரும் நாள்தோறும் 'இஃது இந்திய நாடு' 'இஃது எனக்கே உரிமையான நாடாகும்' என்று போற்றிப் பாடுதல் வேண்டும்.

11. நாம் தூங்கிக் கிடந்ததால் நிகழ்ந்தது என்ன?
    இந்தியராகிய நாம் தூங்கிக் கிடந்ததால், இந்திய நாட்டுக்கு உரிமை இல்லாத அந்நியர் வந்து நம்மை அடிமைப்படுத்தி ஆள நேர்ந்தது.

12. இத்தினம் முதல் நாம் எவ்வெண்ணத்தைக் கொள்ளல் வேண்டும்?
    இத்தினம் முதல் இந்தியர் ஒவ்வொருவரும் 'இந்திய நாடு எனக்கு உரிமையான நாடு' என்னும் எண்ணத்தைக் கொள்ளல் வேண்டும்.

13. எட்டுத் தொகை நூல்கள் யாவை?

| அகப்பொருள் நூல்கள் | புறப்பொருள் நூல்கள் | அகம் புறம் |
|---|---|---|
| 1. நற்றிணை | | |
| 2. குறுந்தொகை | 6. பதிற்றுப்பத்து | 8. பரிபாடல் |
| 3. ஐங்குறுநூறு | 7. புறநானூறு | |
| 4. கலித்தொகை | | |
| 5. அகநானூறு | | |

14. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?
    முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள் கடைச்சங்கப் புலவர்கள் என பலருடைய வரலாற்றுக் குறிப்புகளையும் அக்கால மக்களின் வாழ்க்கை முறை முதலியவற்றையும் புறநானூற்றால் நன்கு அறியலாம்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

15. பொதுவியல் திணையை விளக்குக.
வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத் திணைகளுள் கூறப்படாத செய்திகளையும், அத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

16. பொருண்மொழிக் காஞ்சி என்னும் துறையை விளக்குக.
முனிவரும் அவரைப் போன்றவரும் இம்மை மறுமைகளில் உயிருக்கு உறுதியைத் தருவது இன்னது என்று தாம் தெளிவாய் அறிந்த பொருளைச் சொல்வது 'பொருண் மொழிக்காஞ்சி' என்னும் துறையாகும்.

17. வௌவாலின் தோற்றத்தைக் கூறுக.
ஈரம் பொருந்திய தோலை எண்ணெயிலே தோய்த்தது போல கருமையான சிறகுகளைக் கொண்டது, வௌவால்.

18. அகநானூறு எத்தனை பகுதிகளாக உள்ளது? எழுதுக.
அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது.

| வரிசை எண் | பிரிவுகள் | பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | களிற்றியானை நிரை | 120 பாடல்கள் |
| 2. | மணிமிடை பவளம் | 180 பாடல்கள் |
| 3. | நித்திலக் கோவை | 100 பாடல்கள் |
| | மொத்தம் | 400 பாடல்கள் |

19. அகநானூற்றுப் பாடல்களின் திணை அமைப்பு முறையை விளக்குக.

| வரிசை எண் | எண் அமைப்பு | திணை அமைப்பு முறை |
|---|---|---|
| 1. | 1, 3, 5 என வருபவை | பாலைத்திணைப் பாடல்கள் |
| 2. | 2, 8 என வருபவை | குறிஞ்சித்திணைப் பாடல்கள் |
| 3. | 4,14 என வருபவை | முல்லைத்திணை பாடல்கள் |
| 4. | 6, 16 என வருபவை | மருதத் திணைப் பாடல்கள் |
| 5. | 10,20 என வருபவை | நெய்தல் திணைப் பாடல்கள் |

20. இரட்டைக் காப்பியங்கள் யாவை?
சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் ஆகும்.

21. சிலப்பதிகாரம் -பெயர்காரணம் தருக.
'சிலப்பதிகாரம்' - சிலம்பு + அதிகாரம் கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக வளர்ந்த கதையாதலால் 'சிலப்பதிகாரம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

22. சிலப்பதிகாரம் - நூல் அமைப்பை எழுதுக.
சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டு விளங்குகிறது.

| வ. எண் | காண்டம் | காதைகள் |
|---|---|---|
| 1. | புகார் காண்டம் | 10 காதைகள் |
| 2. | மதுரைக் காண்டம் | 13 காதைகள் |
| 3. | வஞ்சிக் காண்டம் | 07 காதைகள் |
| | சிலப்பதிகாரம் | 40 காதைகள் |

23. மணமகளின் கூந்தலைப் போல மணந்தது எது?
மணமகளின் கூந்தலைப் போல மணந்தது 'முல்லை மலர்களே' ஆகும். முல்லை மலர்கள் கொடியின்மேல் மொட்டு விரிந்து , ஒளி பொருந்தி, மணமகளின் கூந்தலைப் போல மணம் வீசிக் கொண்டிருந்தன.

24. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?
1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பன சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் ஆகும்.

25. சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய பெருமக்கள் யாவர்?
1. அரும்பத உரைகாரர் - நூல் முழுமைக்கும்அரும்பதங்களுக்கு மட்டும் உரை எழுதியவர்
2. அடியார்க்கு நல்லார் - விளக்கமாக உரை எழுதியவர் 3. ந.மு. வேங்கடசாமி நாட்டார் - நூல் முழுமைக்கும் உரை எழுதியவர்

26. சுந்தரகாண்டம் என்று பெயர் வரக் காரணம் யாது?
அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயரும் உண்டு. அனுமனின் தலைமை பண்புகள் வீறு பெற்று விளங்குவதால் இக்காண்டம் சுந்தரகாண்டம் என பெயர் பெற்றது.

27. அனுமன் இராமனை எய்தியதும் செய்த செயல் யார்?
அனுமன் இராமனை எய்தியதும் அவனுடைய வீரக்கழல் அணிந்த திருவடிகளை வணங்கவில்லை. பூமியில் பிறந்த



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

திருமகளாகிய சீதாதேவி இருந்த திசையை நோக்கித் தலை தாழ்த்தி, கைகூப்பி, தரையில் விழுந்து, பணிவாகப் போற்றி வணங்கினான்.

28. இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை?
சீதை நலமுடன் இருக்கிறாள். அனுமன் சீதையைக் கண்டது உண்மை சீதை, கற்பு நிலை தவறாது இருக்கிறாள் என்பன அனுமனின் முகக் குறிப்பால் இராமன் உணர்ந்தவை ஆகும்.

29. ‘கண்டனென்’ என்று அனுமன் கூறியவை யாவை?
தேவர்களுக்குத் தலைவரே! யான் இலங்கை என்னும் நகரில், கற்பினுக்கு அணிகலமாய் விளங்குகின்ற சீதாப் பிராட்டியை என் கண்களால் கண்டு வந்தேன். ஆதலால், ‘அவரது கற்பினைப் பற்றிய ஐயத்தையும் துயரத்தையும் நீக்குவீராக’ என்று அனுமன் இராமபிரானிடம் கூறினான்.

30. ‘உயிர் தந்து ஈயும் மருந்தொத்தது’ என்று அனுமன் குறிப்பிட்டதன் பொருள் யாது?
இராமனைப் பிரிந்த துயரினாலும் இராவணனது கொடுமையாலும் ‘இனி ஒருபோதும் இராமனைக் காணவே முடியாது’ என்று எண்ணிய சீதை தன் உயிரைவிடத் துணிந்தாள். அந்த நிலையில் அனுமன் தந்த இராமனின் கணையாழி, சீதைக்கு இறுதிக் காலத்தில் உயிர்காக்கும் சஞ்சீவி மருந்து போன்று விளங்கியது. எனவே, ‘உயிர்தந்து ஈயும் மருந்தொத்தது’ என்று குறிப்பிட்டான்.

31. ஆத்தாக் கிழவி யார்?
ஆத்தாக் கிழவி என்பவள் 1. அரசி கண்ணுக்கினியாளின் தோழி, 2. திருட்டுத் தொழில் செய்யும் வீரப்பனின் மனைவி 3. வேலனைப் பெற்றதாய், 4. அரசன் மகள் அன்னத்தின் செவிலித் தாய் ஆவாள்.

32. கதிர்நாட்டு அரசன் அரசியார் பெயர்களை எழுதுக.
கதிர் நாட்டு அரசன் பெயர் - கதிரை வேலன் . கதிர் நாட்டுஅரிசி பெயர் - கண்ணுக்கினியாள்

33. தமிழக அரசு பாரதிதாசனைப் போற்றியுள்ளமை யாங்ஙனம்?
தமிழக அரசு பாரதிதாசனைப் போற்றும் வகையில், 1. திருச்சியில் பாரதிதாசன் பெயரால் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளது. 2. அவர் தம் கவிதை, உரை நடை நூல்களை நாட்டு உடைமையாக்கிச் சிறப்பித்துள்ளது.

34. அன்னம் வேலனைப் பற்றி வினாவியது யாது?
அன்னம் ஆத்தாக்கிழவியிடம், வேலனைச் சுட்டிக் காட்டி ‘இவர் யார்?’ என்று கேட்டாள். ஆத்தாக் கிழவி ‘என் மகன்’ என்று சொன்னாள். பிறகு அவள், “வேழ நாட்டார் என்னைச் சிறைப்பிடிக்க வரும் போது அவர்களைத் தடுத்து என் உயிரையும் மானத்தையும் காத்தவர் இவர் தாமோ?” என்று கேட்டாள்.

35. தேம்பாவணி - பொருள் கூறுக.
தேம்பாவணி - தேம்பா + அணி ‘வாடாத மாலை’ என்றும் தேன் + பா +அணி - தேன் போன்ற பாக்களை அணியாக உடையது என்றும் பொருள் படும்.

36. கிறித்துவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம் என்று போற்றப் பெறும் நூல் எது?
கிறத்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்று போற்றப்பெறும் நூல் தேம்பாவணி ஆகும்.

37. தேம்பாவணி எத்தனை காண்டங்களை உடையது?
தேம்பாவணி மூன்று காண்டங்களை உடையது

38. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர் யார்?
தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய ‘சூசை மாமுனிவர், ஆவார்.

39. வீரமாமுனிவர் இயற்பெயர் யாது?
வீரமாமுனிவரின் இயற்பெயர் ‘கொன்ஸ்டான் ஜோசப் பெஸ்கி’ ஆகும்.

40. வளன் என்ற சொல்லின் பொருளை விளக்குக.
வளன் என்ற சொல்லின் பொருள் ‘வளங்களை வளரச் செய்பவன்’ என்பதாகும்.

41. யுதேயா நாட்டில் பகைகொண்டு நின்ற இனத்தார் யாவர்?
யூதேயா நாட்டில் பகை கொண்டு நின்ற இனத்தார், மலை நாடுகளில் வாழ்ந்த ‘பிலித்தையர்’ ஆவர்.

42. ‘உலா’ என்பதன் பொருளை விளக்குக.
உலா என்பதற்குப் ‘பவனி வரல்’ என்பது பொருள் ஆகும்.

43. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?
முக்கூடலில் கூடும் ஆறுகள் 1. தண்பொருநையாறு 2. சிற்றாறு 3. கோதண்ட ராம ஆறு ஆகியனவாகும்.

44. கலம்பகம் -பெயர்க்காரணம் தருக.
கலம்பகம்- கலம்+ பகம் கலம் - பன்னிரண்டு (12) பகம் - அதில் பாதி ஆறு (6) பதினெட்டு உறுப்புகள் அமையப்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பாடப்படுவதால் 'கலம்பகம்' எனப் பெயர் பெற்றது.

45. தேவார மூவர் யாவர்?
1. அப்பர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் ஆகியோர் தேவார மூவர் ஆவர்.

46. சுந்தரர் தேவாரம் எந்த திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது?
சுந்தரர் தேவாரம், பன்னிரு திருமுறையில் 'ஏழாம்' திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

47. சுந்தரர் எழுதிய மற்றொரு நூல் எது?
சுந்தரர் எழுதிய மற்றொரு நூல் 'திருத்தொண்டத் தொகை' என்பதாகும்.

48. நீலகேசியின் வேறு பெயர் யாது?
'நீலகேசித்திரட்டு' என்பதாகும்.

49. கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர் யார்? எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை ஆவார்.

50. சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்படக் காரணம் யாது?
சிவபெருமான் சுந்தரரை தம் தோழராய்க் கொண்டார். அதனால் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்பட்டார்.

## ஒரு மதிப்பெண் தொகுப்பு

1. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் ஒட்டக் கூத்தர்.
2. 'ஒன்றே யென்னின்' என்னும் கடவுள்வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம் யுத்த காண்டம்.
3. தமிழரசிக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் முருகன்.
4. புறம், புறப்பாட்டு என வழங்கப் பெறுவது புறநானூறு ஆகும்.
5. புறநானூற்றின் திணைகள் பதினொன்று.
6. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் 65 (அறுபத்தைந்து)
7. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் புறநானூறு.
8. சங்க நூல்கள் பழந்தமிழ் இலக்கணம் ஆகிய தொல்காப்பியத்துக்கு இலக்கியங்களாய்த் திகழ்கின்றன.
9. புறநானூற்றுப் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.
10. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை வெளி நாட்டறிஞர் ஜி.யு. போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
11. எட்டுத் தொகை நூல்களுள்ஒன்று பரிபாடல்.
12. அகநானூறு மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 180.
13. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை13 அடிமுதல் 31 அடிவரை
14. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாற வழுதி.
15. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை 9 அடிமுதல்12அடிவரை.
16. கபிலர் பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தார்.
17. கபிலர் பாரி மன்னனின் அவைகளப் புலவராக விளங்கினார்.
18. கபிலரின் பாட்டுத் திறனுக்கு கபிலரது பாட்டு என்னும் தொடரே சான்றாகும்.
19. கபிலர் குறிஞ்சித் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்.
20. கபிலரை 'வாய்மொழிக் கபிலர்' என்று போற்றியவர் நக்கீரர் ஆவார்.
21. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பெருந்தேவனார்.
22. ஐங்குறு நூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.
23. ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தவர் சேரமன்னன் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை ஆவார்.
24. குறட்பா என்பது ஈரடி வெண்பா.
25. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் 38.
26. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் 9 .
27. பொருட்பாலின் இயல்கள் அரசியல், அங்கவியல், ஒழிபியல்.
28. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது திருவள்ளுவமாலை.
29. கொண்டாடப்பெறும் திருவள்ளுவராண்டின் படி அவர் வாழ்ந்த காலம் கி.மு. 31
30. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர் பாரதிதாசன்
31. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள் மூன்று .
32. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு காதை .
33. வரி என்பது இசைப்பாடல்.
34. சிலப்பதிகார உரையாசிரியருள் ஒருவர் அரும்பதவுரைகாரர்.
35. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களில் ஒன்று உரையிடையிட்ட.
36. தாம் இயற்றிய இராம காதைக்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம்
37. கம்பநாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு தொண்ணூற்றாறு.
38. கம்பராமாணயத்திலுள்ள காண்டங்கள் 6 .



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

39. உத்தர காண்டத்தைப் பாடியவர் ஒட்டக் கூத்தர் .
40. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர் அனுமன் .
41. சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர் அனுமன்.
42. தனயை என்ற சொல்லின் பொருள் மகள்.
43. இராமன் கொடுத்ததாக சீதையிடம் அனுமன் காட்டியது கணையாழி.
44. சீதாப்பிராட்டி தன்னை மீட்டுச் செல்ல விதித்த காலம் ஒரு திங்கள்.
45. சுந்தரகாண்டம் இராமாயணத்தில் ஐந்தாங் காண்டம் ஆகும் .
46. வீரமாமுனிவரின் தாய்நாடு இத்தாலி .
47. கொன்ஸ்டான் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் அஞ்சாதவன் .
48. தொகுத்த அகராதி சதுரகராதி.
49. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழி பெயர்த்துத் தந்தது இலத்தீன் மொழியில்
50. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர் சூசை மாமுனிவர்
51. கவிச்சக்ரவர்த்தி, கவி ராட்சகன் என்றெல்லாம் புகழப்படுபவர் ஒட்டக்கூத்தர்
52. 'திவ்வியகவி' என்ற பெயரால் அழைக்கப்படுபவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.
53. தமிழில் முதலில் தோன்றிய கலம்பகம் நந்திக் கலம்பகம்.
54. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்.
55. 'புலன்' என்னும் இலக்கியவகை பள்ளு.
56. 'பிரபந்தம்', என்னும் வடசொல் உணர்த்தும் பொருள் நன்கு கட்டப்பட்டது.
57. முக்கூடற்பள்ளு பா வகை சிந்துப்பா.
58. பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் .
59. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல் பிசிராந்தையார்.
60. பாரதிதாசன் வெளியிட்ட இதழ் குயில்.
61. 'வாழ்வினிற் செம்மையைச் செய்பவை நீயே' என்ற வாழ்த்தைத் தம் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ள அரசு புதுவை அரசு.
62. வடமொழியில் பாரதம் பாடியவர் வியாசர்.
63. பாஞ்சாலி சபதத்திலுள்ள சருக்கங்களின் எண்ணிக்கை 5 (ஐந்து).
64. 'நமக்கு தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்' என்று பாடியவர் பாரதியார்.
65. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதியார்.
66. செந்தமிழைத் செழுந்தமிழாகக் காண விரும்பியவர் பாரதிதாசன்.
67. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரிடம் செவாலிய விருது பெற்றவர் வாணிதாசன்.
68. கவிஞரேறு, பாவலர் மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர் வாணிதாசன்.
69. சுரதா நூல்களுள் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற நூல் தேன் மழை.
70. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ் அன்னை விருது பெற்றவர் அப்துல் ரகுமான்.
71. 'உவமைக் கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றவர் சுரதா.
72. 'கிறித்துவக் கம்பர்' என்று அழைக்கப்பட்டவர் எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை.
73. 'சின்னச் சீறா' என்ற நூலை எழுதியவர் பனு அகமது மரைக்காயர்.
74. சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறை.
75. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர் பெரியவாச்சான் பிள்ளை.
76. அறத்துப்பாலின் இயல்கள் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்.
77. காமத்துப்பால் களவியல், கற்பியல், 25.
78. அகநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர் நெடுந்தொகை (பெருந்தொகை).
79. தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை தேறும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.
80. நக்கண்ணையார் மணந்து கொள்ள விரும்பிய அரசர் போரவைக் கோப்பெருங்கிள்ளி.

## பொருத்துக & மொழிப்பயிற்சி

**1. கவிஞர் — ஊர்**

1. கம்பர் - திருவழுந்தூர்
2. வரத நஞ்சையப்பிள்ளை - தோரமங்கலம்
3. வெ.இராமலிங்கனார் - மோகனூர்

**2. ஆசிரியர் — நூல்**

1. கம்பர் - இராமாயணம்
2. வரதநஞ்சைய பிள்ளை - தமிழரசி குறவஞ்சி
3. இராமலிங்கனார் - நாமக்கல் கவிஞர் பாடல்கள்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

3. **சொல்** — **இலக்கணக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| 1. அடிவாழ்த்துவம் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 2. திருந்து மொழி | - | வினைத் தொகை |
| 3. வாழிய வாழிய | - | அடுக்குத் தொடர் |
| 4. வாழ்த்துவம் | - | தன்மைப் பன்மை வினைமுற்று |

4. **திணை** — **நிலம்**

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | மலையும் மலைச் சார்ந்த இடமும் |
| 2. முல்லை | - | காடும் காடு சார்ந்த இடமும் |
| 3. மருதம் | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| 4. நெய்தல் | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| 5. பாலை | - | சுரமும் சுரஞ் சார்ந்த இடமும் |

5. **திணை** — **பாடியோர்**

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | கபிலர் |
| 2. முல்லை | - | பேயனார் |
| 3. மருதம் | - | ஓரம் போகியார் |
| 4. நெய்தல் | - | அம்மூவனார் |
| 5. பாலை | - | ஓதலாந்தையார் |

6. **சொல்** — **இலக்கணக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| 1. முள்ளிலை | - | இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை |
| 2. ஒழுகுநீர் | - | வினைத்தொகை |
| 3. நன்மான் | - | பண்புத் தொகை |
| 4. அஞ்சிலோதியை வர | - | அன்மொழித் தொகை |

7. **சொல்** — **பொருள்**

| | | |
|---|---|---|
| 1. திணை | - | மிகச்சிறிய அளவு |
| 2. பனை | - | ஒரு பேரளவு |
| 3. சால்பு | - | நிறை பண்பு |
| 4. துப்பு | - | பற்றுக்கோடுகள் |
| 1. மடவார் | - | அறிவிலிகள் |
| 2. ஓரால் | - | நீக்குதல் |
| 3. பொன்றும் | - | அழியும் |
| 4. விருந்து | - | புதியதாய் வந்தவர் |
| 1. செறுவார் | - | பகைவர் |
| 2. ஒட்பம் | - | அறிவுடைமை |
| 3. உய்ப்பது | - | செலுத்துவது |
| 4. பேதைமை | - | அறிவு இன்மை |
| 1. ஒல்காமை | - | தளராமை |
| 2. விழுமம் | - | துன்பம் |
| 3. திண்ணியர் | - | வலியர் |
| 4. வீறு | - | சிறப்பு |

8. **புலவர்** — **இயற்றியநூல்**

| | | |
|---|---|---|
| 1. இளங்கோவடிகள் | - | சிலப்பதிகாரம் |
| 2. திருத்தக்க தேவர் | - | சீவக சிந்தாமணி |
| 3. நாதகுத்தனார் | - | குண்டலகேசி |
| 4. சீத்தலைச் சாத்தனார் | - | மணிமேகலை |

9. **நூல்** — **ஆசிரியர்**

| | | |
|---|---|---|
| 1. இராசராசசோழனுலா | - | ஒட்டக்கூத்தர் |
| 2. திருவேங்டத்தந்தாதி | - | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |
| 3. மதுரைக்கலம்பகம் | - | குமரகுருபர் |
| 4. முக்கூடற்பள்ளு | - | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| 1. குயில்பாட்டு | - | பாரதியார் |
| 2. அழகின் சிரிப்பு | - | பாரதிதாசன் |
| 3. துறைமுகம் | - | சுரதா |
| 4. பால்வீதி | - | அப்துல் ரகுமான் |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

10. **பாடல்** **கவிஞர்**

1. புத்தகசாலை - பாரதிதாசன்
2. தீக்குச்சிகள் - அப்துல் ரகுமான்
3. சிக்கனம் - சுரதா
4. காடு - வாணிதாசன்

11. **சொல்** **பொருள்**

1. சுவடி - நூல்
2. வெய்யோன் - கதிரவன்
3. செட்டு - சிக்கனம்
4. சிந்தை - உள்ளம்
1. தேவாரம் - சுந்தரர்
2. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
3. இரட்சணிய யாத்திரிகம் - கிருஷ்ணப்பிள்ளை

13. **நூல்** **சமயம்**

1. மணிமேகலை - பௌத்தம்
2. நீலகேசி - சமணம்
3. இரட்சணிய யாத்திரிகம் - கிறித்தவம்
4. சீறாப்புராணம் - இசுலாம்

**வல்லின மெய்களை நீக்கி எழுது.**

1. மாதவிப் என்றப் புலவர் மணிமேகலைத் துறவு என்றேப்
2. பேதையர்ச் பத்த்ர்ச் என்றார்க் என்றுச் சஞ்சீவிபர்வத்ச் சாரல்
3. பாஞ்சாலிக் கண்ணாக் என்றுக்
4. வாழ்கத் தமிழ் அவனாச் அறிந்துச்
5. நீரோச் எதுக் உண்டுச் செல்வேன்
6. வளர்ப்பிறை சுடுச்சோறு காய்க்கறி
7. சோறுக் கொதிக்கிறது போத்தம்பி சென்றுப் பார்த்தான்
8. என்னோடுப் போந்த
9. விடிக்காலை
10. வெண்ணிலாக் கலகலவென்றுச்
11. குபுக்குபு வென்றுப்
12. துறவிக்குடிலுக்குள் வந்தச் சிறுவர் இரண்டுப்பேர்
1. செல்வச் சிறுமீகாள் நீராடப்
2. வெந்தயச் செடிகளின் தங்கப் பூக்கள்
3. கொத்தித் திரியும் அந்தக் கோழி
4. கிட்டப் போனால் முட்டப் பகை
5. சாரைப் பாம்பு குருவிக், கூட்டில்
6. செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தம் கடமை எனக் கருதினர்.
7. சீத்தலைச், சாத்தன்
8. வேட்டுவப் பெண்கள் விளையாடப்
9. நடத்தாப், பாடம் எந்தக், கேள்வியும்
10. பயிலாப் பகுதி எழுதத் தெரிய
11. எழுதிப் பழக, எனக்குச் சொன்னார்
12. அந்தச் சிறுவன் எந்தப் பள்ளியில் படித்துச் சிறந்தான்.
13. ஓடக் காண்பது -ஒடுங்கக் காண்பது

**பண்புத்தொகை**

('மை' என்னும் பண்பு விகுதியும் 'ஆகிய' 'ஆன' என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வரும்)

| | |
|---|---|
| கூர்ம்படை | ஆருயிர் |
| அருந்துயர் | நல்லுரை |
| நெடுந்தேர் | பேரிஞ்சி |
| முதுமரம் | பேரறிவு |
| பசுங்கால | கடுந்திறல் |
| பச்சூன் | பெருங்களிறு |
| பைந்நிணம் | பெருங்களிறு |
| வெஞ்சினம் | வெஞ்சுடர் |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | |
|---|---|
| தண்குடை | பேரிடி |
| கருமுகில் | சேவடி |
| கடும்பகை | பெருந்தவம் |
| நெடுந்தகை | செந்தமிழ் |
| கருங்காக்கை | வெண்தயிர் |
| செங்கோல் | செந்நெல் |
| | செழும்பொன் |

**வினைத்தொகை (காலம் கரந்த பெயரெச்சம்)**

| | |
|---|---|
| திருந்துமொழி | ஈர்வளை |
| திரைகவுள் | முதிர் மரம் |
| உயர்சினை | உயர் மரம் |
| ஒழுகுநீர் | பொங்குதாமரை |
| புனைகலம் | நிறைமதி |
| அலைகடல் | அகல் முகில் |
| படர் முகில் | விரிநகர் |
| சுடர் ஒளி | உயர் எண்ணம் |
| களிநடம் | செய்குன்று |
| தாழ்பிறப்பு | உறை வேங்கடம் |

**அடுக்குத் தொடர் (இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும் : பிரித்தால் பொருள் தரும்)**

| | |
|---|---|
| தினந்தினம் | இனிதினிது |
| வாழிய வாழிய | சுவைசுவை |
| யார் யார் | புடை புடை |
| விக்கி விக்கி | அறைந்தறைந்து |
| துறை துறையாய் | |

**உரிச்சொல் தொடர் / உரிச்சொற்றொடர் (சால, உறு,தவ, நனி, கூர், கழி, கடி, தட, மா, வை, விழு ஆகிய சொற்கள் முதலில் வரும்)**

| | |
|---|---|
| கடிமகள் | வைவாள் |
| மாஞாலம் | வைவேல் |
| மாமலை | தடந்தோள் |
| மாமணி | மாமதுரை |
| மாவலி | மாமதி |

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
**('ஆ' என்ற ஓசை இறுதியில் வரும்)**

இன்னாச் சொல்
அழிக்கலாகா
எற்றா
கதுவிடா
அவியா மதிவிளக்கு
தமிழிலிலாப் பிறமொழி நூல்

**ஒரு பொருட்பன்மொழி**

ஓங்கியுயர், சொற்பதம் வல்விரைந்து

**எண்ணும்மை ('உம்' என்ற சொல் வெளிப்பட்டு வரும். எண்ணிக்கைகள் போல் அமையும்)**

வையகமும் வானகமும்
மலர்தலும் கூம்பலும்
தந்தைக்கும் தாய்க்கும்
பேரோடும் புகழோடும்
வாயிலும் மாளிகையும்
கங்கையும் சிந்துவும்
விண்ணிலும் மண்ணிலும்
மாடமும் ஆடரங்கும்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஈசனும் போதனும்

**உவமைத் தொகை**
**(இரு சொற்களுக்கிடையே போல, போன்ற உவம உருபு மறைந்து வரும்)**
பொன்னடி, மலரடி, தாமரைக் கண்கள்

**வியங்கோள் வினைமுற்று**
**(க, இய, இயர், அல் இவற்றைக் கொண்டு முடியும்)**
வாழிய, செய்க, எள்ளல்
மறவற்க }
துறவற்க } எதிர்மறை வியங்கோள் வினைமுற்று

**உருவகம் (பொருள் முன்னும் உவமை பின்னும் வரும்)**
கண்ணீர் வெள்ளம், மதிவிளக்கு, பசிக்கயிறு, கைம்மலை, பொற்கரை, தங்கத் திமிங்கலம், தங்கத்தோணி

**கோள் - முதல் நிலைத் திரிந்த தொழிற்பெயர்**

| | | |
|---|---|---|
| காளை | - | உவமையாகு பெயர் |
| அறன் | | கடைப்போலி |
| வாழ்த்துவம் | - | தம்மைப் பன்மை வினைமுற்று |

**சொல்லிசை அளபெடை**
(‘ இ’ என்ற எழுத்து இறுதியில் வரும் ) ஒரீ இ, தழீ இ, செலீஇய, தீதொரீஇ

**இன்னிசை அளபெடை**
(றூஉ, தூ உ -அளபெடுக்கும் தாங்குறூஉம், வளர்க்குறூஉம்)

**இசைநிறைஅளபெடை (அல்லது)**
செய்யுளிசை அளபெடை (‘ இ’ தவிர மற்ற எழுத்துக்கள் அளபெடுக்கும்) படூஉம், கடாஅயானை

**ஆறாம் வேற்றுமைத்தொகை**
(6 ஆம் வேற்றுமை உருபு ‘அது’ மறைந்து வரும்)
புல் நுனி, கயன்முள், மனத்திட்பம், கைவயம், மெய்வயம், மால்கழல், களிற்று மருப்பு, தாபதர் உள்ளம்

| | |
|---|---|
| கன்னி பாலன் என் மகன் | நான்காம் வேற்றுமைத் தொகை |
| பகலுறை இற்பிறப்பு | ஏழாம் வேற்றுமைத் தொகை |
| பதத்துணை | ஐந்தாம் வேற்றுமைத் தொகை |

**வினையாலணையும் பெயர்**
(தொழில் செய்த கருத்தாவைக் குறிக்கும்) தெரிவார், கூடினர், வந்தவர், கேட்டனர், அஞ்சினர், துறந்தார்)

**இருபெயரொட்டுப் பண்புத் தொகை**
கைதலம், அன்புநெறி, மெய்ப்பொருள்

| | | |
|---|---|---|
| தருதல் | - | தொழிற்பெயர் |
| முற்றும்மை | - | யாரும், எழுபிறப்பும், யாரையும் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. வாழிய - வாழ் + இய
   வாழ் - பகுதி, இய- வியங்கோள் வினைமுற்று விகுதி
2. செய்க - செய் + க
   செய் - பகுதி, க - வியங்கோள் வினைமுற்று விகுதி
3. பூட்டி - பூட்டு + இ
   பூட்டு - பகுதி, இ - வினையெச்ச விகுதி
4. எய்தி - எய்து + இ
5. போற்றி - போற்று+ இ
6. ஏந்தி - ஏந்து + இ
7. நோக்கி - நோக்கு +இ
8. தோன்றி - தோன்று + இ
9. துறத்தி - துறத்து + இ
10. இறைஞ்சி - இறைஞ்சு + இ



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இறைஞ்சு - பகுதி இ - வினையெச்ச பகுதி

11. காணீர் - காண் + ஈர்
காண் - பகுதி, ஈர் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி
12. புகலீர் - புகல் + ஈர்
புகல் - பகுதி ஈர்- ஏவல் வினைமுற்று விகுதி
13. ஓம்புமின் - ஓம்பு + மின்
ஓம்பு - பகுதி, மின் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி, த், ட், ற், இன் - இறந்தகால இடைநிலைகள்
கிறு,கின்று, ஆ நின்று - நிகழ் கால இடைநிலைகள் ப், வ், க் - எதிர்கால இடைநிலைகள்
14. அசைத்த -அசை +த் +த் + அ
அசை - பகுதி, த் - சந்தி, த்- இறந்த கால இடைநிலை அ - பெயரெச்சவிகுதி
முழக்கி - முழக்க + இ முழக்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி
15. உதவிய - உதவு+ இ(ன்) + ய்+ அ
உதவு - பகுதி, இன் - இறந்த காலஇடைநிலை, 'ன்' கெட்டது விகாரம், ய் - உடம்படு மெய் சந்தி,
அ - பெயரெச்ச விகுதி
16. நோக்கிய - நோக்கு +இன்+ ய்+ அ
17. முழங்கிய - முழங்கு +இ(ன்) +ய் + அ
18. சுருங்கிய - சுருங்கு+ இ(ன்) +ய்+ அ
19. திறந்து - திற +த்(ந்) +த் + உ
திற - பகுதி, த்- சந்தி 'ந்' ஆனது விகாரம், த் - இறந்த கால இடைநிலை உ- வினையெச்ச விகுதி
20. ஒழித்து - ஒழி +த்(ந்) +த்+ உ
21. திறந்த - திற+ த்(ந்)+ த் + அ
திற - பகுதி, த் - சந்தி. ந் ஆனது விகாரம் த்-இறந்த கால இடைநிலை அ - பெயரெச்ச விகுதி
22. மணந்த - மண +த்(ந்) +த்+ அ
23. இழந்த - இழ +த்(ந்) +த்+ அ
24. அறைதல் - அறை +தல்
அறை- பகுதி, தல் - தொழிற்பெயர் விகுதி
25. வாழ்த்துவம்+ வாழ்த்து+ வ்+ அம்
வாழ்த்து - பகுதி , வ் - எதிர் கால இடைநிலை, அம் -தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
26. ஆற்றீர் - ஆற்று+ ஆ +ஈர்
ஆற்று - பகுதி, ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி
27. பெய்த - பெய் + த் + அ
பெய் - பகுதி, செய்த - செய் +த்+ அ த்- இறந்த கால இடைநிலை, அ- பெயரெச்ச விகுதி
28. தருகுவென் - தா (தரு)+ கு+ வ் +என்
தா - பகுதி, தரு எனத் திரிந்தது கு - சாரியை, வ் - எதிர்கால இடைநிலை,
என் -தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
29. ஈன்ற - ஈன்+ ற்+ அ
ஈன் - பகுதி, ற் - இறந்தகால இடைநிலை, அ - பெயரச்ச விகுதி
30. வந்தனன் - வா (வ)+ த் (ந்)+ த் +அன் +அன்
வா - பகுதி, 'வ' எனக் குறுகியது விகாரம் த் - சந்தி 'ந்'ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை,
அன் - சாரியை, அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி
31. தூற்றும் - தூற்று +உம்
தூற்று - பகுதி, உம் -பெயரெச்ச விகுதி
32. தேடுகிறாய் -தேடு + கிறு +ஆய்
தேடு - பகுதி , கின்று - நிகழ் கால இடைநிலை ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
33. புனைந்தோம் - புனை+ த்(ந்)+ த்+ ஓம்
புனை - பகுதி , த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம் , த் - இறந்த கால இடைநிலை
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
34. கேட்ட -கேள்(ட்) + ட்+அ
கேள் - பகுதி ,'ள்' 'ட்'ஆனது விகாரம் ட் - இறந்த கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி
35. உற்ற - உறு (உற்று) +அ
உறு - பகுதி , உற்று என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது அ- பெயரெச்ச விகுதி
36. வைப்பர் - வை +ப் +ப் + அர்
வை - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, அர் - பலர் பால் வினைமுற்று விகுதி
37. விடுவார் - விடு + வ் + ஆர்
விடு - பகுதி, வ் - எதிர் கால இடைநிலை, ஆர் - பலர் பால் வினைமுற்று விகுதி



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

38. காண்பன் - காண்+ ப் + அன்
காண் - பகுதி , ப் - எதிர்கால இடைநிலை, அன் - ஆண் பால் வினைமுற்று விகுதி
39. கொள்வர் - கொள்+ வ்+ அர்
கொள் - பகுதி, வ் - எதிர் கால இடைநிலை அர் - பலர் பால் வினைமுற்று விகுதி
40. இரங்குவிர் - இரங்கு +வ் +இர்
இரங்கு - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை இர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி
41. நீங்காமை - நீங்கு + ஆ + மை
நீங்கு - பகுதி, ஆ - எதிர்மறை இடைநிலை, மை- தொழிற்பெயர் விகுதி
42. செய்தல் - செய் + தல்
செய் - பகுதி தல் - தொழிற்பெயர் விகுதி

**பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக:**

| | | |
|---|---|---|
| சொல் | நானென்று | |
| சொல் பிரிப்பு | நான் + | என்று |
| | நிலைமொழி | வருமொழி |

**புணர்ச்சி விதி:**

"உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி, நிலைமொழியின் ஈற்று மெய்யும் (ன்) வருமொழியின் முதலும் (எ) ( ன் + எ -னெ)எனப் புணர்ந்து, 'நானென்று' என்றானது.

1. மானுழை - மான் +உழை (ன்+ உ - னு)
2. யாருமில்லை - யாரும்+ இல்லை (ம்+ இ -மி)
3. யானெவன் - யான் + எவன் (ன் + எ - னெ)
4. அறனல்ல - அறன் +அல்ல ( ன் +அ -ன)
5. பகலுறை - பகல் + உறை ( ல்+ உ-லு)
6. உயிருண்டு - உயிர்+ உண்டு ( ர்+ உ - ரு)
7. தமிழிலிலா - தமிழில் + இலா ( ல்+ இ - லி)
8. தமிழன்னை - தமிழ் + அன்னை (ழ்+ அ- ழ)
9. வானாளும் - வான்+ஆளும் ( ன்+ ஆ - னா)
10. பம்பரமாகி - பம்பரம் +ஆகி ( ம்+ ஆ - மா)
11. குருகுமுண்டு - குருகும்+ உண்டு ( ம்+உ - மு)
12. இவர்களிடம் - இவர்கள்+ இடம் (ளி)
13. எண்ணமெல்லாம் - எண்ணம் + எல்லாம் ( ம் +எ- மெ)
14. இருளறுத்திடும் - இருள் + அறுத்திடும் ( ள் + அ- ள)

முதுமரம் - முதுமை +மரம்
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி , நிலைமொழியின் இறுதியிலுள்ள (மை) விகுதி கெட்டு ,முது +மரம் முதுமரம் என்றானது.
முள்ளிலை - முள்+ இலை முள்ள் + இலை -முள்ளிலை
தன்னுயிர் - தன் + உயிர் தன்ன் + உயிர் - தன்னுயிர்
கண்ணுடையார் - கண் + உடையார், கண்ண் + உடையார் - கண்ணுடையார்

1. கருமுகில் - கருமை +முகில்
2. எண்பொருள் - எண்மை +பொருள்
3. செம்பொன் - செம்மை +பொன்

1. பூங்கொடி - பூ+ கொடி
'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' என்னும் விதிப்படி, வருமொழியின் முதலிலுள்ள ககரத்திற்கு (க்) இனமான மெல்லினம் (ங்) மிகுந்து, 'பூ+ ங் +கொடி - பூங்கொடி' என்றானது.
2. பூஞ்செடி - பூ+ செடி (ச் - ஞ்)
3. பூஞ்சோலை - பூ+ சோலை ( ச்- ஞ்)
4. பூங்கொடியாள் - பூ+கொடியாள்

1. திருக்குறள் - திரு+ குறள்
'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, வருமொழியின் முதலில் உள்ள வல்லினம்(க்) மிகுந்து , திரு + க்+ குறள் திருக்குறள் என்றானது.
2. வினைத்திட்பம் - வினை +திட்பம்
3. வளைத் தோளி - வளை+ தோளி
4. தீக்குச்சி - தீ+ குச்சி
5. மதிக்குடை - மதி+ குடை
6. பத்தினிப்பெண்டிர் - பத்தினி+ பெண்டிர்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

7. மழைக்கண்ணீர் - மழை+ கண்ணீர்
8. மணிக்கழுத்து - மணி+ கழுத்து
விண்ணிடி - விண் + இடி
'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' விண்ண்+ இடி என ஆனது. 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி (ண்+ இ - ணி) 'விண்ண் இடி- விண்ணிடி' என ஆனது.
1. நன்றன்று - நன்று + அன்று
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் என்னும் விதிப்படி, நிலைமொழியின் இறுதியிலுள்ள உகரம் (று+ ற் +உ) கெட்டு 'நன்ற்+ அன்று' என ஆனது 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது' இயல்பே என்னும் விதிப்படி ( ற் + அ -ற)எனப் புணர்ந்து, 'நன்றன்று' என்றானது.
கு,சு,டு, து, பு, று - குற்றியலுகர எழுத்துக்கள் உக்குறள் - குற்றியலுகரம்
2. மாசற்றார் - மாசு+ அற்றார் (சு - ச்+ உ) மாச் + அற்றார்- மாசற்றார்
3. சிலம்பொன்று - சிலம்பு+ ஒன்று (பு - ப் +உ) சிலம்ப் + ஒன்று - சிலம்பொன்று
4. வண்டினம் - வண்டு + இனம் (டு -ட்+ உ) வண்ட்+டி + இனம் - வண்டினம்
5. வரகரிசி - வரகு +அரிசி
(கு - க்+ உ) வரக் + அரிசி -வரகரிசி
6. அன்புடை - அன்பு + உடை
(பு - ப் +உ) அன்ப் + உடை - அன்புடை
7. கருத்தோடிசைத்து - கருத்தோடு+ இசைத்து
(டு-ட்+ உ) கருத்தோட் + இசைத்து - கருத்தோடிசைத்து
8. ஒன்றெனப்ப - ஒன்று+ எனப்ப (று - ற் உ) ஒன்ற் + எனப்ப - ஒன்றெனப்ப
9. விளக்கேற்றி - விளக்கு +ஏற்றி (கு - க் + உ) விளக்க்+ ஏற்றி- விளக்கேற்றி
10. வீறெய்தி - வீறு +எய்தி (று - ற்+ உ) வீற்+ எய்தி - வீறெய்தி
11. கற்பெனும் - கற்பு +எனும் ( பு -ப்+உ) கற்ப் +எனும் -கற்பெனும்
12. வண்டுறை - வண்டு உறை ( டு +ட்+ உ) வண்ட்+ உறை- வண்டுறை
13. விருந்தொரால் - விருந்த்+ ஒரால் (து -த் + உ) விருந்த + ஒரால் -விருந்தொரால்
14. செத்தொழியும் - செத்து + ஒழியும் (து - த் + உ)- செத்த்+ ஒழியும் - செத்தொழியும்
15. செருக்கெழ - செருக்கு +எழ(கு -க் + உ)செருக்க் + எழ - செருக்கெழ
1. அருந்துயர் - அருமை+ துயர்
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி,'மை' விகுதி கெட்டது. அரு+ துயர் 'இனம் மிகல்' என்னும் விதிப்படி 'வருமொழி முதலில் உள்ள தகரத்திற்கு (த்) இனமான மெல்லினம் நகரம் (ந்) மிகுந்து அரு+ ந்+ துயர் - அருந்துயர் என்றானது.
வல்லினம் : க், ச், ட், த், ப், ற்,
மெல்லினம்: ங், ஞ், ண், ந், ம், ன்
2. கருங்கல் - கருமை +கல் கரு+ ங்+ கல்
3. பெருந்தெய்வம் - பெருமை +தெய்வம் பெரு+ ந்+ தெய்வம் -பெருந்தெய்வம்
4. பெருங்களிறு - பெருமை +களிறு பெரு +ங் +களிறு-பெருங்களிறு
5. கடுந்திறல் - கடுமை+ திறல் கடு +ந்+ திறல் - கடுந்திறல்
6. கூர்ம்படை - கூர்மை+ படை கூர் + ம் +படை - கூர்ம்படை
7. இருஞ்சிரம் - இருமை+ சிரம் இரு+ ஞ் +சிரம் - இருஞ்சிரம்
8. செழும் பொன் - செழுமை+ பொன், செழு+ ம்+ பொன் - செழும்பொன்
9. நெடுங்குவடு - நெடுமை+ குவடு, நெடு + ங்+ குவடு- நெடுங்குவடு
10. இரும்பொறை - இருமை+ பொறை, இரு +ம் +பொறை- இரும்பொறை
11. கடும்பகை - கடுமை+ பகை, கடு + ம்+ பகை -கடும்பகை
12. பெருந்தேர் - பெருமை+ தேர், பெரு+ ந் +தேர் - பெருந்தேர்

**செய்யுள் வரி - வினா விடைகள்:**

"நெடுந்தேர் ஊர்மதி வலவ "
முழந்தன்று அம்ம நாம முன்னிய வினையே
1.இவ்வடி பயின்றுள்ள நூல் அகநானூறு
2. இதனைப் பாடியவர் மதுரை...... மள்ளனார்
3. வலவ -பொருள் தேர்ப்பாகன் புரவி - குதிரை
4. இதிலுள்ள திணை முல்லலைத் திணை
5. தலைமகன் தேர்ப்பாகற்குச்சொல்லியது

"பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ"
1. இடம் பெற்ற நூல் ஐங்குறுநூறு



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

2. பாடலின் ஆசிரியர் ஓதலாந்தையார்
3. இது நற்றாய் கூற்றாக உள்ளது
4. பச்சூன் - பசிய ஊன் / பசுமையான மாமிசம்
5. நற்றாய் காக்கையிடம் வேண்டியது
6. வல்சி - உணவு

" வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"

7. அஞ்சிலோதி - தலைவி / தலைமகள்
8. காளை - தலை மகன்

"யாருமில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"

1.இடம் பெற்ற நூல் குறுந்தொகை
2. பாடியவர் கபிலர்
3.கள்வன் -தலைவன்
4. வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழியிடம் கூறியது
5. பொய்ப்பின் - சூளுரை

"ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே"

6. ஒழுகு நீர் - ஓடுகின்ற நீர்
7. ஆரல் - ஆரல் மீன்
8. குருகு - நாரை

"வெறுங்கை என்பது மூடத்தனம் -உன்
விரல்கள் பத்தும் மூலதனம் !"

1. கவிதை வேலைகளல்ல வேள்விகளே !
2. இதைப் பாடியவர் தாராபாரதி
3. மூலையில் முடங்கிக் கிடக்கும் வாலிபனை நோக்கிப் பாடுகிறார்
4. விரல்கள் பத்தும் மூலதனம்
5. வெறுங்கை என்பது மூடதனம்

" தோல்விகள் ஏதும் உனக்கில்லை - இனித்
தொடுவா னம் தான் உன் எல்லை"

6. கவிதைத் தொகுப்பு நூல்

' இது எங்கள் கிழக்கு'

7. எல்லையாக இருப்பது தொடுவானம்
8. உனக்கு - இன்றைய இளைஞர்கள்
9. தொழில் செய்ய நம்மிடம் எதுவுமில்லை என்று சொல்வது மூடத்தனமாகும்.

பத்து விரல்களால் வருகின்ற உழைப்பே
'உழைப்பே' நமக்கு மூலதனமாகும். இதுவே பாடல்வரிகள் உணர்த்தும் கருத்து

"கடமை புரிந்தான் இவனே"

1. நூலின் பெயர் -பாண்டியன் பரிசு
2. பாடலாசிரியர் - பாரதிதாசன்
3. இதைக் கூறியவர் ஆத்தாக்கிழவி
4. அன்னத்திடம் கூறினார்
5. வெள்ளத்திலிருந்தும் வேழநாட்டு மறவரிடமிருந்தும் அன்னம் காப்பாற்ற பட்ட போது கூறினார்.

" வாய்த்தீரே மானத்தை உயிரைக் ........"

6. இதனைக் கூறியவர் அன்னம்
7. ஆத்தாவின் மகன் வேலனிடம் கூறினாள்
8. கடமை புரிந்தவன் வேலன்.

" நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோமபுமினது தான்

1. இடம் பெற்ற நூல் புறநானூறு
2. பாடலாசிரியர் நரிவெரூஉத் தலையார்
3. ஓம்புமின் தவிர்த்து விடுவீர் (தீயது செய்தலை)
4. ஆற்றீராயினும் எது? நல்லது செய்தல்
5. கணிச்சி- மழுவாயுதம்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

6. வயது முதிர்ந்த சான்றோர்களைப் பற்றிக் கூறுகிறது.
7. கயன்முள் - நரைமுடிக்கு உவமை
8. திரைகவுள் - சுருங்கிய கன்னம்

"வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே"

1. இடம் பெற்ற நூல் நற்றிணை
2. ஆசிரியர் - நக்கண்ணையார்
3. தோழி, தலைவனை நோக்கிக் கூறியது
4. சின்னாள் - சிலநாள்
5. 'நற்கறிந்தனை சென்மே' - நன்கு அறிந்து கொண்டு செல்வாயாக

"எதிர்ந்த அவ் வரக்கனை வென்றால்
ஆங்கு நான்அவற்கு என் மகள் .........."

1. இடம் பெற்ற நூல் - தேம்பாவணி
2. அரக்கன்- கோலியாத்து
3. பாடலாசிரியர் - வீரமாமுனிவர்
4. நான் - சவுல் மன்னன்
5. இஸ்ரயேல் மக்களை எதிர்த்தான்/ அசனி - இடி

| | | |
|---|---|---|
| சீர்முகத்து இளவல் | - | இளையோன் தாவீதன் |
| மதயானை | - | கோலியாத்து பலமளிப்பவர் - கடவுள் |
| வல்கையோடு | - | இறைவனுடைய வலிமையான கரங்களோடு |

"வண்டுறை ஓதியும் வலியள்"

1. நூல் - கம்பராமாயணம்
2. ஆசிரியர் - கம்பர்
3. வலியள் - சீதை
4. மற்றிவன் -அனுமன்

" அண்டர் நாயக இனித்துறத்தி", கூறியவர் - அனுமன் அண்டர் நாயகன் - இராமர்
"திங்களொன் றிருப்பன் ............" கூறியவர் - சீதை அனுமனிடம் கூறினார்
மலரடி சென்னி வைத்தாள் - சீதை

மண் குளிரச் செய்யும் மறவேல்.........."

1. நூல் -சிலப்பதிகாரம்
2. ஆசிரியர் - இளங்கோவடிகள்
3. கூறியவர்-மதுரை மாநகர மக்கள்
4. 'தண்குடை' -பாண்டிய மன்னன் உடையது.

'காதற் கணவனைக் ...........' காதற் கணவன் -கோவலன் ஈதொன்று - இஃது ஒரு புதுமை
" ......... வெய்யோன் , திங்கள் உப்புக வொண்ணாத் தூய மரகதக் கோட்டை காடே!"

1. பாடலின் தலைப்பு 'காடு'.
2. ஆசிரியர் கவிஞரேறு வாணிதாசன்
3. வெய்யோன் - கதிரவன்
4. இடம் பெற்ற நூல் 'எழிலோவியம்'

தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் <u>கவிஞரேறு வாணிதாசன்</u> தம்பிரான் தோழர் சுந்தரர் அழகிய மணவாள தாசர் <u>பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்</u> பாராய்க்கடன் உரைக்கல் வேண்டிக்கோடன்

**திணை & துறை விளக்கம்**

1. பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்குக.

முனிவரும் அவரைப் போன்றவரும் இம்மை மறுமைகளில் உயிருக்கு உறுதியைத் தருவது இன்னது என்று தாம் தெளிவாய் அறிந்த பொருளைச் சொல்வது 'பொருண்மொழிக் காஞ்சி' என்னும் துறையாகும்.

' எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந் தன்று' - புறப்பொருள் வெண்பா மாலை

சான்று:

பல்சான் றீரெ பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அல்லது செய்த லோம்புமி னது தான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. - நரிவெரூஉத்தலையார்

விளக்கம் : இப்புறநானூற்றுப் பாடல் மூலம், மனித வாழ்க்கை நிலையில்லாதது. எனவே, உயிருடன் வாழும் போதோ நல்லனவற்றைச் செய்தல் வேண்டும். அஃது இயலாதாயின் தீமைகள் செய்வதைக் கைவிட வேண்டும். அதுவே எல்லாரும் விரும்புவது மட்டும் அல்லாமல், மறுமையில் நற்கதி சேர்க்கும் வழியாகவும் அமையும் என உலகிற்கு நிலையான உண்மைப் பொருளை வற்புறுத்திக் கூறியதால் 'பொருண்மொழிக் காஞ்சி' என்னும் துறை ஆயிற்று.

2. பொதுவியல் திணையை விளக்குக.
வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும், அந்தத் திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது 'பொதுவியல் திணை' ஆகும்.
சான்று:
'பல்சான் றீரே ......' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.
விளக்கம் : இப்பாடல் மூலம் ............. என உலகிற்குப் பொதுவான செய்திகளையும் நீதியையும் உணர்த்துவதால் பொதுவியல் திணைக்குச் சான்றாயிற்று.

3. குறிஞ்சித் திணை - விளக்குக.
முதற்பொருள் திணை என்பதற்கு 'மக்கள் ஒழுக்கம்' என்பது பொருள்
நலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.
நிலம் - மலையும் மலை சார்ந்த இடமும்
பெரும்பொழுது - குளிர்காலம் முன்பனிக்காலம்
சிறுபொழுது - யாமம்

**கருப்பொருள்:**
தெய்வம் - முருகன்
மக்கள் - குறவர், குறத்தியர்
நீர் - சுனைநீர், அருவிநீர்
உணவு - திணை, மலை நெல்
உரிப்பொருள்: புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
சான்று:
" யாரு மில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டு தான் மணந்த ஞான்றே" - கபிலர்

விளக்கம் :தலைவன் சூளுரை கூறிய பொழுது, சாட்சி கூறுவதற்கு இயலாத நாரை மட்டுமே இருந்தது. அதுவும் தன் உணவான ஆரல் மீனின் வருகையையே கூர்ந்து நோக்கியிருந்தது. 'இனி நான் என்ன செய்வேன்' என்று தலைவி தோழியிடம் வருந்திக் கூறினாள்.
பொருத்தம்: இச்செய்யுளில், குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களுள் உணவாகிய தினையும், சுனைநீர், அருவிநீர் வழிந்து ஓடுகின்ற நீர் ஆகியவை வந்துள்ளதால் குறிஞ்சித் திணைக்குச் சான்றாயிற்று.

4. முல்லைத் திணையை விளக்குக.
<u>முதற்பொருள்:</u>
நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்
பெரும்பொழுது - கார்காலம்
சிறுபொழுது - மாலை
<u>கருப்பொருள்</u> :
தெய்வம் - திருமால்
மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்
பூ - முல்லை, பிடவம், தோன்றி
பண் / யாழ் முல்லைப் பண் - முல்லை யாழ்
உரிப்பொருள்: இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
சான்று:
பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
வண்டினந் தவிர்க்கும் <u>தண்பதக் காலை</u>



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு
இனிது கொல் வாழி தோழி ! .... என்ற
......... அருந்துய ருடையள்
மதுரை ........ மன்னரின் அகநானூற்றுப் பாடல்

விளக்கம் : முல்லை அரும்புகள் மலர்ந்து, மணம் வீசி, வண்டுக் கூட்டம் வேற்றிடம் செல்லாது தடுத்துக்கொண்டிருக்கும் கார்காலமும் வந்து விட்டது. தாம் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைவர் கார்காலத்தில் திரும்பி வரவில்லை. மாலைக் காலத்துத் தலைவனின் வருகையை எதிர்பார்த்துத் தலைவி, வீட்டில் தனித்துத் துயருடன் ஆற்றியிருக்கிறாள்.

பொருத்தம்:

முல்லைப்பூ - கருப்பொருள் தண்பதக்காலை - கார்காலம் (முதற்பொருள்) -பெரும்பொழுது தலைவன் வருகைக்காகத் தலைவி வீட்டில் காத்திருத்தல் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் - உரிப்பொருள். இத்தகைய முல்லை திணைக்குரிய செய்திகள் வந்துள்ளதால்,‘ பசைபடு’ எனத் தொடங்கும் பாடல், முல்லைத் திணைக்குச் சான்றாயிற்று.

**அணிவிளக்கம்:**

1. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

அணி இலக்கணம் : ஒருசெய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் அமைந்து, போல, போன்ற முதலான உவம உருபுகளைப் பெற்று வருவது ‘உவமை அணி’ எனப்படும்.

சான்று:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

உவமை : அகழ்வாரைத் தாங்கும் நிலம்
உவமேயம் : தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை
உவம உருபு : போல

விளக்கம் : பூமியானது தன்மீது நின்று கொண்டு தன்னைத் தோண்டுபவரையும் விழாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. அது போல, தமக்குக் குற்றமானவற்றைச் செய்து, தம்மை அவமதிப்பவரையும் தம்மை இகழ்ந்து பேசுபவரையும் பொறுத்துக் கொள்ளுதல் தலை சிறந்த பண்பு ஆகும்.

கோறல் - கொல் + தல்
கொல் - பகுதி, ‘கொ’,‘கோ’ என நீண்டது விகாரம் தல்- தொழிற்பெயர் பகுதி

2. எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

அணி இலக்கணம்:

ஒரு செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் அமைந்து, போல, போன்ற முதலான உவம உருபுகள் மறைந்து வருவது ‘எடுத்துக்காட்டு’ உவமையணி எனப்படும்.

சான்று:

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

உவமை : இன்மையுள் இன்மை மடவார்ப் பொறை இடையில் ‘போல’ என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது
விளக்கம் : தம்மை நாடி வரும் விருந்தினரை உபசரிக்க இயலாமல் தவிர்க்கும் நிலை, வறுமைக்குள் கொடிய வறுமை ஆகும். அதுபோல, அறிவிலார் செய்யும் தீங்குகளைத் தண்டிக்கும் வலிமை தனக்கு இருந்தும் தண்டிக்காமல் பொறுத்தலே வலிமைக்குள் சிறந்த வலிமை ஆகும்.

3. சொற்பொருள் பின்வரு நிலை அணியைச் சான்றுடன் விளக்குக.

அணி இலக்கணம் : ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தருமாயின், அது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

சான்று:

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

விளக்கம்: இக்குறட்பாவில் , ‘உதவி’ என்னும் சொல் பலமுறை வந்து, உபகாரம் என்னும் ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

4. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

அணி இலக்கணம் :

தன்+ குறிப்பு +ஏற்றம் - தற்குறிப்பேற்றம் இயல்பாக நிகழும் நிகழச்சியின் மீது கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

சான்று:

செம்பொற்கொடி அனையாள் கண்டாளைத் தான் காணான்
மல்லம்மா ஞாலம் இருள் ஊட்டி, மாமலைமேல்,
செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப் - இளங்கோவடிகள்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

விளக்கம் : மாலைப் பொழுதில் சூரியன் தன் கதிர்களைச் சுருக்கி மறைதல் இயல்பான நிகழ்ச்சியாகும். ஆனால், கண்ணகி தன் கணவனாகிய கோவலனை இழந்து உற்ற துன்பத்தினையும் அவள் பலவாறு கூறிப் புலம்பி அழுததையும் கதிரவன் காணப் பொறாமல் தன் செங்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்கு மலையில் சென்று மறைந்தான் என்று இளங்கோவடிகள் தம் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே , இதில் தற்குறிப்பேற்ற அணி பயின்று வந்துள்ளது.

கொண்ட - கொள்(ண்) + ட்+ அ

கொள் - பகுதி, ள், 'ண்' ஆனது விகாரம், ட் - இறந்தகால இடைநிலை, அ- பெயரெச்ச விகுதி

நிற்பான்- நில்(ற்)+ ப் +ஆன்

நில் - பகுதி, 'ல், ற்ஆனது விகாரம், ப் - எதிர்கால இடைநிலை ஆன் -ஆண்பால் வினைமுற்று விகுதி

ஏகுவாய் - ஏகு+ வ்+ ஆய்

ஏகு - பகுதி வ்- எதிர்கால இடைநிலை, ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**1. 'செய்ந்நன்றியறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

வையகமும் வானகமும் ஒப்பாகா:

1. நாம் ஓர் உதவியும் செய்யாது இருக்கும் நிலையில் ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு இம்மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒப்பாகா.

நில உலகத்தை விடப் பெரியது

2. ஆபத்துக்காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச் சிறியதாய் இருந்தாலும் அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்போது இந்நில உலகத்தை விட மிகவும் பெரியதாகும்.

கடலின் பெரியது:

3. பயனை எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் சிறப்பை ஆராய்ந்து பார்த்தால், அது கடலினும் பெரியதாகும்.

செய்நன்றிஅறிவாரின் இயல்பு :

4. ஒருவர் திணை அளவு மிகச் சிறிய உதவியைச் செய்தாலும், அதனைப் பனையளவு பெரிதாய் மதித்துப் போற்றுவர், பயன் தெரிவார்.
5. ஒருவர் மற்றவர்க்குச் செய்த உதவி அவ்வுதவியின் அளவைப் பொறுத்தது அன்று;அவ்வுதவியைப் பெற்றவருடைய தகுதி எவ்வளவினதோ அவ்வளவைப் பொறுத்ததாகும்.

மறவற்க துறவற்க:

6. திருவள்ளுவர், குற்றமற்ற நல்லவர் நட்பினை மறத்தல் கூடாது என்கிறார். துன்பம் நேர்ந்த காலத்தில் தமக்கு உதவியாய் இருந்தவர்களின் நட்பைக் கைவிடுதல் கூடாது என்கிறார்.

எழுபிறப்பும் உள்ளுவர்:

7. தமக்கு ஏற்பட்ட துன்பத்தினை நீக்கியவருடைய உயர்ந்த நட்பினை ஏழு வகைப்பட்ட பிறவியலும் மறவாது நினைத்துப் போற்றுவர், சான்றோர் .

மறப்பதும் மறவாததும்:

8. பிறர் செய்த நன்மையை மறப்பது அறமாகாது. அவர்செய்த தீமையை உடனே மறந்து விடுவது அறமாகும்.

நன்றல்லதை மறக்க:

9. கொலை செய்வது போன்ற கொடுமைகளைச் செய்தாலும், அவர் செய்த ஒரு நன்மையை நினைக்க, தீமைகள் எல்லாம் மறைந்து விடும்.

செய்நன்றி மறத்தலின் கொடுமை:

10. எத்தகைய அறங்களை அழித்தவர்க்கும் அப்பாவத்திலிருந்து நீங்க வழியுண்டு. ஆனால், ஒருவன் செய்த உதவியை மறந்தவனுக்கு அப்பாவத்திலிருந்து நீங்கும் வழி இல்லையாம்.

4. வையகமும் வானகமும் ஒப்பாகா எதற்கு?(1)
5. நில உலகத்தை விட மிகப்பெரியது எது?(2)
6. கடலின் பெரியது எது?(3)
7. மறவற்க எனவும் துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?(6)
8. செய்நன்றி மறத்தலின் கொடுமையைக் கூறுக.(10)

**2. 'பொறையுடைமை' என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

பொறையுடைமையின் சிறப்பு:

1. தன்னைத் தோண்டுபவரையும் கீழே விழாமல் தாங்கும் பூமியைப் போலத் தம்மை அவமதிப்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல் தலைசிறந்த அறமாகும்.
2. பிறர் செய்யும் வரம்பு கடந்த குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்தது. அந்தக் குற்றத்தினை மறந்து விடுதல் அதைவிடச் சிறந்தது.
3. வறுமைக்குள் வறுமையாவது வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்க முடியாமையே ஆகும். (அறிவிலார் செய்யும் வரம்பு கடந்த குற்றத்தினைப் பொறுத்துக் கொள்வது வலிமைக்குள் சிறந்த வலிமையாகும்)
4. நற்குணங்கள் நம்மை விட்டு நீங்காதிருக்க வேண்டுமானால், பொறுமை என்னும் குணத்தைப் போற்றிக் காத்தல் வேண்டும்.

பிறர் செய்தன பொறுத்தல்

5. தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார். ஆனால், பொறுத்துக்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துப் போற்றுவர்.

6. தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவர் அந்த ஒரு நாள் மட்டுமே மன நிறைவாகிய இன்பம் எய்துவர். தீங்கு செய்தவரைப் பொறுத்து கொண்டவர்க்கோ உலகம் அழியும் வரை புகழ் உண்டாகும்.
7. செய்யத்தகாத துன்பச் செயல்களைப் பிறர் தனக்குச் செய்தாலும் அதற்காக வருந்தி அறத்திற்கு மாறான செயல்களைச் செய்யாதிருத்தல் நல்லது.
8. செருக்கினால் தமக்குத் தீமை செய்தாரையும் தமது பொறுமையினால் வெற்றி கொள்ள வேண்டும்

கொடுஞ்சொற்களைப் பொறுத்தல்:

9. வரம்புகடந்து பேசுவோரின் கொடிய சொற்களையும் பொறுத்துக் கொள்பவர் பற்றற்ற துறவியினும் மேலானவர் ஆவர்.
10. உண்ணாநோன்பு இருக்கும் பெரியவர்களை விடத் தம்மை இகழ்வோரின் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் மேலானவர் ஆவார்.

4. பொறையுடைமையின் சிறப்பை வள்ளுவர் வழி நின்று விளக்குக. (1,2, 3,4)
5. ஒறுத்தார், பொறுத்தார் குறித்துக் குறள் கூறுவன யாவை? (5,6,7,8)
6. இன்னாச்சொல்லைப் பொறுப்பவர் (9,10)
9. எதனை மறத்தல் எதனினும் நன்று? (2)
10. வன்மையுள் வன்மை எது? (3)
11. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை? (6)
12. யாரைப் பொறையால் வெல்லுதல் வேண்டும்? (8)

**3. ‘அறிவுடைமை’ என்னும் அதிகாரத்தில் தெரிவிக்க பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

அறிவின் சிறப்பு:

1. அறிவு என்பது, ஒருவருக்கு அழிவு நேராமல் முன்னரே அறிந்து காக்கக் கூடிய கருவியாகும். அது மட்டுமன்றி பகைவரால் அழிக்க முடியாத அரணும் ஆகும்.

அறிவின் இலக்கணம்:

2. மனத்தைத் தீய வழிகளிலிருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.
3. எந்தச் செய்தியை எவர் கூறக் கேட்டாலும், அச்செய்தியில் உள்ள உண்மையான பொருளை ஆராய்ந்து காண வல்லதே சிறந்த அறிவாகும்.
4. பிறர் மனம் கொள்ளுமாறு அரிய கருத்துகளை எடுத்துரைப்பதும், பிறர் கூறுவனவற்றுள் நுண்பொருள் காண்பதும் சிறந்த அறிவாகும்.
5. உலகில் அறிவு, ஒழுக்கம் நிறைந்த உயர்ந்தாரோடு நட்புக் கொள்ள வேண்டும். அந்த நட்பில் வளர்தல், தேய்தல் இல்லாமல் எப்பொழுதும் ஒரே நிலையில் இருத்தல் சிறந்த அறிவாகும்.
6. உலகத்தார் எவ்வழியில் நடக்கின்றனரோ அவ்வழியில் தானும் நடப்பதே சிறந்த அறிவாகும்.

அறிவுடையாரது இலக்கணம்:

7. அறிவுடையார், பின்னால் வரப்போவதை முன்பே அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவர் ஆவர். அறிவிலார், பின்னால் வரப்போவதை முன்பே அறிய இயலாதவர் ஆவர்.
8. அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சாமல் வாழ்வது அறியாமை ஆகும். அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்தல்அறிவுடையோர் செயலாகும்.

அறிவுடையார்க்குத் துன்பமில்லை

9. பின்னால் வரக்கூடிய துன்பங்களை முன்னரே அறிந்துகாத்துக் கொள்ளக் கூடிய அறிவுடையார்க்கு, அவர் அஞ்சி நடுங்குமாறு நேரக்கூடிய துன்பம் எதுவுமில்லை.

எல்லாம் உடையவர், ஒன்றுமில்லாதவர்:

10. அறிவுடையார் வேறு எதுவும் இல்லாதவரானாலும் எல்லாச் செல்வங்களையும் உடையவர் ஆவர். அறிவு இல்லாதவர் எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்தாலும் ஒன்றும் இல்லாதவர் ஆவர்.

13. அறிவின் சிறப்பை எழுதுக. (1)
14. அறிவுடையார், அறிவிலார் இயல்பினைச் சுட்டுக. (7)
15. நடுங்க வரும் துன்பம் யாருக்கில்லை?(9)
16. எல்லாம் உடையவர், ஒன்றும் இல்லாதவர் யார் யார்? (10)
17. அறிவின் இலக்கணத்தை எழுதுக. (விடை: 2,3,4,5,6)
18. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறியனவற்றை எழுதுக.(விடை : 7,8)

**4. வினைத்திட்பம் என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ளன யாவை?**

வினைத்திட்பம்:

1. வினைத்திட்பம் என்பது, ஒருவன் எத்தனை இடர்பாடுகள் ஏற்பட்டாலும் கலங்காமல், தான் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்கும் மனவலிமையாகும். பிற, திண்மைகள் என்று சொல்லப்படா.

‘ஆய்ந்தவர் கோள்’:

2. ஒருவர், ஒரு செயலை மேற்கொள்ளும் போது நேரக்கூடிய இடையூறுகளை முன்பே தெரிந்து முயன்று விலக்குதலும், முயன்று தடுத்தும் இடையூறு நேருமாயின் மனம் கலங்காமையும் வினைத்திட்பமுடையார் மேற்கொள்ள வேண்டிய நெறிகளாம்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எற்றா விழுமம் தரும்

3. ஒருவன், தான் மேற்கொண்ட செயலை முடிவிலே புலப்படுமாறு மறைத்துச் செய்ய வேண்டும். அந்தச் செயல் இடையிலே வெளிப்படுமாயின் அது வினை செய்வானுக்கு நீங்காத துன்பத்தைத் தரும்.

எளியவும் அரியவும் ஆவன:

4. செய்து முடித்தற்கு அரிய செயல்களையும் செய்து முடிக்க முடியும் என்று கூறுதல் எல்லோர்க்கும் எளிமையானது ஆகும். ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் மிகவும் அருமையானது ஆகும்.

வினைத்திட்பத்தின் சிறப்பு:

5. எண்ணத்தால் சிறப்பெய்திய, மாட்சிமைப்பட்ட அமைச்சனது வினைத்திட்பம், அரசனுக்குச் சிறப்பை உண்டாக்குமாதலால் அவன் அனைவராலும் மதிக்கப்படுவான்

எண்ணியாங்கு எய்துவார்:

6. ஒரு செயலைச் செய்து முடித்தற்கு உரிய மனத்திட்பம் உடையவர், தாம் எண்ணியவற்றை எண்ணியவாறே செய்து முடிக்க வல்லவர் ஆவார்.

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் :

7. வடிவில் சிறிய அச்சாணி மிகப்பெரிய தேரைச் செலுத்தும். அதுபோல, வடிவில் சிறியவரும் மிகப்பெரிய செயலைச் செய்ய வல்லவர் ஆவர். அதனால், உருவினைக் கண்டு ஒருவரை இகழக் கூடாது.

வினை செய்யும் முறை:

8. வினைத்திட்ப முடையார், தாம் மேற்கொண்ட செயலை மனம் தெளிந்து, துணிந்து, சோர்வில்லாமல், காலம் தாழ்த்தாது விரைந்து செய்தல் வேண்டும்.

9. ஒரு செயலினைச் செய்யும் போது துன்பங்கள் மேன்மேலும் அடுக்கி வந்தாலும் மனம் கலங்காமல் முடிவில் இன்பம் தரும் அச்செயலைத் துணிவுடன் செய்தல் வேண்டும்

உலகத்தால் மதிக்கப்படாதவர்:

10. வினை செய்வதில் மனத்திட்பம் உடையவரையே உலகம் விரும்பிப் போற்றும். வினைத்திட்பம் இல்லாதவர் வேறு எத்தகைய திட்பமுடையவராயினும் அவரை உலகம் விரும்பாது.

9. வினைத்திட்பத்தின் சிறப்பும், அஃது உடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக. (5,6)

10. வினைத்திட்பத்தின் சிறப்பைத் திருவள்ளுவர் எங்ஙனம் காட்டியுள்ளார்? (1,3,5,6,7)

*********

## I. வாழ்த்து II பெருவினா

**அ. இறைவாழ்த்து ஆ. மொழி வாழ்த்து இ. நாட்டுவாழ்த்து**

2. கம்பர் ‘ நன்றே நம்பி குடிவாழ்க்கை’ என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

‘எல்லா மதத்தவரும் இறைவன் ஒருவனே’ என்பதால் கம்பர், ‘ஒன்றே யென்னின் ஒன்றேயாம்’ என்கிறார் எனினும் எல்லாப் பொருள்களிலும் இருப்பதால் ‘பலவே’ என்கிறார். உலகிலுள்ள எப்பொருளைப் போலவும் இறைவன் இல்லை என்றால் இல்லை தான். கதிரவனைப் போலப் பேரொளி கொண்டவனா, நிலவைப் போன்று தண், என்று இருப்பானா, காற்றினைப் போன்று எங்கும் பரவி நிறைந்திருப்பவனா என்றால் ‘ ஆம்’ என்பதால் உண்டு தான். உலகில் இறைவன் இல்லை என்று சொன்னால் இல்லை தான். இறைவன் ‘உண்டு’ என்று சொன்னால் உண்டு தான். இவ்வாறு, பல்வேறுபட்ட தன்மைகளை ஒருங்கே கொண்டவனாய் இறைவன் இருத்தலால், அவனை ‘நன்றே நம்பி குடிவாழ்க்கை’ என்று வியந்து கூறுகிறார் கம்பர். மேலும் இப்படிப்பட்ட இறைவனின் தன்மைகளாகக் கண்டுணர்ந்து, நாம் கடைத்தேறுவதற்கு இறைவனைச் சரணடைவதே சிறந்த வழியாகும் என்று கூறுகிறார் கம்பர்.

3. இறைவாழ்த்துப் பாடலால்அறியலாகும் செய்திகளைக் கூறுக.

இறைவன் ‘ஒருவனே‘ ஆவான் . அவன் உருவமற்றவன். எனினும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றான்.

உருவம், அருவம். அருவுருவம் எனப் பல்வேறு நிலைகளாக இறைவன் திகழ்கின்றான்.

இறைவன் உலகெங்கும் ஒளிரும் பேரொளி மயமானவன்; ‘தண்’ என்றிருக்கும் தன்மை படைத்தவன். தன்னை ‘இல்லை’ என்று கூறுபவரிடத்திலும் இருப்பவன் தன்னை ‘உண்டு’ என்று உரைப்பவனிடம் மறைந்திருப்பவன்.

இத்தகைய இறைவனை நம் மானுடக் கண்களால் காண இயலாது. அருளாலே அவனை அறிய இயலும் .

அவனை நாம் அறிந்து உய்வதற்கு வழி, இறைவனைச் சரண் அடைவது ஒன்று மட்டுமே ஆகும்.

5. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார்?

தமிழ் மக்களின் இளமைப் பருவத்திலே, முதன் முதலாக அவர்களின் நாவைப் பேசுவதற்கு அசைவித்த மொழி, தமிழ் மொழி.

தமிழர்களின் அறிவுக் கண்ணைத் திறந்து உலக நடப்புகளைத் தெளிவாய் எடுத்துரைத்து, அவற்றின் உண்மைகளை அவர்கள் கருத்தொடு பொருந்தச் செய்த மொழி, தமிழ்மொழி.

தமிழர்களின் உள்ளக் கருத்துகளை, சிந்தனைகளை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குக் கருவியாய் ‘நான் இருக்கிறேன்’ என்று சொல்லிக்கொண்டு வந்த திருத்தமான மொழி, தமிழ் மொழி.

பல்வேறு வகைப்பட்ட அயல் மொழிகளைக் கற்பதற்குத் தமிழர்க்கு உதவி புரிந்த வளம் பொருந்திய மொழி, தமிழ்மொழி.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இத்தகைய காரணங்களால், "தமிழன்னையை வாழ்க! வாழ்க! என்று சொல்லி, "தமிழ்தாயின் திருவடிகளைப் பணிந்து வாழ்த்துவோம்" என்று வரதநஞ்சையப்பிள்ளை கூறுகின்றார்.

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்? ஏன்?
" இஃது இந்திய நாடு; இந்த நாடு
எங்களுக்கே உரிமையான நாடு"

என்று நாள்தோறும் இந்தியர் ஒவ்வொருவரும் இந்திய நாட்டினைப் போற்றிப் பாட வேண்டும். இந்திய நாட்டிற்கு உரிமையில்லாத அந்நியர் பலர் இங்கு வந்து, நம்மை அடிமைப்படுத்தி ஆண்டனர். அப்போது இந்தியர் பொறுப்பில்லாமல் தூங்கிக் கிடந்த காலங்கள் கழிந்தன. இந்தியர்களாகிய நம்முடைய வாழ்வு மலர, வந்தவரையும் போனவரையும் நம்பி வாழ்ந்து கொண்டிருந்த காலங்கள் மறைந்து போயின. எனவே, இன்று முதல் இந்தியர் அனைவரும் 'இந்தியா- எங்களுக்கு உரிமையான நாடு' என்னும் எண்ணத்தை மனத்தில் கொள்ள வேண்டும்.

**தொகை நூல்கள் (அ) புறநானூறு (பெருவினா)**

1. புறம்+ நான்கு+ நூறு - புறநானூறு, 'புறம்' எனவும், 'புறப்பாட்டு' எனவும் வழங்கப்படும். எட்டுதொகை நூல்களுள் ஒன்று. வெட்சி முதல் பெருந்திணை முடிய உள்ள புறத்திணைகளுக்குரிய துறைப் பொருள்கள் அமைந்த (400) நானூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் 'புறநானூறு' என்று பெயர் பெற்றது. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். பல்வேறு காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை.

முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள்
சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழுவள்ளல்கள்,
கடைச்சங்கப் புலவர்கள் ஆகியோரின் வீரம், கொடைத்திறம்,
பெருமை முதலானவற்றை புறநானூற்றின் மூலம் அறியலாம்.

சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், போர்த்திறம், பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றியச் செய்திகளைப் புறநானூறு நமக்கு வழங்குகின்றது.

புறநானூறு, "தமிழரின் உயரிய வாழ்வியல்
சிந்தனைகளை விளக்கும் கருவூலம்"

இது தொகுக்கப்பட்ட காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு. இதில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. தமிழ் மீது பற்றுக் கொண்ட ஜி.யு. போப் அவர்கள் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

1. எட்டுத் தொகை நூல்கள் யாவை?

| அகப்பொருள் நூல்கள் | | புறப்பொருள் நூல்கள் | அகம் + புறம் |
|---|---|---|---|
| 1. நற்றிணை, | 4. கலித்தொகை | 6. பதிற்றுப் பத்து | |
| 2.குறுந்தொகை | 5.அகநானூறு | 7. புறநானூறு | 8.பரிபாடல் |
| 3. ஐங்குறுநூறு | | | |

2. நரிவெரூ உத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.
"கயன்முள் என்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே"

முதுமை காரணமாக மீனின் முள்ளைப் போன்று வெண்மையான தலைமுடியினையும் தோல் சுருங்கிய கன்னங்களையும் உடைய பயனில்லாத மூப்பு உடைய சான்றோரே!

" கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ"

கூர்மையான மழுவாகிய ஆயுதத்தை ஏந்தியவாறு, வலிமை வாய்ந்த எமன் பாசக்கயிற்றால் கட்டி உயிரைக் கவர வரும்போது வருந்துவீர்! அப்போது வருந்திப் பயனில்லை.

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்"

உயிருடன் வாழும் போதே நல்லது செய்யுங்கள். நல்ல வினைகளைச் செய்யாவிட்டாலும் தீயதைச் செய்தலையாவது தவிர்த்து விடுங்கள். அதுவே எல்லோரும் விரும்புவது. அது மட்டுமன்று,
"உங்களை மறுமையில் நல்ல வழியாகிய வீட்டுலகில்செலுத்தக்கூடிய அறவழியும் அதுவேயாகும்"
என்று நரிவெரூஉத்தலையார் கூறுகிறார்.

3. இடஞ்சுட்டி விளக்குக. " நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்பு மின்"

இடம் பெற்ற நூல்: புறநானூறு 'பல்சான்றீரே' எனத் தொடங்கும் பாடல்.
கூறியவர் - ஆசிரியர், கேட்டவர்- பயனின் மூப்பிற் பல்சான்றோர்

2 விளக்கம்: முதுமை காரணமாக மீனின் முள்ளைப் போன்று வெண்மையான தலைமுடியினையும் தோல் சுருங்கிய கன்னங்களையும் உடைய பயனில்லாத மூப்பு உடைய சான்றோரே!

கூர்மையான மழுவாகிய ஆயுதத்தை ஏந்தியவாறு, வலிமை வாய்ந்த எமன் பாசக்கயிற்றால் கட்டி உயிரைக் கவர வரும்போது



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வருந்துவதால் எனந்தப் பயனும் இல்லை.
( உயிருடன் .......... என்று அறிவுறுத்துகிறார் நரிவெரூஉத் தலையவர் .

**சிற்றிலக்கியங்கள் -பெருவினா - தொகுப்பு**

1. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை?

| | |
|---|---|
| வில்லின் சிறப்பு | இந்திரனை வென்றது; ஓர் அம்பினை விடுத்துப் பெருங்கடல் காய்ந்து, வற்றுமாறு செய்தது. |
| வாளின் சிறப்பு | சோழ மக்கள் நல்வாழ்வு பெறக் காவிரி ஆறு பாய்வதற்குச் சைல மலையை வெட்டி வழிவிட்டது; வானத்தில் அசைந்த அசுரர்களின் நகரத்தினைத் தொலைத்தது. |
| முரசின்சிறப்பு | வஞ்சி மாநரில் திறையாகக் கொடுத்த கடப்ப மரத்தால் செய்யப்பட்டது. போரில் தோற்ற வேற்று நாட்டு மன்னரைத் தலையில் மண் சுமந்து காவிரி அணை கட்டுமாறு செய்தது. |
| கொடியின்சிறப்பு | ஆயிரம் கண்களைக் கொண்டு. மேருமலையைத் தாவிச் சுற்றி வந்த இந்திரனைக் கொடியில் புலியாகக் கொண்டது. |
| குடையின் சிறப்பு | சோழ நாட்டு மக்களைக் காக்கும் பொருட்டு, வானளவு நெடிது உயர்ந்து, அண்ட கூடத்தை ஒத்து நிற்பது இராசராச சோழ மன்னனின் குடை |

2. தென்கரை நாட்டின் வளம் குறித்துமுக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

| | |
|---|---|
| சூரியனின் வெப்பத்தினால் வெயில் காயும் | மக்களின் வயிறு பசியால் காயாது |
| வெண்மையான தயிர்கண்டங்கள்தான் நிலை குலையும். | மக்கள் நோய் கண்டங்களால் மனம் கலங்கார் |
| மாய்ந்து ஒழிவன நாழிகையும் வாரமுமே ஆகும் | மக்களுள் இளமையில் இறப்பவர் எவரும் இலர் |
| கலங்கிச் சுழல்வது நீர்ச்சுழிகளை உடைய வெள்ளம் மட்டுமே | மக்கள் பிறநாட்டுப் படையால் கலங்கிச் சுழல்வது இல்லை |
| நன்கு முற்றிய செந்நெல் பயிரே தலை சாயும் | மக்கள் காயப்பட்டும், குலை நோயுற்றும் தலை சாய்வது இல்லை. |
| துறவிகள் மட்டுமே தனியாக வாழ்வார் | கணவன் மனைவியர் தனித்து இரார். |
| சந்தனக்கட்டை மட்டுமே அரைப்பதால் தேயும் | செய்யுளில்பொருள் தேய்வு இராது |

இவையே தென்கரை நாட்டின்வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவாம்.

3. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை?

செந்தாமரை மலர் போன்ற அழகும் குளிர்ச்சியும் உடைய கண்களை உடையவரான திருமால் துயில்கொள்வது போல, சந்தன மரங்கள் நிறைந்துள்ள பொதிய மலைச் சாரலில் குடிகொண்டு வாழும் மேகக் கூட்டங்களே!

அழகிய வெண்மதியும் இரைதேடி அலைகின்ற குயிலின் இளங்குஞ்சும் என் உயிரை விழுங்குவதால் நான் மிகவும் வருந்துகிறேன்.

என் நிலையை மேரு மலையிலும் கயிலாய மலையிலும், பொதியமலையிலும் தங்கி வாழ்பவரும், அரச குமாரியாகிய தடாதகைப் பிராட்டியின்கணவருமாகிய மதுரையில் எழுந்தருளி உள்ள சோமசுந்தரப் பெருமானிடம் சென்று புகல்வீர்களாக! என்று தலைவி மேகத்திடம் தூது மொழிகளை மொழிந்தாள்.

4. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளை பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை?

திருப்பாற்கடலை மலைபோன்ற தம் கைகளால் கடைந்து, அமுதத்தை எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்த பெருமை மிக்க திருமால் எழுந்தருளி வாழ்கின்ற மலை திருவேங்கட மலையாகும். பிறைச்சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமானும் மனம் குளிரக் காணும் மலை. பிரம்மனும், இந்திரனும் வேதங்களை ஆராய்கின்ற முனிவர்களும் முப்பது முக்கோடித் தேவர்களும் தம் கண்களால் கண்டு தரிசிக்கும் மலை. இவர்கள் அனைவரும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் தம் அறிவுக்குள் தேக்கி வைத்துப் போற்றுகின்ற சிறந்த மலை ‘ திருவேங்கடமலை’ ஆகும்.

5. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பற்றிக் குறிப்பு எழுதுக.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் |
| பிறந்த ஊர் | : | சோழ நாட்டிலுள்ள ‘திருமங்கை’ |
| சமயம் | : | வைணவம் |
| காலம் | : | கி.பி 17 ஆம் நூற்றாண்டு |
| சிறப்பு பெயர்கள் | : | ‘திவ்வியகவி’ |

‘அழகிய மணவாளதாசர்’ தெய்வக் கவிஞர்

| | | |
|---|---|---|
| இயற்றியவை | : | எட்டு நூல்களின் தொகுதியைக் கொண்ட அஷ்டப்பிரபந்தம் |
| ஆற்றிய பணிகள் | : | மதுரை திருமலை நாயக்க மன்னரின் அவையில் அலுவலர்; பின்னர் இறைத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். உயர்வைப் புலப்படுத்தும் பழமொழி. அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன் |

சொல் - பொருள் - தொடை- நடை நோக்குக் கொண்டு, இவர்தம் பாடல்கள் ஒளிர்கின்றன.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**வழிபாட்டுப் பாடல்கள் (பெருவினா)**

1. 'நாயினேன் மறந்து எண்ணினைக்கேனே' என்று சுந்தரர் உருகுமாற்றினை விளக்குக.

| | |
|---|---|
| கற்பக மரம் போன்றவள் | வேண்டுபவர்க்கு வேண்டியவற்றை வழங்கும் கற்பகத் தருவினைப் போன்றவன் சிவபெருமான் |
| கனகமால்வரை | பொன்மயமான கயிலாய மலையைப் போன்றவன் |
| காமகோபன் | தன் தவத்திற்கு இடையூறு விளைவித்த காமன் மீது கோபம் கொண்டு நெற்றிக் கண்ணால் எரித்தவன் |
| கண் நுதலான் | நெற்றியில் தீப்பொறி பறக்கும் நெற்றிக் கண்ணை உடையவன், சிவபெருமான். |
| சோதி வடிவானவன் | சொல்லும் சொற்களின் பொருள்வழி ஏற்படும் அக இருளாகிய ஆணவ மலத்தினைப் போக்கி, தெளிவினை அருளும் தூய்மையான சோதி வடிவானவன். |
| அடியனாய் | திருவெண்ணெய் நல்லூரில் ஓர் அடிமை ஒலையைக் காட்டி |
| ஆட்கொண்டவன் | என்னை (சுந்தரரை) அடிமை கொண்டவன், சிவபெருமான் |
| நற்பதத்தான் | அடியவர்களுக்கு அருள்புரியும் திருப்பாதங்களை உடையவன் சிவபெருமான் |
| நள்ளாற்றான் | திருநள்ளாறு என்னும் பதியில் எழுந்தருளி இருப்பவன் |
| அமுதானவன் | அமுதம் போல் என் உயிரில் கலந்து இனிப்பவன் சிவபெருமான். |

இத்தகைய சிறப்புகளை உடைய சிவபெருமானை மறந்து, நாய் போன்ற அடியவனாகிய நான் வேறு என்ன நினைப்பேன்? ஒன்றையும் நினைக்க மாட்டேன் என்று சுந்தரர் மனம் உருகுகிறார்.

2. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

| குலசேகர ஆழ்வார் வேண்டுவது | குலசேகர ஆழ்வார் வேண்டாதது |
|---|---|
| "தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச் சுளையில் மீனாற்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே" தேன் சிந்தும் மலர் சோலைகளை உடைய திருவேங்கடம் என்னும் திருமலையில் உள்ளநீர் நிறைந்த சுனைகளில் மீனாய்ப் பிறக்கும் நற்பேற்றினையே நான் விரும்புகிறேன் என்று குலசேகர ஆழ்வார் வேண்டுகிறார். | " ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்" குறைவற்ற அழகு மிக்க வானுலக நடன மாதர்களாகிய அரம்பையர்கள் என்னைச் சுற்றி குழுமியருக்க இந்திரலோகத்தை ஆளும் வாய்ப்பும் ஒருசேர எனக்குக் கிடைப்பதாக இருந்தாலும் அவற்றை நான் விரும்ப மாட்டேன் என்று குலசேகர ஆழ்வார் கூறுகிறார் |

3. சிலுவையில் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார்?

" இயேசு பிரான், கன்னித்தன்மை அழியாத மரியாளின் மகனாக இவ்வுலகில் தோன்றினார். நிலைபெற்ற அழியாத இவ்வுலகத்தில் வாழும் கோடிக்கணக்கான உயிர்கள் அனைத்தும் வீடுபேற்றினை அடையும் பொருட்டுத் அத்தகைய இரக்கமுள்ள வழிபடு கடவுளாகிய இயேசு பெருமானை, நம் இருகைகளையும் தலைமேல் தூக்கி கூப்பித் தொழுது வணங்குவோம்" என்று சிலுவையில் பரித்தியாகம் செய்த இயேசு பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை அஞ்சலி செய்கிறார்.

4. அறிவர்க்கும் அறிவனாகிய அருகதேவனை நீலகேசி வழிப்பட்டமை எவ்வாறு?

அறிஞர்களுக்கெல்லாம் சிறந்த அறிஞனாய் இருக்கும் அருகதேவனே !
நீ அரியணையில்அருள்நெறியோடு அமர்ந்திருப்பாய்.

ஒளிவீசும் வெண்மையான கவரியைக் கையில் ஏந்தி, கந்தருவர் உன் இருபக்கங்களிலும் நின்று, கவரிகளை அசைப்பர். ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப்பிரயை ஆகிய மூன்று திருவொளி நிழல் தரும் மண்டிலங்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கும். திங்களைப் போன்ற வட்டவடிவமான முக்குடைகள் தலைக்கு மேல் கவிழ்ந்து நிழல்தரும் தேவர்கூட்டமாகிய நல்ல அவையினர் கேட்டு தெளிவடையும் படி, மூன்று ஆகமங்களைத் திருவாய் மலர்ந்து அருளினாய் ! ஆகவே ! நின் மலரடிகளைப் பணிகிறேன் என்று அருகதேவனை நீலகேசி வழிபட்டார்.

~~~~~~~~



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/
~~~~~~~~

www.waytosuccess.org

# தமிழ்

# இரண்டாம் தாள்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## உரைநடை

# 1. உயர்தனிச் செம்மொழி

***பரிதிமாற் கலைஞர் - வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார்***

நெடுவினா : 1

1. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வகைமை :

முன்னுரை : தொன்று தொட்டுத் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. அந்த மூவகைப் பாகுபாடுகள் குறித்து இந்தக் கட்டுரையில் காண்போம்.

❖ **இயற்றமிழ் :** இயற்றமிழ் என்பது தமிழிலுள்ள வசனமும் செய்யுளுமான நூல்களின் தொகுதியாகும்.

| | |
|---|---|
| செந்தமிழ் | - வசன நூல்கள், செய்யுள் நூல்கள் |
| கொடுந்தமிழ் | - வசன நூல்கள்,: செய்யுள் நூல்கள் |

ஆகியவற்றையே தமிழர் இயற்றமிழ் என்றனர். இயற்றமிழில் இலக்கியங்கள், இலக்கணங்கள் ஆகிய யாவும் அடங்கும்.

2. (❖ **இசைத்தமிழ் - விளக்கம் :**

இசைத்தமிழ் என்பது பண்ணொடு கலந்தும்
தாளத்தோடு சேர்ந்தும் அமையும் செய்யுளாகும்.
செந்தமிழ்ப் பாட்டுகளாலும் கொடுந்தமிழ்ப் பாட்டுகளாலும்
அமைந்த இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமான
நூல்களின் தொகுதியாகும்.

இசைத்தமிழில் அடங்குவன :

| | |
|---|---|
| * கீர்த்தனைகள் | * ஆனந்தக் களிப்பு |
| * வரிப் பாடல்கள் | * கும்மி |
| * சிந்து | * தெம்மாங்கு |

முதலியன இசைத்தமிழில் அடங்குவன ஆகும்.

**இசைத்தமிழ் நூல்கள் - முற்காலம் :**

✓ பெருநாரை
✓ பெருங்குருகு
✓ இசை நுணுக்கம்
✓ தாளவகையோத்து

என்பன முற்காலத்தில் இருந்த இசைத் தமிழ் நூல்களாகும்.

**இடைக்கால இசைத் தமிழ் நூல்கள் :**

தேவாரம் முதலியன இடைக்காலத்தில் வழங்கிய இசைத்தமிழ் நூல்களாகும்.

**தற்கால இசைத் தமிழ் நூல்கள் :**

✓ கந்த புராணக் கீர்த்தனை
✓ பெரிய புராணக் கீர்த்தனை
✓ சங்கீத சந்திரிகை

முதலியன தற்காலத்தில் வழங்கி வரும் இசைத்தமிழ் நூல்களாகும்.

**இசைத்தமிழின் சிறப்பு :** இசைத் தமிழ் இல்லாமல் நாடகத் தமிழ் சிறப்படையாது. ஆடையற்ற நங்கை வெளிப்படாது உள்ளடங்கியே இருக்கும்.

**இசைத் தமிழின் இலக்கணம் :**

இசையும் தாளமும் சேர்ந்த செய்யுட்களே இசைத் தமிழ் எனப்படும்.
இவற்றுள் ஒன்று இல்லை என்றாலும் அது இயற்றமிழில் தான் அடங்கும்.) 2

5. (❖ **நாடகத்தமிழ்**

கையில் புத்தகத்தை எடுத்துப் படிக்க நேரமில்லாத பணியாளர்களுக்கும்
படிக்கத் தெரியதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்துடன்
எழுந்ததே நாடகத் தமிழாகும்.

அது கேட்போர்க்கும் காண்போர்க்கும் இன்பம் தருவதால் மக்கள் அதைக் காண விரும்பிச் செல்கின்றனர்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**நாடகத் தமிழின் சிறப்பு :**

இயற்றமிழ், இசைத்தமிழ் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு **பிறந்ததே நாடகத் தமிழ்.**

இயலும் இசையும் கேள்வி இன்பம் மட்டுமே தருவன.

நாடகத்தமிழோ கேள்வி இன்பத்துடன் காட்சி இன்பமும் தருகிறது.

மேலும், அது உள்ளதை உள்ளவாறே காட்டுகிறது.

இதனால்தான் பிறநாட்டவரும் பிறமொழிப் புலவர்களும் நாடகத்தை மேன்மை உடையனவாக மதிக்கின்றனர்.) 3

**முடிவுரை :**

இவ்வாறு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வகைமை குறித்து முத்து முத்தான கருத்துகளைப் பரிதிமாற் கலைஞர் தெரிவித்துள்ளார்.

**நெடுவினா 2 :**

**தமிழ் உயர் தனிச் செம்மொழி**

முன்னுரை : வடமொழி, இலத்தீன், கிரீக் முதலிய மொழிகளைப் போன்று தமிழ் மொழியும் உயர்தனிச் செம்மொழியே என்பதை இந்தக் கட்டுரையில் காண்போம்.

6. (✣ **உயர்மொழி - விளக்கம் :**

தான் வழங்கும் நாட்டில் உள்ள மொழிகள் எல்லாவற்றையும் விட உயர்வான,

மேன்மை உடைய மொழியே உயர்மொழி ஆகும்.

தமிழுக்குப் பொருந்தும் விதம் :

தமிழ் மொழியானது தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகளை விட உயர்வானது. பழமையான இலக்கண இலக்கியங்களால் மேன்மை உடையது. எனவே, தமிழ் மொழி உயர்மொழியே ஆகும்.

தனிமொழி - விளக்கம் :

தனித்து இயங்கும் ஆற்றல் உடைய மொழியே தனிமொழி ஆகும்.

தான் பிற மொழிகளுக்குச் செய்யும் உதவி மிகுந்தும்

பிற மொழிகளிடம் இருந்து தான் பெறும் உதவி குறைந்தும்

இருக்க வேண்டும் என்பது வழக்கமாகும்.

**தமிழுக்குப் பொருந்தும் விதம் :**

இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் மொழியின் உதவி இல்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் இயங்கா. ஆனால் தமிழ் மொழியானது பிற மொழிகளின் உதவி இல்லாமல் தனித்து இனிதே இயங்கக் கூடியது. இந்திய மொழி நூற் புலவர்களும் ஏற்றுக் கொண்ட உண்மை இது. ஆகவே, தமிழ் மொழி தனி மொழியே ஆகும்.) 6

7. (✣ **செம்மொழி - விளக்கம் :**

'திருந்திய பண்பும் சீர்த்த (சிறந்த) நாகரிகமும் பொருந்திய

தூய்மொழி புகல் செம்மொழி'யாம் என்பது இலக்கணம்.

திருந்திய பண்பும் சிறந்த நாகரிகமும் உடைய மொழியே செம்மொழி என்பது நூலார் வகுத்த இலக்கணம் ஆகும்.

✲ திருந்திய பண்பு :- இடர்ப்பட்ட சொல் முடிவுகளும் பொருள் முடிவுகளும் இல்லாமல்

- ✲ சொல்பவர் சொல்லக் கருதியதைக் கேட்பவர் தெளிவாக உணரக் கூடியதாக மொழி இருக்க வேண்டும்.
- ✲ பழையன கழிந்து, புதியன புகுந்து, திருத்தம் உடையதாக மொழி இருக்க வேண்டும்.

இவைதாம் திருந்திய பண்பு என்பதன் இலக்கணம். தமிழ் மொழிக்கு இப்பண்பு பொருந்துவதால் தமிழ் மொழி திருந்திய பண்புடைய மொழியாகும்.

✲ சீர்த்த நாகரிகம் :

- ✲ நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப சொற்கள் புதிதாகத் தோன்ற வேண்டும்.
- ✲ அவ்வாறு தோன்றும் சொற்கள் பிறமொழி கலவாமல் தன் சொற்களாக இருக்க வேண்டும்.

தமிழ் மொழிக்கு இது முற்றிலும் பொருந்துவதால் தமிழ் மொழியான சிறந்த நாகரிகம் உடைய மொழியாகும்.

திருந்திய பண்பும் சிறந்த நாகரிகமும் உடையதால் தமிழ் மொழி செம்மொழியே ஆகும்.) 7

**முடிவுரை :** இவ்வாறு எந்த வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் தமிழ் மொழியானது 'உயர்தனிச் செம்மொழியே ' என்பது நிச்சயமாகும்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

2. இசைத்தமிழ் என்பது யாது? இசைத் தமிழ் நூல்கள் யாவை?
3. நாடகத் தமிழ் குறித்து ஆசிரியர் கூறுவன யாவை?
6. தமிழ் - தனிமொழி, உயர்மொழி விளக்குக.
7. செம்மொழியின் இலக்கணம் யாது? அவ்விலக்கணம் தமிழுக்குப் பொருந்துவதை நிறுவுக.

**பெருவினா :**

1. செந்தமிழ் நாடு :
    1. சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலையில் இருந்து தமிழ் வளர்த்த அகத்திய முனுவரும்
    2. சௌந்தர பாண்டியன் என்னும் தமிழ் மன்னரும்
    3. சங்கப் புலவர்களும்

தழைத்து இனிதே வாழ்ந்த மங்கலத் தன்மை உடைய **பாண்டிய வளநாடுதான் செந்தமிழ் நாடு** என்று அழைக்கப்பட்டது.

"செந்தமிழ் நாடே
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டிய வளநா டென்ப"

கொடுந்தமிழ் நாடு :

| | | |
|---|---|---|
| 1. தென் பாண்டி நாடு | 5. வேணாடு | 9. அருவா வடதலை நாடு |
| 2. குட்ட நாடு | 6. பூழிநாடு | 10. சீதநாடு |
| 3. குடநாடு | 7. பன்றி நாடு | 11. மலையமான் நாடு |
| 4. கற்காநாடு | 8. அருவா நாடு | 12. புனல் நாடு |

**செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த இந்தப் பன்னிரண்டு குறுநிலங்களும் குற்றமில்லாக் கொடுந்தமிழ் நாடாகும்.**

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன்வடக்கு - நன்றாய
சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்"

இவையே செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவாகும்.

4. தமிழ் மொழியின் மீது பற்றில்லாத தமிழர்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம்?

துணிந்துரை : ஆங்கிலம் கற்ற தமிழர்களில் பலர் தமது தாய்மொழியான 'தமிழைக் கற்க வேண்டியது அவசியம் அன்று' என்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம் தமக்கு வேண்டிய செய்திகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே கிடைக்கின்றன என்பதாகும்.

அத்தகையோர் ஆங்கிலத்தின் சிறப்பைக் கூறுவதோடு
நிறுத்திக் கொள்ள வேண்டுமே தவிர 'தமிழைக்
கற்க வேண்டியது அவசியம் அன்று' என்று கூறுவது
அறியாமையோடு கூறும் துணிந்துரையாகும்.

கடிந்துரை : இது தாய்நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றும் அற்றவர் கூற்றாகும். ஆங்கிலேயர் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிகுந்தவர்கள். இந்த இரண்டு பற்றும் இல்லாதவர்களை அவர்கள் மதிக்க மாட்டார்கள்.

பிறமொழி வல்லுநர்கள் தமிழின் மீது ஆர்வம் கொண்டு,
தமிழைக் கற்று, தமிழ் நூல்களைத் தங்கள் மொழியில்
மொழி பெயர்த்துக் கொள்கின்றனர். இதை எல்லாம்
பார்த்த பிறகாவது 'தமிழ்க் கல்வி அவசியம் அன்று'
என்று கூறுவோர்க்குப் புத்தி வரட்டும்.

இவ்வாறு தமிழின் மீது பற்றில்லாத தமிழர்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைக்கிறார்.

5. தமிழை உள்நாட்டு மொழிகளோடு ஒப்ப வைத்து வகைப்படுத்துதல் ஆகாது :

தமிழுக்கு இழிவு : தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் தாய்மொழியாகிய தமிழ்மொழியை அதன் வழிமொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவற்றோடு அடக்கி 'உண்ணாட்டு மொழிகள்' என்று சிலர்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வகைப்படுத்தினர்.

தனிமொழியாகிய தமிழ் மொழியை அதன் வழிமொழிகளோடு
ஒப்பிடுவது தமிழ்மொழிக்கு இழிவைத் தருவதாகும்.

தமிழுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்

அறிஞர்கள் ஆரிய மொழிகளில் தலைசிறந்த வடமொழியை அதன் வழிமொழிகளோடு (மராட்டி, குஜராத்தி, பெங்காலி) ஒன்றாக வைத்து எண்ணார். அதுபோலவே, தமிழ் மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒன்றாக வைத்து எண்ணக் கூடாது. தனிமொழியான தமிழுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்.

வாய் பேசாமை :

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழை 'உண்ணாட்டு மொழிகள்'
என்று வகைப்படுத்திய போதே அவ்வாறு வகைப்படுத்தக்
கூடாது என்று தமிழ்மொழி ஆர்வலர் மறுத்திருக்க வேண்டும்.

தமிழின் இழிநிலையைப் போக்கியிருக்க வேண்டும். அப்போது பேசாமல் இருந்து விட்டனர் தமிழ்மொழியாளர்.

இவ்வாறு தமிழை உண்ணாட்டு (உள்நாட்டு) மொழிகளோடு ஒப்பிட்டு வகைப்படுத்தல் ஆகாது என்கிறார் பரிதிமாற் கலைஞர்.

--------------

## உடைநடை : பாடம் - 2. சமரசம்.

திரு. வி. கலியாண சுந்தரனார்

1. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை?

சமரசத்தைப் பற்றி எழுந்த பேச்சுகளும் எழுத்துகளும் மலையெனவும் கடலெனவும் உள்ளன. உலகில் தோன்றிய அறிஞர் பலரும் சமரசத்தையே அறிவுறுத்தி சென்றனர். ஆனால், உலகம் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

மனிதனிடத்தில் குடிகொண்டுள்ள அழுக்காறு (பொறாமை),
அவா (ஆசை), வெகுளி (கோபம்) முதலியன
மனிதனைச் சமரச ஞானி ஆக்குவதில்லை.

சமரசத்தைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் எளிது. ஆனால், அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதோ அரிது.

மனிதன் அழுக்காறு முதலிய பேய்களால் தொடரப்பட்டு இடர்ப்படும் வரை அவன் சமரச ஞானியாதல் அரிதிலும் அரிது.

எனவே, மனிதன் சமரசத்தைப் பற்றிப் பேசுவதைக் காட்டிலும் அதை நடைமுறையில் கொண்டுவர முயல்வதே அறிவுடைமையாகும்.

2. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?

**பிறநாட்டை வருத்துதல் :**

ஒருவன் தான் பிறந்த நாட்டைத் தாய்போல் நேசிக்கலாம். ஆனால், அந்த நேசத்தை வைத்து, எக்காரணம் கொண்டும் மற்ற நாடுகளைத் துன்புறுத்தக் கூடாது. கடல்களும் மலைகளும் காடுகளும் பிறவும் நாடுகளைப் பிரிக்கின்றன. இப்பிரிவைக் கொண்டு, ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை வருத்துதல் கூடாது.

மேல் நாட்டார் தாம் பிறந்த நாட்டின் பொருட்டுப் பிறநாடுகளைப் பற்றுவதில்
திறமை வாய்ந்தவர் ; பிறநாட்டவரை வருத்துவதற்கே ஆகாய விமானங்களையும்
நீர்மூழ்கிக் கப்பல்களையும் நச்சுக் காற்றையும் பிறவற்றையும் கண்டறிந்தனர்".

**மற்றவரையும் மதிக்க வேண்டும் :**

தங்கள் நாட்டையே கடவுளாய்க் கருதும் இவர்களுக்கு பிற நாட்டவரிடமும் கடவுள் இருத்தல் புலனாவதில்லை. மற்றவர்க்கும் பசி முதலியன உண்டு என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

'எல்லா நாட்டவரும் நம் சகோதரர்களே !'

என்பதை உணராத பலர் 'நாடு' என்னும் பற்றால் சமரசத்தை இழக்கின்றனர்.

3. சாதிக் கொடுமை, சமய வெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தைத் திரு.வி.க. வழி நின்று ஆய்க.

சாதிக் கொடுமை :

"பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுதல் தவறு ;
பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பெருங்குற்றம்
நமது நாட்டுக்கே சிறப்பாக உண்டு."

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் ஒருபோதும் சமரசச் சாயல் படராது. எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சாதிக் கொடுமை. சாதிக் கொடுமைகளைக் களைய, சான்றோர் பெருமுயற்சி செய்தனர். ஆனால், அம்முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீர்போன்று வீணாயின.

சமயவெறி :

ஒருவனின் சமயவெறி, கடவுள் அன்பைக் கெடுக்கும் ;
அவன் சமயவெறியால் தன் சமயத்தின் மீது பற்றுக் கொண்டு
ஏனைய சமயத்தாரை நிந்திக்கிறான். (பழிக்கிறான்)

இந்த நிலை மிகுந்த அறியாமையே ஆகும்.

"சமயம் என்பது ஒன்றே ;
அதுவே சமரசம் என்பதாகும்."

பல சமய உணர்வும் தன் சமயப்பற்றும் சமரசத்தை அழித்து விடுகின்றன. ஆதலால், சமயவெறி கூடாது என்கிறார் திரு.வி.க.

**II. நெடுவினா :**

2. 'நாடு, சாதி, சமயம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம்' என்று திரு.வி.க. வாதிடுவதை விளக்குக. விடை. : 2, 3

4. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை :

நமது நாட்டில் நீண்டகாலமாக ஒரு பெருங்கொலை நிகழ்ந்து வருகிறது. அக்கொலை உலகிற்குத் தெரிவதில்லை. அதாவது பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, அவர்கள் உருவத்தை மட்டும் வழிபாடு செய்வது, இந்தப் பொய்யொழுக்கம் நீண்ட காலம் வழக்கில் இருந்து வருகிறது.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் !
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?" என்றும்
"சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்" என்றும்

கூறிச் சென்ற பெரியோர்களை வழிபடுவோர் சாதி வேறுபாடு பார்ப்பது வேதனை. ***சாதியைக் கடவுளாகவும் சமயமாகவும் கருதும் இவர்கள்*** சமரசத்தை வலியுறுத்திச் சென்ற பெரியோர்களை வழிபடுவதற்குப் பொருளுண்டா? வெறும் உருவத்தை மட்டும் வழிபடுவது வழிபாடாகுமா? பெரியோர் அறிவுறுத்திய நெறி நின்று வாழ்வதுதானே உண்மையான வழிபாடு?

நம்நாட்டவர் முன்னோர் அறிவுறுத்திய கொள்கையைக் கல்லறையிட்டுப் புதைத்து விட்டு, அவர்களின் உருவங்களை மட்டும் வழிபடுவதில் பேர் பெற்றவர் ஆவர். இத்தகைய பொய்யொழுக்கமும் வஞ்சனையும் வளர்ந்து வரும் நாட்டிற்கு ஆகாது.

இதுவே, நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பதாகும்.

-----------------

## 3. கவிதை

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை

1. கவிதை என்பது யாது?

கோலரிட்ஜ் :

"சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்.
சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை."

இவ்வாறு கோலரிட்ஜ் என்பவர் கவிதை என்பதற்கு விளக்கம் அளித்தார்.

வோர்ட்ஸ்வொர்த் :

கவிதை என்பது யாது? என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த் அளித்த விளக்கம் உலகப் புகழ் பெற்றது.

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி
வருவதுதான் கவிதை" என்பதே அவர் கருத்து.

ஆற்றல் நிரம்பிய சொற்கள் எப்போது வெளிப்படுகின்றன?

கோபத்தில் தான் வெளிப்படுகின்றன. அப்படியானால் கோபத்தில் வெளிப்படும் ஆற்றல் நிரம்பிய சொற்கள் கவிதை ஆகுமா? இதனை விளக்க, 'முன்பு எழுந்த ஓர் உணர்ச்சிப் பெருக்கை மீண்டும் சாந்த நிலையிலிருந்து நினைவிற்குக் கொண்டு வரும் போதுதான் கவிதை தோன்றுகிறது" என்றார் அவர்.

2. கவிதையின் இயல்புகள் யாவை?

கீட்ஸ் :

1. "கால்வாய் இல்லாத இடத்தில் பெய்யும் ஒளி மழையே கவிதை"



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

2. "ஆற்றலின் சிகரம்"

3. "ஆற்றல் தனது வலப்புயத்தில் தலை சாய்த்து பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலையே கவிதை"

இவை கவிஞர் கீட்ஸ் என்பவர் கவிதையின் இயல்புகளாகக் கூறியனவாகும்.

ஜான்ரஸ்கின் : ஜான்ரஸ்கின் என்பவர்

"சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனா சக்தியால் குறிப்படுவதே கவிதை"

என்று கவிதையின் இயல்பைக் கூறினார்.

ஆங்கிலப் பேரகராதி : செய்யுள் வடிவில் இயற்றப்படுவதே கவிதை என்று கவிதையின் இயல்பு குறித்து ஆங்கிலப் பேரகராதி கூறுகிறது.

**பவணந்தி முனிவர் :**

"பல்வகை உறுப்புகளைக் கொண் உடல்
உயிருக்கு ஆதாரமாக இருப்பது போல
பல்வகைச் சொற்களால் பொருளுக்கு இடனாக
செய்யுள் இயற்ற வல்லோர் அழகுறச் செய்வதே (கவிதை) செய்யுள்"

என்று பவணந்தி முனிவர் கவிதைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

**3. கவிதைக்குரிய நல்லியல்புகளாகக் கம்பர் கூறுவன.**

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

1. நிலத்திற்கு அழகாக அமைய வேண்டும்.
2. அறிவு இதுதான் எனச் சுட்ட வேண்டும்.
3. அகத்துறைகளைப் பெற்றிருக்க வேண்டும்.
4. சிறந்த பொருளைத் தர வேண்டும்.
5. ஐந்து திணைகளின் வழி நடத்தல் வேண்டும்.
6. கவிதை அழகுடன் அமைய வேண்டும்.
7. கவிதை என்பது தெளிவாக இருத்தல் வேண்டும்.
8. கவிதை ஓர் ஒழுங்குடன் அமைய வேண்டும்.

இவ்வாறு, கம்பர் கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கோதாவரி ஆற்றைச் சிறப்பிக்கும் வகையில் உரைக்கிறார்.

4. செய்யுள் நடையைக் கையாளுதல் பற்றி வையாபுரிப் பிள்ளை தெரிவிப்பன யாவை?

**செய்யுள் நடை :** செய்யுளும் யாப்பும் உடலும் உயிரும் போல அமைதல் வேண்டும். கருத்துக்குப் பொருத்தமற்ற யாப்புகளை இயற்றுவது மட்டும் இன்பம் தராது. இன்ன கருத்துக்கு இன்ன செய்யுள்தான் பொருந்தும் என்பதைச் சிறந்த கவிஞர்களிடமிருந்தே தெரிந்து கொள்ள முடியும்.

**சான்று :** திருமணத்தை வருணிக்கும் அடிகளில் மிடுக்கும் அழகும் இன்ப உணர்ச்சியும் தரக்கூடிய செய்யுள் வகையைக் கையாள வேண்டும். வீரச் சுவையைக் கூறும் இடங்களில் அதற்கேற்ற செய்யுள் நடையைக் கையாள வேண்டும்.

**கம்பன் கவி :** கம்பனைப் போன்ற பெருங்கவிஞர்களை அடிக்கடி கற்று, நல்ல பயிற்சி பெறுவது கவிதையின் சீரிய இயல்புகளை நாம் அறிந்து கொள்வதற்குப் பெருந்துணை புரியும்.

******

## உரைநடை - பாடம் - 4 வாழ்க்கை

இளவழகனார்

1. பழந்தமிழர் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

பழந்தமிழர் மேற்கொண்ட தொழில்கள்

இல்வாழ்க்கையில் வாழ்வார்க்குப் பொருள் தேடுவது ஒரு கடமை. அதற்காகப் பழந்தமிழர் பற்பல தொழில்களை மெற்கொண்டனர். உழவு, வாணிகம், நெசவு முதலியவை அவற்றுள் சிலவாகும்.

குறிஞ்சி நில மக்கள்

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலமாகும். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தேன் எடுப்பது, தினை விதைப்பது, கிழங்கு அகழ்வது போன்ற தொழில்களை மேற்கொண்டனர்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முல்லை நில மக்கள்

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலமாகும். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நிரை மேய்ப்பது, பால் கடைவது, வரகு விளைவிப்பது போன்ற தொழில்களை மேற்கொண்டனர்.

மருத நில மக்கள்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் உழவு செய்வது, நகர் அமைப்பது, ஆட்சி புரிவது போன்ற தொழில்களை மேற்கொண்டனர்.

நெய்தல் நில மக்கள்

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலமாகும். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் முத்துக் குளித்தல், உப்பு விளைவித்தல், மரக்கலத்தில் ஏறி அலைகடலில் சென்று வாணிகம் செய்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு, அங்கங்கு வாழ்ந்த பழந்தமிழர் அந்தந்த இடங்களுக்குத் தகுந்த தொழில்களை மேற்கொண்டனர்.

2. பழந்தமிழ் மாந்தர் பெருமுயற்சியையே மதித்து வாழ்ந்தனர் - விளக்குக.

வேரூன்றிய கொள்கை

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்தே பொருள் தேடுவது என்னும் கொள்கை பழந்தமிழரிடையே வேரூன்றியிருந்தது. இரத்தலை இழிவாகக் கருதினர். இரவாதிருக்கும் நிலையைப் "பிறன்கடை செலாஅச் செல்வம்" என்று கூறி மகிழ்ந்தனர். ஆக்களுக்கு நீர் வேண்டி இரப்பதும் இழிவாகக் கருதப்பட்டது. தன் முயற்சியால் வரும் பொருளையே ஒருவன் செலவு செய்வதற்கு உரியவன் என்னும் மேன்மையான கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வாழ்ந்தனர்.

எளிய முயற்சி

வயலில் தன் வளையின் அருகிலேயே விளைந்து விழுந்து கிடக்கும் நெற்பயிரை எலி கறித்துத் தன் வளைக்குள் சேர்த்துக் கொள்ளும். அது போன்ற எளிய முயற்சி உடைய மக்களை முன்னோர் பெரிதும் அருவருத்தனர்.

பெருமுயற்சி

புலி தான் செல்லும் வேகத்தினால் தனது இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைச் சிறிதும் கண்ணெடுத்துப் பாராது. மறுநாள் பெரிய யானையோடு போரிட்டு, அதனை வலப்பக்கத்தில் வீழ்த்தி, அதனையே உணவாகக் கொள்ளும். இத்தகைய புலியைப் போன்ற பெருமுயற்சி உடைய மக்களையே பழந்தமிழர் பெரிதும் மதித்துப் போற்றினர்.

பழந்தமிழரின் கொள்கை

தமது செயலால் வருவதே ஆயினும் எளிய முயற்சியால் வருவதை முன்னோர் மேன்மையாக மதித்திலர். தாம் பெரிதும் முயன்று தேடிய பொருளையே தமக்கு உரியதாகக் கருதும் கொள்கையுடன் வாழ்ந்தனர்.

2. பண்டைத் தமிழர் நனிநாகரிகராக விளங்கியமை குறித்தும் உயிர்க்குணங்களைப் போற்றி வாழ்ந்தமை குறித்தும் எழுதுக.

1.2 நாகரிகப் பான்மை

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" - நற்றிணை

தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு கொடுப்பினும் தம்மவர்கள் என்னும் எண்ணத்தால் அதனை உண்டனர். அவர்களோடு தொடர்ந்து பழகினர் என்கிறது நற்றிணை.

உயர்ந்த உள்ளம்

இந்த மேன்மையை அறிந்து நம் உள்ளம் உருகுகிறது. இத்தகைய மனப்பான்மையைத்தான் நம் முன்னோர் நல்ல நாகரிகம் என்று கருதினர் என்றால் அவர்கள் உள்ளம்தான் எவ்வளவு உயர்ந்தது ! தம்மைப் போன்ற மக்களிடத்தில் உயிர்நேயம் இல்லாதவரை 'நாகரிகர்' என்று சொல்வதற்கு வழியில்லையன்றோ ! ஆனால் பழந்தமிழரோ நனி நாகரிகராய்த் திகழ்ந்துள்ளனர் !.1.2

7. செப்புத்திருமேனிகளின் பொற்காலம் எது? ஏன்?

செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனச் சோழர் காலத்தைக் குறிப்பிடலாம். எண்ணிக்கையிலும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசிகள், செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்ததன் கடமை என்று எண்ணிச் செய்தளித்திருக்கின்றார்கள் போலும். சோழர் காலத்திய செப்புத் திருமேனிகள் கலை அழகும் கடவுள் தன்மையும் பொருந்தியவை. உயிர்பெற்றெழுந்து விட்டனவோ என எண்ணும் அளவிற்கு உயர்ந்த படைப்புகள், சிவன் மூர்த்தங்களும், திருமால் மூர்த்தங்களும் அவை எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ளனவோ அதன்படி செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருமேனியிலும் அக்காலச் சிற்பியின் கைத்திறன் பளிச்சிடுவதைக் காண முடிகிறது.

8. தமிழ் மன்னர் வளர்த்த ஓவியக் கலைகளை எங்கெங்குக் காணலாம்?

காணப்படும் இடங்கள்

தமிழ் மன்னர் வளர்த்த ஓவியங்களை அவர்கள் கட்டிய கோயில்களின் நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் கருப்பக்கிரகச் சுவர்களிலும் பிரகாரங்களிலும் விதானத்திலும் காணலாம். இவ்வாறு தீட்டப்பட்ட ஓவியங்கள் மாண்டூர்க் குகைகளின் வெளி



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மண்டலத்திலும் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலிய பல இடங்களிலும் காணப்பெறுகின்றன.

**பனமலை ஓவியம்**

பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலான ஆடல் மகளின் ஓவியம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் உணர்ச்சிப் பொலிவும் காண்போர் உள்ளத்தைக் கவர்வன. இவ்வாறு தமிழக மன்னர்கள் ஓவியக் கலையைக் கவின்மிகு முறையில் வளர்ந்ததால் ஓவியக் கலை இன்றும் உயர்ந்த நிலையில் உள்ளது.

6. **அறுமுறை வாழ்த்து - விளக்குக.**

வாழ்த்து

வாழ்த்துவதன் பயன் வளமுடன் வாழ்வதற்கே ! மக்கள் வாழ்வோடு தொடர்புடைய பொருள்களை வாழ்த்துவது தொன்று தொட்டு வரும் மரபாகும். அவ்வாறு வாழ்த்தப்படும் ஆறு பொருள்களில் ஆவும் ஒன்று.

அறுமுறை வாழ்த்து

'அறுமுறை வாழ்த்து' என்னும் தொல்காப்பியப் பகுதியுரையில் 'முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்' என்னும் அறுவரை வாழ்த்தல் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். மக்கள் நல்வாழ்விற்கு ஆவும் ஒரு காரணம் என்பதை உணர்ந்ததால் தமிழர் அதனையும் வாழ்த்தியுள்ளனர்.

7. **ஆ. தெய்வத் தன்மை உடையது :**

**நிரை கவர்தல்**

**ஆ.** அஃறிணை உயிர்தான். ஆயினும் உயர்திணை உயிராகிய மனிதனை விடவும் தூய்மை உடையதாக தெய்வத்தன்மை உடையதாகக் கருதப்பட்டது. ஒரு நாட்டிலுள்ள ஆநிரை கள்வராலோ பகைவராலோ கவரப்பட்டால் அது தூய்மைக் கேடாகவும் பேரிழப்பாகவும் கருதப்பட்டது. அதுவே கடும்போருக்குக் காரணமானது. நல்லாட்சி நடத்தும் மன்னன் கூட வேற்று நாட்டைக் கைப்பற்ற விரும்பினால் அந்நாட்டு ஆநிரையைத் தன் வீரர்கள் மூலம் கவர்ந்து வரச் செய்து பாதுகாத்தான்.

**பெருங்குற்றம்**

ஆன்மடி அறுத்தல் மாபெருங் குற்றமாமகக் கருதப்பட்டது. ஆக்கொலையோ அதை விடப் பெருங்குற்றம் என்று கருதப்பட்டது.

**வழிபாடு**

ஆவிற்குக் கோயல் கட்டி வழிபட்ட வரலாறு பகுத்தறிவு இல்லாத காலத்தில் நிகழ்ந்தது. ஆவிற்குக் கோ என்னும் பெயரும் உண்டு. கோமாதாவைத் தங்கள் குலமாதாவாக எண்ணி வழிபட்டனர்.

இவற்றின் மூலம் ஆ தெய்வத்தன்மை உடையது என்பதை உணரலாம்.

8. **கோவன் இடையன்**

முல்லை நிலத்து இடையருக்கு ஆ என்னும் பெயரிலிருந்து ஆயர் என்னும் பெயர் ஏற்பட்டது. அதுபோலவே ஆவிற்குக் 'கோ' என்னும் பெயரும் உண்டு.

கோ + அன் = கோவன்

ஆவிற்குரிய 'கோ' என்னும் பெயரோடு 'அன்' என்னும் ஆண்பால் விகுதி சேர்ந்து 'கோவன்' என்னும் பெயரானது.

கோவன் என்பது, இடையனைக் குறிக்கும். குறுகி கோன் ; என்றானது. அதனுடன் ஆண்பால் விகுதியாகிய 'ஆன்' சேர்ந்து கோன் + ஆன் ஸ்ரீ கோனான் (இடையன்) என்ற சொல் வந்தது.

**கோ - அரசன்**

கோவன் என்பதன் கடைசி எழுத்துகள் கெட்டு சோ என நின்று அரசனைக் குறித்தது. குடிமக்கள் ஆக்களைப் போன்றவர் ; அரசன் ஆயனைப் போன்றவன். எனவே, அரசன் கோவன் எனப்பட்டான். 'கோவனும் மக்களும்' என்று சீவகசிந்தாமணியில் வரும் தொடரில் கோவன் என்பது அரசனைக் குறிக்கிறது.

மேய்ப்பர்

அரசன் கையில் உள்ள செங்கோல் அரசன் ஆயன் போன்றவன் என்னும் கருத்தை வலியுறுத்துகிறது. இதனால் தான் கிறித்தவரின் சமய ஆசிரியர் (இயேசு கிறத்து) 'மேய்ப்பர்' என்று அழைக்கப்பட்டார்.

கோவன் - சிவன்

கடவுள் அனைத்து உலகிற்கும் அரசர், ஆயன் ஆநிரையைக் காப்பது கோல இறைவன் மக்களைக் காப்பாற்றி வருவதால் இறைவனும் கோவன் எனப்பட்டான். அகநானூறு - நித்திலக் கோவையுள் கோவன் என்ற சொல் சிவனைக் குறிக்கிறது. இவ்வாறு ஆ என்னும் சொல்லே அரசனையும் தெய்வத்தையும் குறிக்கும் 'கோ' ஆனது என்று பாவாணர் தெரிவிக்கிறார்?



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**நெடுவினா**

II. 2. நம் பழந்தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் குறித்து எழுதுக.

ஒற்றுமை உணர்வு

பழந்தமிழ் மாந்தர் பற்பல தொழில்களை உடையவர்களாக இருந்தனர். எனினும், எல்லாரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தது போலவே ஒருவருக்கொருவர் வேறுபாடு இல்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கை வாழ்ந்தனர். எல்லாரும் இந்நாட்டு மக்கள் எல்லாருக்கும் ஒரு தமிழ் மொழி உரியது. எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றதே என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கி இருந்தது. "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்பது அவர்களின் தீர்மானமான கொள்கை.

களங்கமற்ற அழகிய உள்ளம்

எல்லாரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்பர். தமக்குள் கலந்த உறவோடு திருமணம் செய்து கொள்வதும் உண்டு. தமிழர் ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும் கிடைத்தன. நிலையான தொழில், கலையாத உறவு ஆகியவற்றால் கவலையின்றி ஒற்றுமையாக மகிழ்ந்து வாழ்ந்தனர். இது அவர்களது களங்கமற்ற அழகிய உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது.

**ஈகைப் பண்பு**

I. 5. ஒருவரோடு ஒருவர் பேசி மகிழவும் விருந்தோம்பி வாழவும் தாமும் ஆதரவோடு வாழ்வதற்கும் இல்வாழ்க்கையே சிறந்தது என்று பழந்தமிழர் கருதினர். இயன்றவரை பிறருக்கு உதவி வாழ வேண்டும் என்பதே அவர்களின் எண்ணம். தமிழ் மாந்தர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்தே பொருள் தேடினர். இரத்தலைச் சிறுமையாகவும் ஈதலைப் பெருமையாகவும் கருதினர். அவ்வாறு தாங்கள் முயன்று தேடியதால் வரும் பொருளையே பிறருக்கு ஈந்தனர். இரவாதிருக்கும் நிலையைப் "பிறன்கடைச் செலாஅச் செல்வம்" என்று கூறி மகிழ்ந்தனர். ஆக்களுக்கு (பசுக்களுக்கு) நீர் வேண்டுமென்று இரப்பதும் இழிவாகக் கருதப்பட்டது.

கொள்கை

இதனால் தன் முயற்சியால் வருகின்ற பொருளையே ஒருவன் செலவு செய்வதற்கு உரியவன் என்னும் மேன்மையான கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர் என்று தெரிகிறது. அது மட்டுமின்றி அவர்கள் பிறர் பொருளை விரும்புகின்றவர்களும் அல்லர். இதனை, 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்' என்கிறது குறுந்தொகை.

ஆதரவுக்கு உரியோர்

எத்தகைய முயற்சியும் செய்ய இயலாதவர், கண் பார்வையற்றோர், ஊமையர், செவிடர் ஆகியோர் ஆதரவுக்கு உரியோர் என வகைப்படுத்தினர்.

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்...."

என்கிறது புறநானூறு. அத்தகை மாந்தருக்கு மனமுவந்து ஈந்தனர்.

"காணார் கேளார் கால்முடம் பட்டோர்
பேணா மக்கள் பேசார் பிணியோர்
படிவ நோன்பியர் பசி நோய் உற்றோர்"

ஆகியோர் ஆதரவிற்கு உரியோர் என்கிறது மணிமேகலை.

குறள் நெறி

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்ற எண்ணத்துடன் வாழ்ந்தனர். மக்கட்பிறவிக்குரிய உயிர்க்குணங்கள் உடையவராய் அவற்றைத் தகுதி அறிந்து பயன்படுத்தி நன்முறையில் வாழ்ந்தனர்.

இவ்வாறு, நம் பழந்தமிழ் மாந்தர் கடைப்பிடித்து வாழ்ந்த ஒற்றுமை உணர்வையும் ஈகைப் பண்பையும் விளக்கியுள்ளர் ஆசிரியர் இளவழகனார்.

## ஆவுந் தமிழரும்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

1.1 மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கு உள்ள தொடர்பு :

எல்லா நாட்டிலும் எந்நிலை நாகரிகத்திலும் ஆவானது அருமையாகப் போற்றப்படுகிறது. ஆயினும் தமிழ்நாட்டில் அது தலைசிறந்ததாகப் போற்றப்பட்டது.

மக்கள் நாகரிகம்

மக்கள் நாகரிகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நகரம் என நான்கு நிலைகளை உடையது. அவற்றுள் குறிஞ்சி நிலத்துடன்தான் தமிழர்க்கு முதலில் ஆவுடன் (பசுவுடன்) தொடர்பு இருந்திருக்க வேண்டும். ஏனெனில் முதன்முதலில் ஆவானது குறிஞ்சி



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நிலத்திற்கே உரிய விலங்காகும்.

ஆயர்

குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்திலிருந்த ஆயர் ஆட்டையும் மாட்டையும் பெருமளவு வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தனர். அவர்கள் ஆட்டை விட ஆவையே (மாட்டையே) சிறப்பாக வளர்த்தனர். ஆவை மேய்ப்பவர் ஆயர் எனப்பட்டனர். ஆ என்னும் பெயர் தற்காலத்தில் பெண்பாலையே குறிக்கிறது. முற்காலத்தில் இருபால்களுக்கும் பொதுவாக இருந்தது.

இவ்வாறு, மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்குத் தொடர்பு உண்டு என்று பாவாணர் எடுத்துரைக்கிறார்.

2. மாடு செல்வனம் போல் கருதப்படக் காரணங்கள் யாவை?

மாடு செல்வம்

மா என்னும் பெயரே ஆ என்று மாறியிருக்கலாம். ஆ என்பது முதலில் மாடு என்று பொருள்பட்டுப் பின் பசுவைக் குறித்தது. பழங்காலத்தில் மாடே மக்களின் செல்வமாக இருந்தது. அதனால் செல்வம் மாடெனப் பட்டது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யாவை".

என்ற குறட்பாவில் மாடு என்பது செல்வத்தைக் குறிக்கிறது.

உழவனுக்கு உதவும் மாடு

முல்லை நிலத்தில் உழவு தோன்றியது. அது மருத நிலத்தில் சிறப்படைந்தது. முல்லையில் புன்செய்ப் பயிரும் மருத நிலத்தில் நன்செய்ப் பயிரும் விளைவிக்கப்பட்டன. மாடு முல்லை, மருதம் ஆகிய இருநிலத்தவருக்கும் ஊனும் பாலும் தந்து உதவியது ; உழுதது ; நீர் இறைத்தது. இவ்வாறு இருவகை வேளாண்மைக்கும் உதவியது.

மாட்டின் பயன்கள்

மாட்டின் ஊனும் பாலும் மட்டுமல்ல அதன் தோல், கொம்பு, உரசனை (ரோசனை), வால்மயிர், சாணம் முதலியனவும் பயன்பட்டன. உணவை விளைவிக்க உதவிய மாடு தானும் உணவாகப் பயன்பட்டது. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய ஐந்தும் ஐயமுதம் (பஞ்சாமிருதம்) எனப்படும். மாடு இதனை பயன்தருவதால் தமிழர் மாட்டைச் செல்வமாகக் கருதினார்.

3. விரவுப் பெயர்களாக இலக்கணத்திற் சொல்லப்படுவன மாடுகளின் பெரும்பயன் கருதியே என்ற பாவாணரின் கூற்றை விளக்குக.

திணை வழுவுக்குச் சான்று

உழவர் ஆவையும் ஆ ஏற்றையும் (காளை மாட்டையும்) மிகவும் பயன்படுத்தி வந்தனர். அவை வருவதைக் கண்டு, 'என் அம்மை வந்தாள் ; அவளுக்குப் புல்லிடு' என்றும், 'என் அப்பன் வந்தான் அவனுக்குத் தண்ணீர் காட்டு' என்றும் அன்புரைகளைக் கூறினர். இவை திணை வழுவுக்குச் சான்றாக இலக்கணத்தில் கூறப்பட்டன.

விரவுப் பெயர்கள்

சாத்தன் சாத்தி, கொற்றன் கொற்றி, முடவன் முடத்தி, கொடும்புற மருதன், கொடும்புற மருதி முதலிய மக்கள் பெயர்களையே ஆவுக்கும் ஆவேற்றுக்கும் இட்டு வழங்கினர். அவை இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் என மூவகை விரவுப் பெயராகத் (பொதுப் பெயராகத் ) தொல்காப்பியத்தில் கூறப்பட்டன.

சான்றுகள்

'சாத்தன் வந்தது', 'முடவன் வந்தது' சாத்தன் புல் தின்னும், 'சாத்தி கன்றீனும்' முதலியன சொல்லதிகாரத்தின் உரையில் உள்ள சான்றுகளாகும்.

ஆகவே, விரவுப் பெயராக இலக்கணத்தில் சொல்லப்படுவன மாடுகளின் பெரும் பயனைக் கருத்தில் கொண்டே என்பது விளங்குகிறது.

4. விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

உவமையாகு பெயர்

காளை மக்களுக்காக மிகவும் உழைத்ததால் 'மாடு போல் உழைத்தல்' என்று கூறும் வழக்கம் தோன்றியது. காளை, விடலை என்னும் பெயர்கள் உவமையாகு பெயராக மறவர்க்கும் குறும்பரசர்க்கும் வழங்கி வந்தன.

பகடு

இடையூற்றைப் பொருட்படுத்தாமல் எடுத்த செயலை முடிக்கம் ஆற்றல் உடையவன் 'பகடு' எனப் போற்றப்பட்டான்.

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து" (குறள் 624)

என்ற குறட்பாவில் 'பகடு' என்பது காளை போன்ற ஆற்றல் உடைய ஆண்மகனையே குறிக்கிறது.

ஏறு தழுவல்

இளைஞரின் வலிமையை அறிவதற்கு 'ஏறு தழுவல்' ஓர் அளவையாகக் கொள்ளப்பட்டது. முல்லை நிலத்து ஆயர் ஏறு தழுவிய



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இளைஞர்க்கே தங்கள் மகளை மணம் செய்து கொடுத்தனர்.

பொருத்தமானதே

ஆவின் வாலையும் எருதின் வாலையும் பற்றிக் கொண்டு ஆழமான ஆற்றைக் கடந்தனர். எருது ஊர்தியாக உதவியது ; பொதி சுமந்தது ; இன்றும் வண்டி இழுக்கிறது.

5. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விரிந்துரைப்பன யாவை?

பழமொழிகள்

ஆ. ஆவேறு இரண்டுமே மக்களுக்குப் பயன்படுவன. அவற்றுள் ஆவே அமைதி

## உரைநடை - 6 நீதி நூல்களில் இலக்கிய நயம்

**பெருவினாக்கள்**

1. நீதி நூல்களின் பொதுவான இயல்பைக் குறித்து எழுதுக.

நீதி நூல்களின் இயல்பு

நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள், இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதித்தும், இவ்வாறு நடத்தல் கூடாது என்று விலக்கியும் செல்வதுதான் நீதி நூல்களின் இயல்பு.

பொதுவான இயல்பு

இலக்கியங்கள் இன்பம் தருவன. ஆனால் நீதி இலக்கயங்கள்- நீதி நூல்கள் இன்பம் தருவதுடன் மனித வாழ்வை சீர்படுத்தவும் மேம்படுத்தவும் வேண்டும். அத்தகைய, நீதி நூல்களில் இலக்கிய நயம் - கவி நயம் காண்பது அரிது.

இவையே நீதிநூல்களின் பொதுவான இயல்புகளாகும்.

2. கவிதையின் நோக்கம் குறித்து, ஆசிரியர் சிதம்பரநாதர் கூறுவன யாவை?

கவிதை இன்பத்திற்கே !

நல்ல கவிதையின் நோக்கம் மக்களுக்கு நீதி கூறுவதன்று என்று மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். நம் நாட்டிலும் சிலர் 'காவியத்தில் இலக்கியத்தில் வரும் கருத்தை நோக்க வேண்டா ; இன்பத்தை மாத்திரம் கொள்ளுங்கள்' என்கிறார்கள். கவிதை இன்பத்திற்கே ! என்னும் கருத்து ஒப்புக் கொள்ளக் கூடியதன்று.

நுண்கலைகளின் நோக்கம்

சிற்பம், ஓவியம், நாட்டியம் போன்றவை நுண்கலைகள், இவற்றைப் போல் இலக்கியமும் ஒரு நுண்கலைதான். நுண்கலைகள் இன்பம் தருவன, இலக்கியமாகிய கலையும் இன்பம் தர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவது உண்மைதான்.

இலக்கியத்தின் நோக்கம்

ஆனால், இந்த அருங்கலைகளுக்கும் இலக்கியமாகிய கலைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. நுண்கலையின் நோக்கம் இன்பம் தருவது மட்டுமே. கவிதை இலக்கியத்தின் நோக்கமோ இன்பம் தருவதுடன் மட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கையைச் சீர்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு, கவிதையின் நோக்கம் குறித்து ஆசிரியர் சிதம்பரநாதன் தெளிவுபடுத்துகிறார்.

4. உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறளமைத்திருப்பதை விளக்குக.

சில உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் மிகுந்த நயமுண்டாகக் குறள் அமைத்துள்ளார். அதற்குச் சான்றாக ஒன்றைக் காண்போம்.

சான்று

"அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்".

கருத்து

பறை ஒரு செய்தியைப் பலர் காதில் கொண்டு போய்ச் சேர்ப்பது போல இரகசியத்தைக் கயவர் (கீழ்மக்கள்) பலரிடம் சென்று தெரிவித்து விடுகிறார்கள் என்பது இக்குறட்பாவின் கருத்து.

நயம்

யாரோ ஒருவர் ஒரு செய்தியை இரகசியம் என்று ஒருவனிடத்தில் தெரிவித்தார். அவன் என்ன செய்தான் தெரியுமா? அதனை மூட்டை கட்டிக் கொண்டு பலரிடம் போனான். அந்த மறைபொருளாகிய சுமையை அவனால் தாங்க முடியவில்லை. அதனால், அதைக் கொண்டு போய்ப் பலருக்கும் பங்கு போட்டுப் பிரித்து, எடுத்துக் கொடுத்தான். அவனை 'அறைபறையன்னர்' எனத் திருவள்ளுவர் கூறிய அழகு பாராட்டத்தக்கது.

அந்த இரகசியம் அவனுக்குப் பாரமாக இருந்தது என்பதும் அதனைக் கொண்டு போய்ப் பிறருக்குச் சேர்த்தான் என்பதும் 'உய்த்து' என்ற சொல்லால் பெறப்படுகின்றன. 'உய்த்து' என்ற சொல் இக்குறட்பாவிற்கு உயிர்நிலை, அதை எடுத்துவிட்டு



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வேறு எந்தச் சொல்லை அந்த இடத்தில் சேர்த்தாலும், இவ்வளவு சிறந்த நயங்கள் தோன்றமாட்டா. இச்சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தகுந்த இடம் பார்த்து வைத்த பெருமை திருவள்ளுவருடையது.

நீதி

கயவரிடம் இரகசியத்தைக் கூறக் கூடாது என்ற நீதியை எவ்வளவு நயம்படத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

5. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?

நாலடிப்பாட்டு

"அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று".

கருத்து

அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்த பெருஞ்செல்வரும் ஒரு காலத்தில் கூழை இரந்துண்ண நேரிடலாம். ஆதலால், செல்வத்தை ஒரு பெரும் பொருளாக மதிக்க வேண்டா என்பது இச்செய்யுளின் மேலோட்டமான கருத்து.

நயம்

ஒன்றிற்கு ஒன்று மறுதலையாக வைத்துச் சொல்லப்பட்ட அழகே இப்பாடலின் நயத்திற்குக் காரணம்

| வ.எண். | அன்று | இன்று |
|---|---|---|
| 1. | அன்று அறுசுவை உணவு உண்டான். | இன்று உப்பில்லாக் கூழ் குடிக்கிறான் |
| 2. | ஆசனத்தில் அமர்ந்து உண்டான். | இன்று நடந்து கொண்டே குடிக்கிறான் |
| 3. | மனைவி ஊட்ட உண்டான். | தனியாகக் கூழைக் குடிக்கிறான் |
| 4. | மறுபிடி சோறு வேண்டாம். வேண்டாம் என மறுத்து உண்டான். | ஒரு பிடிச்சோறு இல்லாமல் வறிஞனாகி இறக்கிறான். |

நீதி

எத்துணைச் சிறந்த செல்வனும் மிகவும் இழிந்த வறுமை நிலையை அடையலாம். ஆதலால், செல்வம் இருக்கும் போதே 'அறம் செய்க' என்ற கருத்தை ஒன்றிற்கு ஒன்று மாறுபட - சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது இந்நாலடி.

**II.** 1. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

முன்னுரை :-

நீதி கூறும் போது நயம்படச் சொல்வதற்குச் சாதாரண மனிதனுக்குத் தெரியாது. ஆனால், வள்ளுவர் நீதியைக் கூட நயம்படக் கூறுவதில் வல்லவர்.

சான்று : 1

"கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்".

குறட்பாவின் கருத்து

பொருளை வைத்துக் கொண்டு ஒருவர் இல்லை என்று சொல்கிறார். அச்சொல்லைக் கேட்டவுடன் இரப்பவரின் உயிர் போய்விடுகிறது. இல்லை என்று மறைப்பவர் உயிர் எங்கே போய் ஒளிந்து கொண்டதோ தெரியவில்லையே ! இதுவே இக்குறட்பாவின் கருத்து.

நயம்

ஒருவன் தன்னிடம் ஒரு பொருள் வேண்டி வந்திருக்கிறான் என்பதை அறியும் செல்வன் கூசாமல் 'இல்லை' எனச் சொல்கிறான். இல்லை என்ற சொல்லைக் கேட்டவுடன், இரந்து நின்றவனின் உயிர் போய்விடுகிறது. இல்லை என்றவனிடமோ சொல்லுகிறவன் வாய்வழியே வந்தது. ஆனால் அவனை ஒன்றும் செய்யவில்லையே ! என்னே விந்தை ! இல்லை என்று சொன்னவனின் உயிர் அந்த நேரத்தில் எங்கே போய் ஒளிந்து கொண்டதோ தெரியவில்லையே ! இல்லை என்ற சொல்லைக் கேட்டவன் மாய்ந்தான்; கூறியவன் மாயவில்லையே !

நீதி

இரக்கின்ற ஒருவனுக்கு இல்லை என்று கூறாது பொருள் உள்ளவர் கொடுக்க வேண்டும் என்ற நீதியை வள்ளுவர் இத்துணைச் சிறப்பாக வலியுறுத்தியுள்ளார்.

சான்று : 2

குறள்

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கெடுக உலகியற்றி யான்”

கருத்து:

இவ்வுலகைப் படைத்தவன் இரத்தலையும் ஒரு தொழிலெனப் படைத்து அத்தொழில்கள் சிலர் உயிர் வாழ்வாராக என்று விதித்திருந்தால் அவனும் தெருவெல்லாம் அலைந்து திரிந்து துன்புறட்டும் என்பது இக்குறட்பாவின் கருத்து.

இலக்கிய நயம்

எவ்வளவு இழிவானது?

உலகில் இன்னின்னார்க்கு இன்னின்னது தொழில் எனப் பிரமன் வகுத்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அத்தொழில்களில் ஒன்றாக யாசித்தலையும் சேர்த்து எண்ணினானா பிரமன்?

அவன் ஒரு பாவி

இழிவான ஒன்றை எனக்கும் என் போன்றவர்களுக்கம் ஒரு தொழிலாகப் பிரமன் வகுத்தான் என்றால் அவன் ஒரு பிறவி எடுக்கட்டும். அப்பிறவி மானிடப் பிறவியாய் இருக்கட்டும். மானிடனாய், மானம் விட்டு. இரவலனாய் வந்து சேரட்டும். போகிற இடத்தில் உடனே உணவை - காசை- பிச்சையைப் -பெறாமல், பல வீடுகளில் பல தெருக்களில் அலையட்டும் ! அலைந்து கெட்டொழியட்டும் !

இலக்கிய இன்பம்

இவ்வாறு ஒரு பிச்சைக்காரன் கருதியதாக் கனாக் கண்டார் போலும் திருவள்ளுவர். எவ்வளவு பெரிய கனவை எத்துணைக் குறுகியஅடிகளில் தெரிவித்துவிட்டார் !

முடிவுரை

இவை நீதி கூறும் போது நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதற்கான சான்றுகளாகும்.

2. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாய் அறநெறிச்சார் கூறுவன யாவை? போற்றி ! போற்றி,

உலகில் இச்சகம் பேசி வாழும் மாந்தருள் ஒருவனை முனைப் பாடியார் என்னும் புலவர் ஒருவர் பார்க்கிறார். ஒரு நாள் ஒருவரும் அறியாமல் அவன் வீட்டினுள் நுழைந்து, அவன் செய்வனவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவன் போற்றி பாரியே போற்றி, போற்றி காரி, போற்றி ஓரி, போற்றி கன்னா, போற்றி பேகா என்று என்னென்னவோ உருப்போட்டபடி இருக்கிறான். இதனை மறைத்திருந்து கவனிக்கிறார் புலவர். அவன் வெளியே புறப்பட்டுப் போகிறான். புலவரும் அவனைப் பின் தொடர்கிறார்.

இறைவனே! அருள் புரிக!

புதுப் பணக்காரன் ஒருவன் வீட்டில் அவன் நுழைகிறான். போற்றி ! போற்றி என்று தொடங்கி, அடியேனைக் காத்தருள வேண்டியது ஆண்டவனை ஒத்த தங்களால் தான் இயலும். இறைவனே அருள் புரிக! தங்கள் அருள் நோக்கி வாழ்கிறேன் ; பயிரும் மழை எப்படியோ, என் போன்ற ஏழையருக்குத் தாங்கள் அப்படி” என்று சொல்லிப் பின்னும் பல அடுக்கத் தொடங்கினான்.

அறநெறிச் சாரப் பாடல்

பார்த்தார் புலவர் ; பாடினார் ஒரு பாட்டு.

“போற்றியே போற்றியே யென்று புதுச் செல்வம்

தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டே போல் ஆற்றப்

பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம் வயிற்றுப் பெருமான் பொருட்டு”

என்பதே அப்பாட்டு.

இலக்கிய நயம்

இச்சகம் பேசுவோன் இழிந்தவன் என்று நேரே சொல்லாமல், அவன் வயிற்றினை மகேசுவரனாக்கிப்

பெருமைப்படுத்துவது போல் சிறுமைப்படுத்திய திறம் வியப்பிற்குரியது. வயிறாகிய தம்பிரான் இருக்கிறாரே அந்தக் கடவுளைக் காப்பாற்ற எத்தனை பொய் பேசுகிறாார்கள் மனிதர்கள்! இப்படிப் பொய்யைச் சொல்லி வயிறு வளர்க்க வேண்டுமா?என்று முனைப்பாடியார் கேட்பது போல் உள்ளது. இப்படி வளர்க்கப்படும் வயிறு வயிறா? இல்லை குதிரா? எனப் புலவர் கேட்பது போலத் தோன்றுகிறது. வயிற்றுச் சாமியை நம்பி உண்மைக் கடவுளை மக்கள் விடுகிறார்களே! எனப் புலவர் கலங்குவது போலத் தோன்றுகிறது.

நீதி

“ வயிற்றை வளர்ப்பதற்காக இச்சகம் பேசித் திரிய வேண்டாம்” என்ற நீதியை “ வயிற்றுப் பெருமான் பெருட்டு” என்ற ஒரே தொடரால் அறநெறிச்சாரச் செய்யுள் எத்துணை அழகாக விளங்கி காட்டுகிறது.

**II.** ல, ள, ழ - வேறுபாடு அறிந்து வாக்கியத்தில் அமைக்க:

1. அலை - கடல்அலை

அழை - கூப்பிடு



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | | |
|---|---|---|
| அளை | - | தயிர் |
| அலை | - | ஆழிப் பேரலை, மிகுந்த வலிமையுடையது |
| அழை | - | அவளைஅழைத்துவரச் சென்றாள் |
| அளை | - | வேனிற் காலத்தில் அளைச் சோறு உடம்பிற்கு நல்லது |

2.

| | | |
|---|---|---|
| இலை | - | மரம், செடி, கொடிகளின் இலை |
| இழை | - | நூல் இழை |
| இலை | - | ஆடு இலை தழைகளை உணவாகக் கொள்ளும். |
| இழை | - | இழைகளால் ஆடை நெய்தனர் |
| இளை | - | அவன் உடல் நலமின்றி இளைத்துப் போனான் |

3.

| | | |
|---|---|---|
| உலை | - | சமைக்க உலை வைத்தல், உலைக்களம் |
| உழை | - | உழைப்பு |
| உளை | - | பிடரிமயிர், சேறு |
| உலை | - | கொல்லக் உலைக்களத்தில் கருவிகள் செய்தான் |
| உழை | - | உழைத்தால் உயர்வுண்டு |
| உளை | - | உழவர் உளையில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியம் |

4.

| | | |
|---|---|---|
| ஒலி | - | ஓசை |
| ஒழி | - | அழித்துவிடு |
| ஒளி | - | வெளிச்சம், பதுங்கிக் கொள் |
| ஒலி | - | வாகனப் பெருக்கத்தால் ஒலி மாசு ஏற்படுகிறது. |
| ஒளி | - | சிறுவர்கள் ஒளிந்து விளையாடினார்கள். |
| ஒழி | - | போகித் திருநாளில் வேண்டாத பொருட்களை ஒழித்துவிடுவர் |

5.

| | | |
|---|---|---|
| கலை | - | வித்தை. கலைந்து போதல் |
| கழை | - | மூங்கில் |
| களை | - | ஆயகலைகள் அறுபத்தி நான்கு என்பர் |
| கழை | - | கழைக் கூத்தாடிகளின் வாழ்க்கை அந்தரத்தில் அமைகிறது. |
| களை | - | உழவன் களை நீக்கி பயிர் காத்தான் |

6.

| | | |
|---|---|---|
| கிலி | - | அச்சம், பயம் |
| கிழி | - | துண்டாகக் கிழி கோடு கிழி |
| கிளி | - | ஒரு பறவை |
| கிலி | - | கிலிதவிர் என்பது பாரதியின் வாக்கு |
| கிழி | - | ஒரு வினா - விடை எழுதி முடித்ததும் கோடு கிழித்தேன் |
| கிளி | - | பச்சைக் கிளி பார்ப்பதற்கு அழகாக இருக்கும் |

7.

| | | |
|---|---|---|
| தலை | - | முதன்மை, சிரசு |
| தழை | - | புல், இலை முதலியன |
| தளை | - | கட்டுதல் |
| தலை | - | தலைக்கு ஒரு மாம்பழம் கொடு |
| தளை | - | நம் நாடு பலநூறு ஆண்டுகள் அடிமைத் தளையில் கிடந்தது. |

8.

| | | |
|---|---|---|
| தாலி | - | திருமணச் சடங்கில் கணவன் மனைவிக்குத் தாலி கட்டுவது நமது பண்பாடு |
| தாழி | - | முது மக்கள் தாழி அருங்காட்சியகத்தில் உள்ளது |
| தாளி | - | அம்மா தாளிக்கும் |

## 7. மனிதர் வாழ்க

1. முன்னேற்றம் என்பது பற்றி மு. வ. உரைப்பன யாவை

முன்னேற்றம்

உலகம் படிப்படியே முன்னேறி வருகிறது. அதன் முன்னேற்றத்தை உணராத காரணத்தால் சிலர் முற்போக்கை எதிர்க்கிறார்கள். சிலர் உலகம் முன்போல் இல்லையே என்று எண்ணிச் சோர்வு அடைகிறார்கள். சிலர் உலகம் முன்போல் இல்லையே என்று எண்ணிச் சோர்வு அடைகிறார்கள். சிலர் தாம் விரும்புவது போல் இல்லையே என்று உலகத்தைப் பழிக்கிறார்கள்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நல்ல மாறுதல்கள்

உலகம் முன்னேறுகிறது என்றால், மலையும் காடும் ஏதோ மாறுதல் அடைகின்றன என்பது கருத்து அன்று. உலகத்தில் உள்ள மக்களின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதே கருத்து ஆகும். இந்த முன்னேற்றத்திற்கு இடையிடையே பல நிலைகளில் மனிதர் தடுமாறியது உண்டு, தடுமாறித் தடுமாறிப் புதிய புதிய அறிவும் ஊக்கமும் பெற்று மனிதர் முன்னேறி வந்திருக்கின்றனர்.

2. முதல் தடுமாற்றம் என்பது மு. வ. குறிப்பது யாது?

சிறுவன்

பள்ளிக் கூடத்துக்கு சிறுவன் ஒருவன் எழுதக் கற்றுக் கொண்ட பிறகு, பலகையும் பலப்பமும் தனக்குச் செய்த உதவியைப் போற்றுவது இயற்கை. ஆனால் எழுத்துக் கல்வி பெருமை உடையது என்று உணராமல், பலகையும் பலப்பமும் உயர்ந்தவை, சிறந்தவை என்று மயங்கினால் , அதை அவனுடைய வாழ்வில் நேர்ந்த ஒருதடுமாற்றம் என்றே கூற வேண்டும். அப்படிப்பட்ட தடுமாற்றங்கள் மனித வரலாற்றில் பல நேர்ந்தது உண்டு

மன்னன்

மக்கள் கூடிவாழத் தொடங்கியபோது அவர்களுள் ஒருவன் தலைவனாக இருந்து வழிகாட்டினான். அவன் தலைவன் என்பதற்காக அவன் தலையில் ஒரு முடிசூட்டிழ அவன் கையில் ஒரு கோலும் கொடுத்தனர் அவ்வாறு சில தலைமுறைகள் நடந்த பிறகு, அந்த முடியும் கோலும் உயர்ந்தவனாகப் போற்றப்பட்டன. அவற்றை உடையவன் மன்னன் எனப்பட்டான்.

முதல் தடுமாற்றம்

மக்களுக்காக மன்னன் வாழ வேண்டும் என்பதை மறந்து, மன்னனுக்காக மக்கள் வேண்டும் என்னும் மூடநம்பிக்கை பிறகு ஏற்பட்டது. முடியும் கோலும் உடையவன் எவனாக இருந்தாலும், அவனைத் தெய்வமாகப் போற்றி அடிபணிய வேண்டும் என்ற மூட நம்பிக்கை வளர்ந்தது. இவ்வாறு பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. பிறகு இந்தத் தடுமாற்றம் தீர்வதற்கு ஒரு வழி ஏற்பட்டது. பலகையும் பலப்பமும் சிறந்தவை அல்ல என்று பள்ளிக்கூடச் சிறுவன் உணர்வது போல், முடியும் கோலும் சிறந்தவை அல்ல என்று மனிதர் உணரத் தொடங்கினர்.

தகுதி

ஆகவே, ஒரு நாட்டை ஆள்வதற்குத் தகுதி உடையவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எண்ணினர். அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு வழி வகுக்க வேண்டும் என்று முயன்றனர்.

தேர்தல் முறை

அந்த முயற்சியால் ஏற்பட்து தான் தேர்தல முறை. தேர்தல் முறையும் நெடுங்காலமாகச் சிற்றூர்களில் இருந்து வந்திருக்கின்றது. பலர் கூடிக் கையை உயர்த்துவதன் மூலமாகவும் குட ஓலையிலிருந்து தேர்ந்தெடுப்பதன் மூலமாகவும் நம் நாட்டிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே தேர்தல் முறை இருந்து வந்தது.

செல்வமும் செல்வாக்கும்

அந்தத் தேர்தல்களிலும், முடியும் கோலும் பெற்றிருந்த சிறப்பை வேறு இரண்டு கருவிகள் பெற்றுவிட்டன. அவை செல்வமும் செல்வாக்கு உடையவர்களும் நிலபுலம் படைத்துச் செல்பவராக வாழ்பவர்களும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுத் தலைவராக வர முடிந்தது. முடியும் செங்கோலும் சிறப்பாகப் போற்றப்பட்டது போல, செல்வமும் செல்வாக்கும் மக்களுக்குப் பயன்படுவது மாறி, நாட்டு மக்கள் எல்லாரும் ஒரு சிலருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் காப்பதற்காகப் பயன்பட்டனர். இது இரண்டாவது தடுமாற்றநிலை. ஆகவே, தேர்தலும் ஒரு தடுமாற்றமே என மு.வ உரைக்கிறார்.

4. ஒரு படி முன்னேற்றம் என்று மு.வ. உரைப்பது யாது?

ஒரு படி முன்னேற்றம்

முடியும் கோலும் சிறப்பாக இருந்த காலத்திடல் அவற்றைக் காப்பதற்காகப் படைகளும் படைக் கருவிகளும் பயன் பட்டன. இன்றைய ஆட்சி முறையிலும் படைகளும் படைக் கருவிகளும் அவ்வாறு பயன்படுகின்றன. ஆயினும், அவற்றின் மதிப்பும் சிறப்பும் குறைந்து வருகின்றன. இதை ஒரு படி முன்னேற்றம் என்றே கூறலாம்.

மயக்கம் தீரும்

இன்று கட்சிகளைக் காப்பாற்றப் பயன்படுவன மேடைகளும் பத்திரிகைகளும் தான். அன்றைய மக்கள் படைகளையும் படைக் கருவிகளையும் கண்டு மயங்கியது போல், இன்றைய மக்கள் பத்திரிகைகளையும் கற்றும் கேட்டும் மயங்குகிறார்கள் . இந்த மயக்கமும் விரைவில் தீர்ந்து விடும்.

தெளிவு

பத்திரிகைகளில் எழுதப்படுவன எல்லாம் உண்மை அல்ல. மேடையில் பேசப்படுவன எல்லாம் உண்மை அல்ல, அவற்றைக் கற்றாலும் கேட்டாலும் உண்மைகளளை ஆராயத் தெரிந்து கொள்ள வேண்டும். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற தெளிவு மக்களுக்கு ஏற்படும் காலம் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தெளிவு ஏற்பட்ட பிறகு தான், போர்ப் படைகளைக் கண்டு மக்கள் மயங்காதது போல், கட்சித் தேர்தல்களைக் கண்டும் மயங்க மாட்டார்கள்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

5. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?

மனித வாழ்வோ பெரியது

முடி, கோல், பணம், பதவி, கட்சி தேர்தல் என்னும் எந்தப் பெயரைச் சொல்லியும் மக்களை இனிமேல் ஏமாற்ற முடியாது. இவை எல்லாம் மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள். கருவிகள் போகுமானாலும் இடையூறாகத் தோன்றுமானாலும் அவற்றைப் புறக்கணிக்க மனிதர்க்கு உரிமை உண்டு. அவை எல்லாம் சிறியவை. ஆனால் மனித வாழ்வோ பெரிது.

அடிப்படைகள்

மனித வாழ்வில்உண்மையான அடிப்படையாக உள்ளவை இரண்டு ஒன்று கூட்டுறவு மற்றொன்று உழைப்பு, இந்த இரண்டும் உள்ளவரையில மனித வாழ்வுக்கு எந்தக் குறையும் இல்லை. கூட்டறவுக்கு இடையூறு வந்தால் அதை வெல்ல அடிப்படை வேண்டும். உழைப்புக்கு பஞ்சம் வந்தால், அதை டிவல்ல உழுநிலம் வேண்டும்.

ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம்

சுரண்டுவோரும் சுரண்படப்படுவோரும் இல்லாத சாதி, சமயம் கட்சி முதலியவற்றால் ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாயம் அமைவதற்கு இதுவே வழியாகும்.

**II.** 1. தேர்தல் முறைகள் பற்றி மு.வ எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?

முடியும், கோலும் உடையவன் எவனாக இருந்தாலும் , அவனைத் தெய்வமாகப் போற்றி அடிபணிய வேண்டும் என்ற மூடநம்பிக்கை வளர்ந்தது. இவ்வாறு , பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. பிறகு இந்தத் தடுமாற்றம் தீர்வதற்கு வழி ஏற்பட்டது பலகையும் பலப்பமும் சிறந்தவை அல்ல என்று பள்ளிக் கூடச் சிறுவன் உணர்வது போல் முடியும் கோலும் சிறந்தவைஅல்ல என்று மனிதர்ட உணரத் தொடங்கினர்.

தகுதி

ஆகவே, ஒரு நாட்டை ஆள்வதற்குத தகுதி உடையவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எண்ணினார். அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு வழி வகுக்க வேண்டும் என்று முயன்றனர்.

தேர்தல் முறை

அந்த முயற்சியால் ஏற்பட்டது தான்தேர்தல் முறை. தேர்தல் முறையும் நெடுங்காலமாகச் சிற்றூர்களில் இருந்து வந்திருக்கின்றது. பலர் கூழக் கையை உயர்த்துவதன் மூலமாகவும் குட ஓலையிலிருந்து நம் நாட்டிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே தேர்தல் முறை இருந்து வந்தது.

செல்வமும் செல்வாக்கும்

அந்தத் தேர்தல்களில், முடியும் கோலும் பெற்றிருந்த சிறப்பை வேறு இரண்டு கருவிகள் பெற்று விட்டன. அவை செல்வமும் செல்வாக்கும் பரம்பரையாகச் செல்வாக்கும் உடையவர்களும் நிலபுலம் படைத்துச் செல்வராக வாழ்பவர்களும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுத் தலைவராக வர முடிந்தது. முடியும் செங்கோலும் சிறப்பாகப் போற்றப்பட்டது போல, பயன்படுவது மாறி, நாட்டு மக்கள் எல்லாரும் ஒரு சிலருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் காப்பதற்காகப் பயன்பட்டனர். இது இரண்டாவது தடுமாற்றமில்லை. ஆகவே தேர்தலும் ஒரு தடுமாற்றமே என மு.வ உரைக்கிறார்.

கட்சி அமைப்பு

அடுத்த நிலையில் மற்றொரு மாறுதல் நேர்ந்தது அந்தச் செல்வாக்கு ஏன் பரம்பரையாக இருக்க வேண்டும்? புதியவர்கள் ஏன்தம் திறமையாலும் உழைப்பாலும் செல்வாக்குப் பெற்றுத் தலைமை பெறக் கூடாது? இவ்வாறு சிலர் எண்ணிய போது ஒரு வழி தோன்றியது. தேர்தல் காலத்தில் ஆள் திரட்டித் துன்புறாமல், அதற்கு முன்னிருந்தே ஒரு கூட்டத்ததைச் சேர்த்துக் கட்டுப்படுத்தி வைத்து, அந்தக் கூட்டத்தின் துணையையும் உதவியையும் கொண்டு தேர்தலில் வெற்றிபெற வழிவகுத்தனர். அது தான் கட்சியமைப்பு என்பது. சிலர் ஒரு கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெறுவதைக் கண்டதும் வேறுசிலர் சேர்த்து மற்றொரு கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெற முயன்றனர்.

கட்சிகள் கட்சிகளோடு மோதுதல்

கட்சிகள் கட்சிகளோடு மோதுதல் இயற்கை ஆயிற்று. மக்களின் வாழ்வுக்காக முதலில் கட்சிகள் தோன்றின. ஆனால் இன்று உள்ள நிலையில், கட்சிகள் வாழ்வதற்காகவே மக்கள் கருவியாகப் பயன்பட வேண்டியுள்ளது. இதுவும் ஒரு தடுமாற்றமில்லை.

இவையே தேர்தல் முறைகள் பற்றி மு. வ. எடுத்துரைக்கும் கருத்துகளாகும்.

----------

## 8. தமிழ்நாட்டுக் கலைச் செல்வங்கள்

### தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினர்

**1. தமிழர்கள் பழங்காலந்தொட்டே கலைகளையும் பேணி வந்துள்ளனர் என்பதை விளக்கு.**

தமிழகத்தில் பல கலைச் செல்வங்களைக் காண்கிறோம். அவற்றைக் காணும் போது தமிழர்கள் மிகப் பழங்காலம் தொட்டே கலைகளைப் பேணிப் பாதுகாத்து வந்திருப்பதை அறிய முடிகிறது "ஆயக்கலைகள் அறுபத்து நான்கு" என்ற முதுமொழிக்கு ஏற்ப பலவகையான கலைகளைத் தமிழர் சிறப்புற வளர்த்திருக்கின்றனர்.கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியன மிகமிகப் பழங்காலும் முதலே தமிழகத்தில் சிறப்புப் பெற்று விளங்கியிருக்கின்றன.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

2. இலக்கியங்களில் காணப்படும் கட்டடக் கலைச் செய்திகளைக் கூறுக.

கட்டடக் கலை என்றாலே கோயில்களின் கட்டடக்கலையைத் தான் கூற முடிகிறது. காரணம் தமிழர்களின் கட்டடக்கலை இன்று வரை உயர்ந்து நிற்பவை கோயில்களே! மற்றப்பழ அரசர்கள் வாழ்ந் அரண்மனைகள் பற்றியோ, செல்வந்தர்கள் வாழ்ந்த மாளிகைகளைப் பற்றியோ பொதுமக்களின் வீடுகளைப் பற்றியோ கூறமுடியவில்லை. ஏனெனில், அவற்றைப் பற்றிய செய்திகள் கிடைத்தில், இலக்கியங்களில் மன்னர்கள் வாழந்த அரண்மளைகள் பற்றிய செய்திகள் உள்ளனர் நகர அமைப்புப் பற்றிப் பேசப்படுகிறது யானை மீது போர்வீரன் ஒருவன் அமர்ந்து தன் கையில் மிக உயர்ந்த கொடியை ஏந்திச் செல்லும் அளவுக்கு உயர்ந்த வாயில்கள் அரண்மனைகளில் இருந்திருக்கின்றன; ஐவகை நிலங்களுக்கு ஏற்பச் சிறு வீடுகள் கட்டிக் கொண்டு மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் அவற்றின் நேரிடைச் சான்றுகள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை.

**தமிழகக் குடைவரைக் கோவில்களை பற்றி எழுதுக.**

1. பிள்ளையார் பட்டி

கோயிற் கட்டடக்கலை என்று எடுத்துக் கொண்டால் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் நாம் கூற முடியும் தமிழகத்தின் தென்பகுதியான இராதமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி என்னும் ஊரின் குடைவரைக் கோயிலே தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானதாகும்.

குடைவரைக் கோயில்கள்

இது பாண்டியர்களது படைப்பாகும். இதனை அடுத்து, தமிழகத்தின் பல பகுதிகளில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை பல்லவர்கள் , பாண்டியர்கள், அதியர், முத்தரையர் ஆகியோர் அமைந்தவை ஆகும். கி. பி. 9 ஆம் நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் பணி நின்று விட்டது.

கனிக் குன்றுகள்

தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலங்களில் இருந்திருக்கிறது. மாமல்லபுரத்தில் உள்ள ஐந்து ரதங்களும் கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும் முறையே அவர்களது படைப்புகளாகும். குடைவரைக் கோயில் அமைக்கும் முறை கி.பி. 8 ஆம் நூற்றாண்டுடன் நின்று விட்டது.

2. கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் பற்றிக் கூறுக.

கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற் பணி பல்லவர், பாண்டியர், விசயநகர மன்னர்கள், நாயக்கர் காலங்களில் காண்கிறோம்.

| | காலம் | ஊர் | கோயில் |
|---|---|---|---|
| 1. | பல்லவர்கள் காலத்தில் எழுந்தவை | மாமல்லபுரத்தில் அமைத்துள்ள | கடற்கரை கோயில் |
| | | காஞ்சிபுரத்தல் அமைந்துள்ள | கைலாயநாதர் கோயில் |
| 2. | பாண்டியர் காலத்தில் எழுந்தவை | திருப்பத்தூரில் அமைந்துள்ள | திருத்தளிநாதர் கோயில் |
| 3. | சோழர் காலத்தில் எழுந்தவை | நார்த்த மலையில் அமைந்துள் | தஞ்சைப் பெருவுடையார் கோயில் |
| | | கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள | கங்கை கொண்ட சோழீச்சுரம் |
| | | தாராசுரத்தில் அமைந்துள்ள | திரிபுவன வீரேச்சுரம் |

கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கியது. விசயநகர மன்னர்கள் காலத்தில் உன்னத நிலை அடைந்தது.

**VI. கதை கதைப் பொருள் சிதையாமல் எழுதுதல்**

'பால்வண்ணம் பிள்ளை' என்னும் சிறு கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**முன்னுரை:**

சிறுகதை உலகின் முடிசூடா மன்னராக விளங்கியவர், புதுமைப்பித்தன் இவரது உரைநடை தெளிந்த நீரோடை போன்றது ' பால்வண்ணம் பிள்ளை' என்னும் இச்சிறுகதையில், பிள்ளையின் வறட்டுப் பிடிவாத குணத்தையும்ஆணாதிக்க இயல்பையம் படம் பிடித்துக் காட்டியுள்ளார், ஆசிரியர்.

**கதையின் கரு:** 'தான்'என்னும் ஆணாதிக்க சக்தி
அறிவையும் அழித்திடும் அழிசக்தி

**கதை மாந்தர்கள்**

முயலுக்கு மூன்று கால்கள்:

பால்வண்ணம் பிள்ளை, மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் மாதம் 35 ரூபாய் ஊதியத்தில் எழுத்தராகப் பணிபுரிபவர். 'தம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் ' என்று சாதிப்பவர். அலுவலகத்தில் அமைதியான பசு ; வீட்டில் ஆத்திரமடையும் புலி.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**குடும்பச் சூழ்நிலை:**

குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை இல்லாத பிள்ளையின் குடும்பம் பெருகியிருந்தது. அவரின் பொறுப்பற்ற தன்மையால், வீட்டில் வறுமையும் துன்பமும் ஆட்சி செய்தன. சத்துவணவின்றித் தவித்த குழந்தைகளுக்குப் பால்காரனின் கடன்பாலும் பொது மருத்துவமனையின் மருந்துத் தண்ணீரும் உணவாயின. இச்சூழ்நிலையில் அவரின் மனைவிக்குப் பசுமாடு வாங்கும் எண்ணம் தோன்றியது.

**மெக்ஸிகோ பிரச்சினை:**

ஒருநாள் அலுவலகத்தில் பால்வண்ணம் பிள்ளைக்கும் அலுவலக நண்பருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மெக்ஸிகோ, ' தென்அமெரிக்காவில் இருக்கிறது' என்றார். பிள்ளை நண்பரோ,' பூகோள சாஸ்திரம் வேறு மாதிரி அல்லவா கூறுகிறது' என்று நையாண்டி இழையோடக் கூறினார். தாம் கூறியதை நிரூபிக்கும் வேகத்தில், கோபத்துடன் வீட்டிற்கு வந்தார், பால் வண்ணம் பிள்ளை.

**பிள்ளையின் பிடிவாதமும் சினமும்:**

பிள்ளையவர்கள், தாம் பிடித்த புகோளப் பாடநூலைத் தேடி எடுத்தார். அதில் மெக்ஸிகோ வட அமெரிக்காவில் இருந்தது. தன் அறிவுக்கு ஏற்பட்ட தோல்வி, அவரின் சினத்தை அதிகமாக்கியது. அச்சமயம் அவரின் மனைவி பசுமாடு வாங்கும் எண்ணத்தை வெளிப்படுத்தினார் பிள்ளை, 'மாடுகீடு எதுவும் வாங்க வேண்டாம்; என் பிள்ளை நீத்த தண்ணியை குடித்து வளரும்' என்று கோபத்தை வேறு விதமாக வெளிப்படுத்தினார்.

**பசுவின் வரவும் பிள்ளையின் செயலும்**

குழந்தைகளின் மீத கொண்ட பாசத்தினால், பிள்ளையின் மனைவி தன் காப்பை விற்று, பசுவும் கன்றும் வாங்கினாள். அன்று முதல் பிள்ளையவர்கள் வீட்டில் காப்பியும் மோரும் பருகுவதில்லை. மனைவியோ இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்தாள்.

**மாட்டை விற்றல்:**

பதினைந்து நாட்களுக்குப் பின் பிள்ளையுடன் சுப்புக் கோனாரும் வந்தார். பிள்ளை, மாடு 25 ரூபாய் என்றார். கோனார் , 'சாமி மாடு 60 ரூபாய் பெறுமே, என்றார். இறுதியில் எழுபது ரூபாய்க்கு வாங்கிய பசுவும் கன்றும் முப்பது (30) ரூபாய்க்கு விற்கப்பட்டது. பிள்ளையின் மூத்த மகன், 'அம்மா என் கன்னுக்குட்டி' என்று அழுதான். 'சும்மா கெட சவமே' என்று கூறி முற்றுப்புள்ளி வைத்தார், பால்வண்ணம் பிள்ளை.

**முடிவுரை:**

பிள்ளையவர்கள், தம் மனைவியின் செயல்கள் ஆதாயம் தருவதாய் இருந்தும், தம் வறட்டுப் பிடிவாதத்தினாலும் ஆணாதிக்கப் போக்காலும் அதை ஏற்க மறுத்தார். இல்லறம் நல்லறமாக விளங்க குடும்பத் தலைவர் பொறுப்புணர்ந்து செயல்படுதல் அவசியம் என்கிறார். ஆசிரியர் புதுமைப்பித்தன்.

**கதை உணர்த்தும் நீதி:** "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு"
"ஆணவக் காரனுக்கும் புத்தி மட்டு"

| கதை மாந்தர்கள் | கதைமாந்தர் திறனாய்வு: பால்வண்ணம் பிள்ளை |
|---|---|
| பால்வண்ணம் பிள்ளை (குடும்பத்தலைவர் & எழுத்தர்) | பொறுப்பற்ற குடும்பத்தலைவர் |
| பிள்ளையின் மனைவி | பிடிவாதமும் சினமும் கொண்டவர் |
| 4 குழந்தைகள் | மனைவியை மதிக்காதவர் |
| சுப்புக்கோனார் (மாட்டை வாங்கியவர்) | ஆணவத்தில் அறிவைத் தொலைத்தவர் |

**நீதி:** ஆணவத்தோடு அலைந்து வாழ்ந்தால்அறிவும் அன்பும் தொலைந்து விடும்.

## மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து

**வல்லிக் கண்ணன்**

முன்னுரை: சமுதாயத்தின் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதுவதில் வல்லவர் வல்லிக்கண்ணன். மூக்கப் பிள்ளையின் மனக்குழப்பத்திற்குத் தெளிவான முடிவைக் காட்டியுள்ளார் அவர்.

**கதையின் கரு:** ' வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை'.

| பெயர்கள் | | கதாபாத்திரம் |
|---|---|---|
| மூக்கப்பிள்ளை | - | ஊராருடன் ஒட்டி வாழத் தயங்குபவர் |
| வாயாடிப் பெண்கள் | - | பலகாரம் கொணர்பவர்கள் |
| சிவபுரம் சுகவாசிகள் | - | மூக்கப்பிள்ளை வாழும் ஊர் மக்கள் |
| ஆறுமுகம் (அழைப்பவர் | - | விருந்திற்கு மக்களை அழைப்பவர் |
| தவசிப்பிள்ளை | - | சமையல்காரர் |

**மூக்கப்பிள்ளையின் இயல்பு:** சிவபுரத்தில் வாழ்பவர் மூக்கப்பிள்ளை. அவர் பிறர் காசுக்கு ஆசைப்படாதவர் ; நேர்மையானவர் ; பொதுச் சொத்தைச் சுரண்டாதவர் ; பிறரை ஏமாற்றாதவர். அவர் வாழ்ந்த சமூகத்தோடு ஒட்டி உறவாடாதவர். ஊரில் நடைபெறும்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நல்லது கெட்டதுகளுக்குச் செல்வார். ஆனால் யார் வீட்டிலும் கை நனைக்க மாட்டார். யாருடனும் நெருங்கிப் பழகவும் மாட்டர்.

**ஊர் வழக்கங்கள்:** ஒரு வீட்டில் திருமணம் நடந்தால் அந்த வீட்டிலிருந்து வாழைப்பழமும் சிறிது சீனியும் வைத்து ஊரார் அனைவருக்கும் வழங்குவது மரபு. இவ்வழக்கத்தை 'நல்லமாசத்துப்பழம்' என்பர். பெரியவர் எவரேனும் இறந்து விட்டால் அவரது பெயரன் பெயர்த்தி ஊர் மக்களுக்கு கடலை அவித்துக் கொடுப்பர். இந்த வழக்கத்தைக் 'கடலை போடுவது' என்பர். மூக்கப்பிள்ளையோ மனைவியை இழந்தவர் ; வாரிசுகள் இல்லாதவர் தனி மரமாக வாழ்ந்தவர் . இது போன்ற வழக்கங்களைச் செய்ய வாய்ப்பில்லாதவர். அதனால் ஊர்ப் பெண்களோ அவர் மறுத்தாலும் வற்புறுத்திக் கொடுத்துச் செல்வர்.

**நயினார் நோன்பு:** ஒருவழிப் பாதையாக எல்லோரிடமும் வாங்கிச் சாப்பிடுகிறோம். இந்த ஊர் மக்களுக்கு நம்மால் எதையும் திருப்பிச் செய்ய முடியவில்லையே என்று அவர் வருந்தினார். இந்தக் கடனை தீர்க்க எண்ணினார். சமீபத்தில் ' சித்ரா பௌர்ணமி' வர உள்ளதை அறிந்தார். அந்த நாளில் நயினார் நோன்பு வழிபாடு உண்டு. அன்று சிவபுர மக்கள் நம் வீட்டில் விருந்து உண்டு மகிழட்டுமே என்று முடிவெடுத்தார். மூக்கப்பிள்ளை தவசிப்பிள்ளையை அழைத்தார் ; விருந்திற்கு ஏற்பாடு செய்தார்.

**விருந்திற்கு அழைப்பு:** பொங்கல், புளியோதரை, எலுமிச்சம்பழச் சாதம், வடை, பூம்பருப்புச் சுண்டல் என்று சித்ரான்னச் சிறப்பு சாப்பாடு மூக்கப்பிள்ளை வீட்டில் தயாராகி விட்டது. உடனே அழைப்புக்கார ஆறுமுகத்தை அழைத்தார். தன் வீட்டில் விருந்துண்ண ஊர் மக்களை அழைத்து வருமாறு அனுப்பினார்.

**ஊர் வழக்கம்:** விருந்து அளிப்பவர் மூன்று நான்கு நாட்களுக்கு முன் நேரில் சென்று, " எங்கள் வீட்டில் இந்த நாளில் இன்ன விசேஷம் நடைபெற உள்ளது. அதற்கு நீங்கள் கட்டாயம் வர வேண்டும் . அன்று எங்கள் வீட்டில் விருந்துண்டு செல்ல வேண்டும்" என அன்புடன் அழைக்க வேண்டும். விருந்து நாளுக்கு முன் தினம் அழைப்புக்கார ஆறுமுகம், ' நாளை இன்னார் வீட்டில் விருந்து' என நினைவு படுத்த வேண்டும் விருந்து நாளன்று ' இலைபோட்டாச்சி சாப்பிட வாங்க' என்று அழைக்க வேண்டும். இவை அந்த ஊர் வழக்கம் ஊர் வழக்கம் எதையும் பின்பற்றாமல் மூக்கப்பிள்ளை விருந்துண்ண அழைப்பு விடுத்ததால் ஊர் மக்கள் விருந்துண்ண வரமறுத்தனர்.

**ஏழைக்கு இரங்கிய இதயம் :** மூக்கப்பிள்ளை சுகவாசிகளான ஊரார் விருந்துண்ண வரவில்லையே என்பதற்கு வருந்தவில்லை. ஆனால் சமைத்த உணவு வீணாகி விடுமே என்று வருந்தினார். அழைப்புக்கார ஆறுமுகத்தை அனுப்பி சிவபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழும் ஏழை எளிய மக்களை அழைத்துவரச் சொன்னார். ஆறுமுகம் சென்றார் ஏழை எளியோரை விருந்துண்ண அழைத்தார் அவர்களும் வந்தனர் வயிறார உண்டனர் ; மனதார மூக்கப்பிள்ளையை வாழ்த்திச் சென்றனர்.

**முடிவுரை:** சுகவாசிகளுக்கு விருந்தளிப்பதை விட ஏழை எளியோருக்கு விருந்தளிப்பதே உயர்வானது என்ற பொன்மொழியை மூக்கப்பிள்ளையின் மனம் ஓவியமாகத் தீட்டிக் கொண்டது.

**நீதி:** ஏழைக்கு இரங்குவதே இறைவனுக்குச் செய்யும் தொண்டு.

## 4. வேலி (இராஜம் கிருஷ்ணன்)

**கதாபாத்திரங்கள்:** கோமதி - அவளது மகன், மருமகள் மாலதி, கோமதியின் பெண்கள் பங்கஜம், செண்பகம். கோமதியின் தோழி மங்களத்தம்மாள் மாலதியின் அக்கா ருக்மணி, அவளது கணவன் செல்லப்பன், அவர்களது குழந்தை.

**முன்னுரை:**

இராஜம் கிருஷ்ணன் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை அவலங்களை நன்கு உணர்ந்தவர் அவற்றிற்குத் தீர்வு காண்பதிலும் வல்லவர். 'வேலி' என்னும் இச்சிறுகதையில் சாதி, மத வேறுபாடுகளில் ஊறிப்போன முதுமை உள்ளத்தின் இச்சிறுகதையில் சாதி, மத வேறுபாடுகளில் ஊறிப்போன முதுமை உள்ளத்தின் உணர்ச்சிகளையும், காதலினால் சாதி, மதம் என்னும் வேலிகளைத் தாண்டிய இளமை உள்ளத்தின் போராட்டங்களையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**மாலதி:**

மாலதி படித்தவள் வேலைக்கு செல்பவள் அவளை காதலித்துக் கைப்பிடித்தான் கோமதியின் மகன். காதல் மணம் செய்து மணமாலையுடன் வீட்டிற்கு அழைத்து வந்தான் . கோமதிக்கோ மாலதியின் வேலையும் சம்பளமும் மட்டுமே பிடித்திருந்தன. மாலதியின் குலமும் சீர்வரிசையும் கோமதிக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை எனினும் மகனுக்காக மாலதியை மருமகளாக ஏற்றுக் கொள்கிறாள்.

**வேலி:**

மாலதியின் கணவன் தொழில் வளர்ச்சித் திட்ட பயிற்சிக்காக ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் சென்றுள்ளான். மாலதி கர்ப்பமுற்றிருக்கிறாள். அவள் தாழ்ந்த குலத்தவள் என்பது மாமியாரின் எண்ணம். எனவே அவளை சமையலறைக்குள் அனுமதிப்பதே இல்லை. மாலதிக்கு இப்படி ஒரு வேலி. கோமதியின் மகள் பங்கஜம் சமையலறையில் சுடச் சுட பஜ்ஜி சாப்பிடுவதைப் பார்த்த மாலதிக்குள் ஓர் ஏக்கம்! .

**புதுமைப் பெண்:** மாலதி தைரியமான பெண் பாரதி கண்ட புதுமைப் பெண். எனினும் கணவருக்காக மாமி நாத்தனார்களின் ஏச்சுகளைத் தாங்கிக் கொள்கிறாள். மாமியார் அக்கறையுடன் அவளைக் கவனிப்பது கூட, அவளது உடல் நிலை பாதித்தால் 'சம்பளம் தடைப்பட்டு விடுமே' என்னும் ஆதங்கம் தான் ! மாலதி விடுப்பு எடுப்பதா? வேண்டாமா? என்பதைக் கூட அவளது மாமியார் தான் முடிவு செய்கிறாள்.

**மங்களத்தம்மாள்:**

கோமதியின் தோழி மங்களத்தம்மாள் . சாதி , மதம், சடங்கு, சம்பிரதாயம் ஆகியவற்றை எல்லாம் சுட்டிக்காப்பது தான் மட்டுமே



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என எண்ணுபவள் மங்களத்தம்மாள். பிறர் மனதைச் சொல்லம்புகளால் குத்தி மகிழ்பவள். கோமதிக்கு மட்டும் மாதச் சம்பளம் பெறும் மருமகள் கிடைத்து விட்டாளே! தனக்கு வாய்த்த மருமகள் சம்பாதிக்கவில்லையே என்ற பொறாமையில் மாமியார் மனதில் மருமகளின் சாதியைப் பற்றிய தீயைக் கொளுத்திப் போட்டாள். அந்த நேரத்தில் அலுவலகப் பணி முடித்து வந்த மாலதியின் காதில் அந்தப் பேச்சுகள் விழுந்தன. படி ஏறாமல் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள் மாலதி.

**கோமதியின் புலம்பல்:** " மாலதி இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த பிறகு சொந்த பந்தமெல்லாம் எங்க வீட்டிற்கு வருவதில்லை" என்று மங்களத்தம்மாவிடம் புலம்பினாள் கோமதி. என்ன செய்வது பெரியவங்க சொன்ன சாதி சம்பிரதாயம் என்ற வேலியைத் தாண்ட முடியலையே ! முள்ளில் சிக்கிக் கொண்டது போல் உள்ளது என் வாழ்க்கை" என்று தொடர்ந்தாள் கோமதி.

**எரிகிற கொள்ளியில் எண்ணெய்:** "என்னதான் படிச்சிருந்தாலும் வேலைக்குப் போனாலும் பூவும் மண்ணும் ஒன்றாகி விடுமா? சொல்லுங்க கோமதியம்மா? சரி அது போகட்டும் உங்கள் மருமகளின் பிரசவத்தின் போது என்ன செய்யப் போறீங்க? அவளோட உறவினர் எல்லாம் உங்கள் வீட்டிற்கு வருவார்களே, அக்கம் பக்கமெல்லாம் அசிங்கமாகப் பேச மாட்டார்களா?" என்று எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவது போல மங்களத்தம்மாள் பேசினாள். என்ன செய்வது? அவங்க கூட நான் என்ன உறவு கொண்டாடவா முடியும் ? பிரசவத்தை ஆஸ்பத்திரியில் வைச்சுக்க வேண்டியதுதான் ! அவளது சொந்த பந்தமெல்லாம் ஆஸ்பத்திரியோட வந்து போகட்டும் என்று வருந்திக் கூறினாள் கோமதி.

**பிஞ்சு நெஞ்சில் நஞ்சு :**

கோமதியின் கடைசிப் பெண் செண்பகம். (அவளது பிஞ்சு நெஞ்சில் சாதி வேறுபாடு என்னும் நஞ்சு கலந்திருந்தது) மாடிப்படியில் அண்ணி நிற்பதைப் பார்த்த அவள் தாயிடம் அதைக் கூறினாள். அதைக் கேட்ட மங்களத்தம்மாள் சட்டென்று கிளம்பிவிட்டாள். மாலதி மங்களத்தம்மாளைப் பரிதாபத்துடன் பார்த்து விட்டு மேலே ஏறினாள்.

**பாலையில் ஒரு சோலை :**

மாலு என்ற குரல் தேனாக இனித்தது மாலதிக்கு, அது அவளின் அன்பான அக்கா ருக்மணியின் குரல், அவள் தன் கணவர் செல்லப்பனுடனும் குழந்தையுடனும் வந்திருந்தாள். அவர்களது வருகை பாலைவனத்தின் நடுவே பசுஞ்சோலையை கண்டது போல இருந்தது மாலதிக்கு. அந்த குழந்தையைக் கொஞ்சி மகிழ்ந்தாள் மாலதி.

**வளைகாப்பு :**

வந்தவர்களின் வறுமைத் தோற்றம் கோமதிக்கு எரிச்சலை தந்தது. அதை மறைத்துக் கொண்டு சிரித்தாள். மாலதியைத் தான் பூப்போல வைத்திருப்பதாக நடித்தாள். வளைக்காப்பிற்கென வளையல் செய்ய மாலதியின் தாய் கொடுத்தனுப்பிய இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை வாங்கிக் கொண்டாள். அது தன் தாயின் நீண்ட நாளைய சேமிப்பு என்பது மாலதிக்குத் தெரியும். வந்தவர்கள் விடை பெற்றுச் சென்றார்கள்.

**வேலியும் முள்ளும்:**

"என்ன மாலதி படுத்திட்ட? உடம்பு சரியில்லையா? மயக்கம் வர்ற மாதிரி இருக்கிறதா? எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுத்து அனுப்புகிறேன் ; இரசம் சாதம் கரைத்துத் தருகிறேன் ; நீ ஒன்றும் சமையலறைப் பக்கம் வர வேண்டாம்" என்றாள் கோமதி. இது மாமியார் அவளுக்கு இட்ட வேலி. மாமியாரின் அந்தப் பேச்சு மாலதியை முள்ளாய்க் குத்தியது.

**பணத்திற்கு ஏது வேலி:**

"இந்த மாதம் சம்பளப் பணம் என்னாச்சு? பால்காரன் முன்பணம் கேட்கிறான்? நீ ஒன்றும் எழுந்திருக்க வேண்டாம். எங்கே இருக்கிறது என்று சொன்னால் போதும் நான் எடுத்துக் கொள்கிறேன்" என்றாள் கோமதி. "பெட்டியில் சேலைக்கு அடியில் இருக்கிறது" என்று மாலதி சொல்ல மாமியார் அதை எடுத்துக் கொள்கிறாள். பிறந்த வீட்டில் மாலதி ஒருமாதச் சம்பளத்தைக் கூட முழுசாக் கொடுத்ததில்லை. புகுந்த வீட்டிலோ ஒரு மாதச் சம்பளத்தைக் கூட அவள் தனக்கென வைத்துக் கொள்ள முடியவில்லை. துயரத்திற்குப் பதில் மாலதிக்குச் சிரிப்புத்தான் வந்தது. இந்தச் சமுதாயத்தில் மனிதர்களுக்குத் தான் வேலியும் முள்ளும், பணத்திற்கு வேலியும் இல்லை முள்ளும் இல்லை என நினைத்தாள்.

**முடிவுரை:**

இன்றும் சாதி, மதம் என்னும் சதிகள் - வேலிகள்- மக்களைப் பிரித்து வைத்துச் சதிராட்டம் போடுகிறது. அன்புதான் வாழ்க்கையின் ஆணி வேர். அன்பிற்கு வேலிகள் இல்லை. அனைவரும் இதை உணர்ந்தால் உலகில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் என்ற உண்மை இந்தக் கதையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

**நீதி :** பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது பெருங்குற்றம்

## 5.மகன்

### பா. செயப்பிரகாசம்

**கதாப்பாத்திரங்கள்:**

அன்னகாமு - சாமியாரப்பன், மூத்த மகள் மல்லிகா, நடுமகள் தனபாக்கியம் , மகன், மல்லிகாவின் கணவர் இராம்குமார், பெரியம்மா, குடிமகன்கள் கனகராசு, சின்னராசு, ஆசிரியர் பா. செயப்பிரகாசம்.

**முன்னுரை:**

சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் பெற்றவர்களை வீட்டை விட்டு விரட்டும் பிள்ளைகள் நிறைந்து விட்ட காலமிது. புற்றீசல் போல



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முதியோர் இல்லங்கள் முளைத்து நிற்கும் காலமிது. அன்னகாமு - சாமியாரப்பன் தம்பதியர் மகனால் வீட்டை விட்டு விரட்டப்பட்டனர். அன்னாகாமு தான் பிறந்து வளர்ந்த ஊரான பண்ணைபுரத்திற்கே கணவனுடன் வந்து சேர்ந்தாள். அந்த தாய் இறந்த நிலையில் நடக்கும் அவலங்களை ஆசிரியர் அருமையாகச் சித்தரித்துள்ளார்.

**மகன்:**

தாய் இறந்துவிட்ட செய்தி கேட்டு, மகன் புதூரில் இருந்து பண்ணைபுரத்திற்கு ஆட்களை வேன் நிறைய அழைத்து வந்தான். அவனோ இழவு வீட்டிற்குப் பொருத்தம் இல்லாத தோற்றத்துடனும், துயரச் சாயல் இல்லாதவனாகவும் காணப்பட்டான். தனக்குச் சாதகமாகப் பேசி பிணத்தை எடுத்துச் செல்ல சிலருக்கு 'தண்ணீர் ஊற்றி' அழைத்து வந்திருந்தான். ஆனால் பண்ணைபுரமோ குடிப்பழக்கம் இல்லாத மக்கள் வாழும் ஊர். அதனால் மக்கள் வேனை ஊர் எல்லையிலே மறித்து நிறுத்தினர். எங்கள் ஊருக்கு வந்து விட்டீர்கள்! அழ வேண்டியவர்கள் போய் அழுங்கள்! ஆனால் அந்த அம்மாவை ஊருக்கு எடுத்துச் செல்ல மட்டும் நினைக்காதீர்கள் என்று கண்டிப்புடன் கூறினர்.

**தனபாக்கியம்:**

அன்னகாமுவின் நடுமகள் தனபாக்கியம் கதை ஆசிரியரிடம் "மாமா உங்களுக்கு சேதி சொன்ன கொஞ்ச நேரத்திலேயே உயிர் போய் விட்டது. அப்போது இரவு 9 மணி இருக்கும். நினைவு இருக்கும் வரை உங்கள் பெயரைச் சொல்லி, நீங்க வந்த பிறகு தான் என்னைத் தூக்கணும், என்று அம்மா சொன்னாங்க" என்றாள்.

**சாமியாரப்பன்:**

சாமியாரப்பன் அன்னகாமுவின் கணவர். இழவு வீட்டின் அறிகுறிகள் எதுவும் இல்லாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். குடிமகன் கனகராசு, ஏய் இவரைப் பார்த்தா அந்த அம்மாவோட கணவர்னு தோணுதா? இவர் ஏன் ஒரு இடத்தில் இல்லாம அங்கும் இங்குமாக அலையறாரு?" என்றான்

"அதானே"! என்ற சின்னராசு, "மாமா நீங்க அந்த அம்மாவுக்கு என்ன உறவு வேண்டும்?" என்றான் கிண்டலாக! இழவு வீட்டில் பேசக் கூடாதா அந்தக் கேலிப்பேச்சைத் துண்டித்து, "மாமா! எல்லாருக்கும் சேதியைச் சொல்லியாச்சா?" என்று ஆசிரியர் கேட்டார்.

**இராம் குமார்:**

"மூத்த மாப்பிள்ளை (மல்லிகாவின் கணவர்) இராம்குமார் எல்லோருக்கும் போன் போட்டு சொல்லிட்டாரு" என்றார் சாமியாரப்பன். "கடைசியிலே சொந்த மகனை விட்டு விட்டீர்களே" என்று குறுக்கிட்டான் சின்னராசு. "மகனா அவனை அன்றைக்கே தலைமுழுகியாச்சே" என்றார்.

**இறுதிச் சடங்கு:**

அன்னகாமுவிற்கு எண்ணெய், சிகைக்காய் வைக்கிற சடங்கு நடந்தது. மல்லிகாவின் பெரியம்மா ஒவ்வொருவர் கையிலும் அதைக் கொடுக்க, ஒவ்வொருவராக வந்து அந்தச் சடங்கைச் செய்தனர். பூனைப்போலப் பதுங்கி வந்தான் மகன். கையை நீட்டினான். பெரியம்மா கொடுக்க முற்பட்டார். மூத்த மகள் மல்லிகா அவளது கையைத் தட்டி விட்டாள். உயிருடன் வாழ்ந்த போது பெற்றவளைப் பேணிடாத அவனைப் பெண்கள் மறித்து நின்றனர்.

**சுடுகாட்டில்:**

சுடுகாட்டில் அன்னகாமுவின் உடல் கிடத்தப்பட்டது. "அவனை விடுங்கய்யா, கொள்ளி வைக்கட்டும்" என்று பெரியவர் ஒருவர் கூறினார். "அவன் கொள்ளிக்குடம் எடுத்தால் நாங்கள் யாரும் குடம் கொத்த மாட்டோம்" என்றனர் மருமகன்கள்.

**துணிந்த மல்லிகா:**

மூத்த மகள் மல்லிகா எங்க அம்மாவுக்கு நானே கொள்ளி வைக்கிறேன்" என்று கொள்ளிக் குடத்தைத் தூக்கினார். மூத்த மருமகன் இராம்குமார் குடத்தைக் கொத்தினார். பீறிட்டு வந்த தண்ணீர் மண்ணை நனைத்தது. தாயின் தலைமாட்டில் குடத்தை உடைத்தாள். "திரும்பிப் பார்க்காமல் நட" என்ற பெரியம்மாவுடன் நடந்தாள்.

**முடிவுரை:** வயதான பெற்றோரைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய மகனே அவர்களைப் புறக்கணித்தான். அவனை இறுதி சடங்கு செய்ய விடாமல் ஒரு கிராமமே புறக்கணித்தது நியாயமே ! இந்த மகனுக்கு மட்டுமல்ல ! பெற்றவர்களைப் புறக்கணிக்கும் ஒவ்வொரு மகனுக்கும் விழும் சரியான சாட்டையடி இந்தக் கதை !

**நீதி:** தாய் தந்தையரைப் பேணிக் காக்க வேண்டும்.

---



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 6. கிழிசல்

**(நாஞ்சில் நாடன்)**

**முன்னுரை:**

இன்று மற்றவர் பொருளைக் கொள்ளையிட்டு, கொற்றவர் போல் வாழத் துடிக்கும் மனங்கள் பெருகிவிட்டன. இந்த உலகில் வாய்ப்பைத் தேடிச் சென்று ஏமாற்றுவோர் உண்டு, வாய்ப்புக் கிடைக்கும் போது ஏமாற்றுபவர்களும் உண்டு. இதில் மாணிக்கத்தின் தந்தையை எதில் சேர்ப்பது? தந்தையின் பண்பாட்டில் ஏற்பட்ட கிழிசலால் மகனின் உள்ளத்தில் ஏற்பட்ட கிழிசலே நாஞ்சில் நாடனின் கிழிசல்.

**சுசீந்தரம் கோயில் திருவிழா**

ஆண்டு தோறும் சுசீந்தரம் கோயிலில் பத்து நாள் திருவிழா நடைபெறும். கொடி ஏற்றிய முதல் மூன்று நாள் கூட்டம் இருக்காது. நாலாம் நாள் முதல் விடிய விடிய வியாபாரம் நடக்கும். தேரோட்டம் அன்று கடைக்கு ஓய்வே கிடையாது.

**இசைவிழா**

விழாவின் ஒவ்வொரு நாளும் இரண்டு கச்சேரிகள் நடக்கும். ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை இசைவாணர் பாடுவார். பிறகு மூன்று மணி வரை இசைக் கருவிகளை இசைப்போரின் கச்சேரிகள் நடக்கும். இதனால் சுற்றுவட்டார மக்கள் ஓரளவு இசைஞானம் பெற்றிருந்தனர்.

**பகவதி விலாஸ் காபி கிளப்**

மேலைத் தெரு மகாராஜன், கொடி ஏறிய அன்றே மண் சுவர் எழுப்பினார். சமைக்கும் இடம், சாப்பிடும் இடம் எனப் பிரித்தார் : ஓலையால் அடைத்தார்; பத்து நீளப் பெஞ்சுகளும் மேசைகளும் போட்டார் ; பகவதி விலாஸ் காபி கிளப் என்று பெயரிட்டார். அவரது கடையில் தோசை, இட்லி, பஜ்ஜி, வடை என சாப்பிட வரும் கூட்டம் அலை மோதும். கூட்டம் பெருகப் பெருக அளவும் தரமும் குறையும். அங்கு திருவிழாக் காலத்தில் இது போல் பல கடைகள் உண்டு. அங்கும் கூட்டம் அலை மோதும்.

**மாணிக்கத்தின் இசை அறிவு**

மாணிக்கம் ஒன்பதாம் வகுப்பு மாணவன், சங்கீதத்தில் ஈடுபாடு கிடையாதே தவிர சினிமாப்பாட்டை அப்படியே பாடுவான் தமிழாசிரியர் இசையுடன் கற்றுக் கொடுத்த தேவார திருவாசப் பாடல்களைச் சினிமாப் பாடலைப்போல் அவனால் பாட முடிய வில்லை. ஆண்டுதோறும் திருவிழாவின் இசைக்கச்சேரிக்குச் செல்லும் அவனது தந்தைக்கும் இசைஞானம் அவ்வளவாய் இல்லை.

**"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"**

திருவிழா விளம்பரத்தாளைப் பார்த்த உடனே மாணிக்கம் இந்த ஆண்டு தானும் திருவிழாவிற்குச் செல்வது என்று தீர்மானித்தான். தந்தையை நச்சரித்தான். தந்தையோ திருவிழா கடைகளைப் பார்த்து அதை வாங்கி தா ! இதை வாங்கி தா! என்று அடம் பிடிக்கக் கூடாது ; நேரமாகி விட்டதே உறக்கம் வருகிறது என்று சொல்லக் கூடாது என்பன போன்ற நிபந்தனைகளை விதித்தார். தந்தை சொல்லைத் தட்டாத தனயனாகச் செயல்படுவேன் என்று உறுதி அளித்தான் மாணிக்கம். இருவரும் மாலை ஐந்து மணிக்கெல்லாம் நன்றாகச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினர்.

**இரசித்தது நெஞ்சம்! இனித்தது பாடல்!**

சுசீந்திரக் கோயிலில் சீர்காழி கோவிந்தராஜன் பாடிக் கொண்டிருந்தார். கூட்டம் அதிகமாக இருந்தது. முன்வரிசையில் உட்கார இடமில்லை. கோயில் மண்டபச் சுவரில் ஏறி அவரைப் பார்க்கும் படியாக உட்கார்ந்து கொண்டனர். சீர்காழியின் பாடல்கள் மெய்சிலிர்க்கச் செய்தன. காதில் தேன் பாயச் செய்தன. இரவு ஒன்பதரை மணி ஆனது. கச்சேரி முடிந்தது. ஒருமணி நேர இடைவெளி. இந்த இடைவேளையில் சர்க்கஸும், ரெக்கார்ட் டான்சும் மும்மரமாய் நடந்தன. அதன்பின் ஷேக் சின்னமௌலானாவின் நாதசுரக் கச்சேரி, வலயப்பட்டி, வலங்கைமானின் தவில்.

**வாட்டியது பசி ! தடுத்தது கட்டளை !**

"திடும் திடும்" எனத் தவில்கள் அதிர்ந்தன. மாணிக்கத்திற்கு உறக்கம் வந்தது. கச்சேரி முடிய இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும். இரவு ஒரு மணிக்கு இருவரும் வீடு திரும்ப எழுந்தனர். அவனுக்கு வயிறு பசித்தது. அப்பா சொன்ன நிபந்தனைகள் அவன் நினைவில் எழுந்தன. கடைகளில் பட்சணங்களின் மணம் வீசியது. பகவதி விலாஸ் பக்கம் வந்தனர். "வயிறு பசிக்கலே!" என்றார் அப்பா. "ஆம்" என்றான் மாணிக்கம். இருவரும் கூட்ட நெரிசலில் கடைக்குள் நுழைந்து, இடம் பிடித்து உட்கார்ந்தனர்.

**நெருக்கியது கூட்டம் ! கிடைத்தது இடம்!**

கடைக்குள் நெருக்கியது கூட்டம். இடம் பிடித்து உட்கார்ந்தனர். ஆளுக்கு நாலு தோசை, இரண்டு இரசவடை சாப்பிட்டுத் தேநீர் குடித்தனர். விலைப்பட்டியலைப் பார்த்து மாணிக்கம் கணக்குப் போட்டான். தாங்கள் சாப்பிட்டதிற்கு ஆன தொகை இரண்டு ரூபாய் தொண்ணூறு பைசா என்று கணக்கு வைத்துக் கொண்டான். பணம் கொடுக்கும் இடத்திற்கு வந்தனர்.

**பறந்தது பண்பு**

" கண்ணாடி போட்ட அண்ணாச்சி நாலு முப்பது".

"அடுத்தாப்லே ஒரு ஒண்ணு இருபது".

"பாட்டா ஒன்னு அஞ்சு" என்று குரல்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. பணத்தை வாங்குபவருக்கு முகத்தை ஏறிட்டுப் பார்க்கவோ, காசை எண்ணி வாங்கவோ நேரமில்லாத அளவிற்குக் கூட்டம்!



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**தந்தையின் செயல்**

மாணிக்கத்தின் தந்தை ஓர் ஐம்பது பைசாவை எடுத்து மேசை மீது வைத்தார். ஏறிட்டுப் பார்த்த கடைக்காரரிடம் "இரண்டு தேநீர் என்றார். மாணிக்கத்தின் கையைப் பிடித்துக் கொண்டு நடையைக் கட்டினார்.

**தீர்மானித்தது மனம்**

சிறிது தூரம் சென்றதும் அப்பாவின் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தான். இதற்குத் தான் அப்பா ஆண்டுதோறும் கச்சேரிக்கு வருகிறாரோ? இனிமேல் இவருடன் வரக்கூடாது என்றுதீர்மானித்தான்.

**முடிவுரை:**

வறுமை அப்பாவின் பையில் இல்லை. இதயத்தில் அல்லவா உள்ளது? சட்டையில் கிழிசல் என்றால் ஊசி நூலால் தைக்கலாம். இதயத்தில் - பண்பாட்டின் கிழிசல் என்றால் என்ன செய்வது? எந்த ஊசியால் தைப்பது? அது மட்டுமன்று, மாணிக்கத்தின் வேலைதேடும் நிலையறிந்து தங்கள் நிறுவனத்திலேயே உயரிய பதவியை அளித்துச் சிறப்புச் செய்தனர். பிறகு, வீட்டிற்கு வந்த மாணிக்கம் தந்தையிடம் சொன்னான் "அப்பா, அன்று பணத்திற்கு ஆசைப்பட்டு, அவர்களைக் காப்பாற்றாமல் போயிருந்தால் இதெல்லாம் நடந்திருக்குமா?" எனக் கேட்க, தலை குனிந்தவாறே தந்தை சொன்னார். ஆமாம் மகனே! நேர்மையின் திறத்தை உணர்ந்து கொண்டேன். இனி எந்நாளும் நான் யாரையும் ஏமாற்ற மாட்டேன்" என்று கண்ணீர் மல்க தந்தை உரைத்ததை கேட்டு மகன் பெருமிதம் அடைந்தான். அப்பாவை அன்புடன் அணைத்துக் கொண்டான்.

*******



## 7. ஓர் உல்லாசப் பயணம்

**வண்ணதாசன்**

**முன்னுரை:**

"கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை"

என்றார் ஔவையார். அதன்படி பொருளாதார வசதியற்ற மக்களின் மன இயல்பை மனம் கவர்ந்த கதாபாத்திரம் இந்தக் கதையில் உலா வரும் கதாபாத்திரங்களில் வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்யும் மகனின் கதாபாத்திரமே என்னைக் கவர்ந்த கதாபாத்திரமாகும்.

**தாயின் கரு**

தன் மகனை இன்பச் சுற்றுலாவிற்கு அனுப்ப இயலாமல் தவிக்கும் தந்தையின் அன்புள்ளம், குடும்பநிலை அறிந்து நடந்து கொள்ளும் மகனின் உள்ளப்பாங்கு. இவற்றை ஆசிரியர் இச்சிறுகதையில் அருமையாக விளக்கியுள்ளார்.

**கதாபாத்திரங்கள்**

இந்தக் கதையில் கதை மாந்தர் எவருடைய பெயரும் கூறப்படவில்லை. தந்தை, தாய், மகன், மகள், ஆசிரியர் என உறவுமுறைப் பெயர்களும் தொழிற் பெயர்களும் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

**மனம் கவர்ந்த பாத்திரம்**

இக்கதை மாந்தர்களுள் என் மனம் கவர்ந்த கதாபாத்திரம் 'மகன்' (மூத்த மகன்)ஆவார். விரும்பக் காரணம் எட்டாம் வகுப்புப் படிக்கும் பையன் தன் குடும்பச்சூழ்நிலையை அறிந்து நடந்து கொள்கிறான். குடும்பப் பணிகளைப் பொறுப்போடு செய்கிறான்.

**தந்தையின் நிலை உணர்ந்த தனயன்**

ஒரு நாள் காலை எட்டரை மணி இருக்கும். மகன் சிவப்பு நிற நோட்டீஸ் ஒன்றைக் கொடுத்தான். அது ஒன்றும் புதியது அன்று. ஆண்டுதோறும் சுந்திர தினத்தை ஒட்டி அவன் பள்ளியில் உல்லாசப் பயணம் அழைத்துச் செல்வது உண்டு. அதற்கான விளம்பரம் தான் அது.

**மகனின் மௌனம்**

கடந்த ஆண்டே அடுத்த வருடம் கண்டிப்பாக அனுப்புகிறேன் என்று சொல்லியிருந்தார். வைத்தியச் செலவு, கலியாணச் செலவு, வீட்டுச் செலவு, அது இது எனச் செலவுகள்அதிகரித்தது. அதனால் இந்த வருடமும் அவரால் மகனைச் சுற்றுலாவிற்கு அனுப்ப இயலவில்லை. குற்றாலம் போக வேண்டும் என்று அவன் கேட்கவும் இல்லை. அடம்பிடிக்கவும் இல்லை. அவன் கேட்க மாட்டானா? கேட்டால் தன் நிலையை விளக்கலாமே!" என நினைத்தார் தந்தை. தன் நிலையை விளக்க ஒரு வாய்ப்புக் கூட தரவில்லை. தந்தையின் நிலையை உணர்ந்து செயல்படும் இந்த மகன் நம் பாராட்டுக் குரியவன்.

**மறுப்புச் சொல்லா உள்ளம்**

விறகுக் கடைக்குச் சென்று விறகு வாங்கி வருகிறான். மழையைக் கண்டதும் விறகை எடுத்து அடுக்களையில் போடுகிறான். அம்மா பணித்தபடி சிகைக்காய் வாங்கி வரச் சென்றான். அவன் வருவதற்குள் சாரலும் காற்றுமாய் மழைபெய்யத் தொடங்கிவிட்டது. இங்கேயே இப்படி இருக்கிறதே ! குற்றாலத்தில் தண்ணீர் எவ்வளவு கொட்டும்?" என்று நினைத்ததும் தந்தைக்கே குற்றாலம் போக வேண்டும் போல் இருந்தது.

**தந்தையை போற்றும் தனயன்**

"விடுதலை திருநாளுக்கு பெண் பிள்ளைகள் இருவரும் பள்ளிக்குச் சென்றார்கள். மழையில் நனைந்து விடுவார்கள் போங்க!



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போங்க! குடையை எடுத்துட்டுப் போங்க!" என்றாள் அம்மா. உடனே மகன் குடையை எடுத்துக் கொண்டு ஓடினான். மகனின் செயல்களைப் பார்த்த தந்தை இவன் ஏன் இப்படி இந்த வயதில் எல்லாவற்றிற்கும் நான் தான் என்று இழுத்துப் போட்டுச் செய்கிறான். "மாட்டேன் ; முடியாது" என்று அவனுக்கு ஏன் சொல்லத் தெரியவில்லை" என்று வியக்கிறார். "இவ்வளவு பொறுப்பாதன பிள்ளையை சுற்றுலாவிற்கு அனுப்ப இயலவில்லையே" என நினைத்ததும் ஏதோ ஒரு துக்கம் நிகழ்ந்தது போல மனம் தவித்தது.

**அபிநய சுந்தரி**

குழந்தைகள் வரும் ஓசை கேட்டது. பெரிய பெண் குடையை மடக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். "அப்பா ! அண்ணன் எதிர் வீட்டுத் தட்டோடியில் இருந்து திடு திடுன்னு தண்ணீர் விழுகிறதே அதைப் பார்த்துட்டு நிற்கிறான். எவ்வளவு உயரத்திலிருந்து தண்ணீர் விழுது தெரியுமா?" என்று அபிநய சுந்தரி அபிநயத்துக் காட்டினாள்.

**தேடி வந்த குற்றாலம்**

வெளியே வந்து பார்த்தார் தந்தை. எதிர்த்த வீட்டுத் தட்டோடியில் இருந்து தண்ணீர் அகலப்பட்டையாக விழுந்தது. "அருவி விழுது! அருவி விழுது!" என்று பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் ஆனந்தக் கூத்தாடினான் மகன். கையிலும் தலையிலும் தண்ணீர் விழும்படி முன்னும் பின்னும் சாய்ந்தாடினான். "ஹோய்" என்று கூச்சலிட்டு மகிழ்ந்தான்.

**எங்கே போய்த் தொலைந்தான்?**

தந்தை இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். மனசுக்குள் மௌனமாய் அழுதார். அப்போது அவர் மனைவி, "இந்த கொட்டற மழையில எங்கே போய் தொலைந்தான் அவன்?" என்றாள். அவரோ கரகரத்த குரலில் "குற்றாலத்திற்கு" என்றார்.

**முடிவுரை**

மகன் பன்னிரண்டு வயதுப் பாலகன் ; குடும்பத்தின் பொருளாதார நிலையை உணர்ந்தவன். சுற்றுலாவிற்குத் தந்தை அனுப்பவில்லையே என்று கோபமோ ! வருத்தமோ! அவனிடம் இல்லை. வீட்டுப் பணிகளைத் தானே இழுத்துப் போட்டுச் செய்யும் இந்தப் பண்பான பிள்ளையை - இந்த மகனை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்?

**நீதி**

இனிய பண்புடையவர்களை இயற்கையே நாடி வரும் என்னும் நீதியை உணர்த்துகிறது.

---

**2. ஓர் உல்லாசப் பயணம் - இச்சிறுகதையை நாடகமாக வடிவமைக்க**

**ஓர் உல்லாசப் பயணம் - நாடகம்**

**காட்சி : 1**

**இடம்** - வீடு

**காலம்** - காலை 8.30 மணி

**பங்கு பெறுவோர்** - தாய், தந்தை, மகன்

**தந்தை** (அடுக்களையைப் பார்த்தபடி) சாப்பிடலாமா?

**தாய்** பொண்ணுக்குத் தலை பின்னி விடணும். ஆத்துத் தண்ணி பிடிக்கணும். ஆஸ்பத்திரிக்குப் போகணும். இவ்வளவு வேலைக்கும் மத்தியில் நீங்களும் சாப்பிடலாமா? சாப்பிடலாமா?ண்ணு சின்ன பிள்ளையிலும் கேடாய்ப் பறந்தால் நான் என்ன பண்ண? எனக்கு என்ன ஏழு கையா இருக்கு?

**மகன்** (ஒரு சிவப்பு நிற அறிவிப்புச் சீட்டைத் தந்தையிடம் கொடுத்தபடி) அப்பா இதைப் பாருங்கள்!

**தந்தை** (தந்தை மகனைப் பார்த்தபடி) என்ன இது?

**மகன்** ( மகனுக்குப் பணம் தர முடியாத நிலையில் இருக்கும் போது, அவன் நோட்டில் வரைவதைப் பார்த்து) என்ன தாமரைப்பூ வரையறியா?

**மகன்** ஆமா! (தந்தை ஏதோ சொல்ல நினைக்கும் போது) தாமரைப்பூ நல்லாருக்காப்பா?

**தாய்** அங்கே என்ன ஊரில் இல்லாத கதை பேசி ஆகுதோ, தெரியலையே என்னமோ ரயிலுக்குப் போகிற மாதிரி சாப்பிடணும் சாப்பிடணும்னு அடிச்சுக்கிட்டேன் அப்பதை !

**மகன்** (தந்தையைப் பார்த்து )அம்மா, சாப்பிடக் கூப்பிடுறாங்கப்பா !

**(திரை)**

**காட்சி : 2**

**இடம்** - வீடு

**காலம்** - முற்பகல்

**பங்கு பெறுவோர்** - தாய், தந்தை, மகன்

தந்தை (மகனிடம்) விறகைக் கொண்டு போய் அடுப்படிக்குள்ளேயே போட்டிடு மழை வரும் போலிருக்கு ! ...

**தாய்** (கணவனுக்குக் கேட்கும்படி) வார பாதையிலே அப்படியே லைட்டைப் போட்டுவிட்டு வாங்க. ஐப்பசி கார்த்திகை மழை



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இப்போதான் அடைச்சுப் பெய்ய போற மாதிரி இருட்டிக் கிடக்கு.......... அவனை எங்கே? சீயக்காய்ப் பொட்டலம் வாங்கிட்டு வாண்ணு அனுப்பினேன். போயே போய் தொலைஞ்சுட்டான் போலிருக்கு. சின்னது தொட்டில்ல கிடந்துக்கிட்டு சிணுங்கினால் தொட்டிலை ஆட்டி விடுகிறது யாருண்ணு தெரியலை ..........

**தாய்** அது என்ன சத்தம்? மழையா விழுது. கொடியிலே ஈரத்துணியெல்லாம் காயப் போட்டிருந்தேனே எல்லாத்தையும் வீட்டுக்குள்ளே அள்ளிக் கொண்ணாந்து போட்டா என்ன? இதையெல்லாம் சோற்றுப் பானைக்கு முன்னால நிற்கிற மனுசிதான் சொல்லணுமா?

(தந்தை கொடியில் காயப் போட்டிருந்த துணிகளைக் கொண்டு வந்து விட்டினுள் சேர்க்கிறார்)

( மழை நன்றாக வலுத்துவிட்டது)

**தாய்** சதசதண்ணு ஈரத்தை மிதிச்சுட்டு வீட்டுக்கும் வாசலுக்கும் நடமாடி நாசம் பண்ணாதிய. ஒரு பழைய சாக்கை எடுத்துப் போடச் சொல்லுங்க அவனை ! என்னமோ சுதந்திரதினம், கொடியேத்தம் என்று பெரியவளும், நடுவுள்ளதும் பள்ளிக் கூடத்துக்குப் போய் தொலைஞ்சுருக்கு. குடையை எடுத்துக்கிட்டுப் போய் அதைக் கூட்டிக்கிட்டு வாங்க ! நனைஞ்சுட்டு வந்து, அப்புறம் காய்ச்சல், மண்டை இடிண்ணு வந்திடப் போகுது! ( தந்தை சாக்கை எடுத்துப் போட, மகன் குடை எடுத்துக் கொண்டு வெளியே செல்கிறான். சொல்வதற்கு முன் செய்த மகனின் இச்செயலைக் கண்டு மனமுருகி நிற்கிறார், தந்தை)

**திரை**

**காட்சி- 3**

**இடம்** - வீடு

**காலம்** - பிற்பகல்

**பங்குபெறுவோர்** - தாய், தந்தை, மகன், இருமகள்கள்

( இரு மகள்களும் குடையைப் பிடித்துக் கொண்டு, வீடு வந்து சேர்கின்றனர்.)

**தங்கை** (தந்தையிடம்) அண்ணன் தெருவாசலில் நிற்காம்பா. எதிர்த்த வீட்டு தட்டோடிலேயிருந்து திடுதிடுண்ணு தண்ணி விழுதுல்லப்பா, அதைப் பார்த்துக்கிட்டிருக்கான். இவ்ளோ உசரத்திலேயிருந்து ரொம்பத் தண்ணி விழுதுப்பா.

**தாய்** (அதைக் கேட்டுக்கொண்டே) என்னது? மழைத்தண்ணி விழுகிறதை வேடிக்கை பார்த்துக்கிட்டு நிற்கிறானா? வேடிக்கை என்ன வேண்டி கிடக்கு? நாலு குடம் தண்ணியைப் பிடித்து வைத்தாலாவது, நாளையும் பின்னேயும் சோறு பொங்கிறதுக்கு ஆகும். ஆத்துத் தண்ணிக்குக் காத்துக் கிடக்கிற நேரமாவது மிஞ்சும். அவனைக் கூப்பிட்டுக் குடையைக் கையில் கொடுத்துத் தண்ணி பிடிக்கச் சொல்லக் கூடாதா?

(தந்தை உள்ளே சென்று, தண்ணீர் பிடிப்பதற்காகப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வெளியே வருகிறார். மகனோ பெய்து கொண்டிருக்கும் மழைநீரில் மகிழ்ச்சியுடன் குளித்துக் கொண்டிருந்தான். 'அருவி விழுது ! அருவி விழுது!' எனப் பாடிக் கொண்டிருந்தான். தந்தை அவனது மகிழ்ச்சியைக் கண்டு காலிப் பாத்திரங்களுடன் வீட்டிற்குத் திரும்பினார்.)

**தாய்** கையிலே செப்புப் பானையுங் குடையுமா திரும்பி வந்தாச்சே என்ன விஷயம்? அவனைக் காணோமா? அந்தக் கரிமுடிவான் இந்த மழையோட மழையாய் எங்கே போய்த் தொலைஞ்சான்?

**தந்தை** ( சிறிது நேரத்திற்கு பிறகு, கரகரத்த குரலில்) குற்றாலத்துக்கு !

(திரை)

முற்றும்

*****

## 8. ஒவ்வொரு கல்லாய் (திறனாய்வு)

**முன்னுரை**

"கடன்பட்டார் நெஞ்சம் போல்

கலங்கினான் இலங்கை வேந்தன்"

என்பது இராமாயணம் இங்கே கடன்பட்டு சொந்த வீடு கட்டி கலங்கிய நெஞ்சங்களைச் சித்தரிக்கிறது இந்தக் கட்டுரைக் கரும்பு ! ஏலம் போல் மணக்கின்ற என் தமிழில் - சந்தனமாய் மணக்கின்ற செந்தமிழில் எடுத்துரைத்தேன் படித்துப் பாருங்கள் இனிக்கும்.

**ஒண்டிக் குடித்தனக்காரரின் பற்றும் பாசமும்**

ஒண்டிக் குடித்தனக்காரர் மனைவி, மக்களை மிகவும் நேசிப்பவர். ஒண்டிக் குடித்தனத்தில் அவர்கள் பட்ட துன்பத்தை நினைத்துப் பார்க்கிறாள். மீண்டும் அந்த நிலை தனது குடும்பத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். அதனால் கடன்பட்டு மனை வாங்கி, வீட்டையும் கட்டி விடுகிறார். தனது இன்ப துன்பங்களை மனைவியோடு பகிர்ந்து கொள்கிறார். பொறுப்புகளை உணர்ந்து செயல்படுகிறார். மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளை மதிக்கத் தெரிந்த இவர் நாணயமுள்ள நல்ல மனிதர்.

**நல்ல மனைவி**

"காதலிருவர் கருத்தொருமித்து

ஆதரவுப்பட்ட வாழ்வில் இன்பம் இனிக்கும்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்று பாராட்டுமாறு இனிய வாழ்க்கை நடத்தினார் ஒண்டிக்குடித்தனக்காரரின் மனைவி.

இவர்தன் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்த இல்லத்தரசி ஆவார். வீட்டின் உரிமையாளர் வேறு யாருக்காவது வீட்டை அடகு வைத்து விட்டால் உண்டாகும் பின் விளைவுகளை எடுத்துக் கூறுபவரும் இவரே. " நாமும் சொந்தமாக வீடு கட்டலாம்" என்ற எண்ணத்தைக் கணவன் நெஞ்சில் விதைப்பவரும் இவரே. மனை வாங்கவும், திட்டமிட்டுத் தேவையான வசதிகளுடன் வீடுகட்டவும் இவரே துணை நிற்கிறார். கடன் தொல்லை நெருங்கும் போது "அகலக்கால் வைத்து விட்டீர்கள்" எனச் சராசரிப் பெண்ணாகச் சுட்டிக்காட்டியவரும் இவரே. எனினும் கணவனின் எல்லாச் செயல்களிலும் பங்கு கொண்டு, துன்பங்களுக்குத் தோள் கொடுத்து உதவுவதால் இவரை ' நற்குணமுடைய நல்ல மனைவி' என்று கூறலாம்.

"மனைவி அமைவதெல்லாம்

இறைவன் கொடுத்த வரம்"

என்ற பொன்மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.

**உண்மை விளம்பி**

வீட்டின் உரிமையாளர் பேண்ட்காரர். "கடன் வாங்கி வீட்டைக் கட்டி விட்டேன். குறைகள் இருக்கத் தான் செய்யும். வாடகை முந்நூறு ரூபாய். முன் பணம் மூவாயிரம் ரூபாய். நான் குடியிருக்கும் வீட்டுக்கு நூற்றைம்பது ரூபாய்தான் வாடகை. இப்போதைக்கு நாங்கள் இந்த வீட்டிற்குக் குடி வரமாட்டோம். மூச்சு முட்டும் கடன் தொல்லை நீங்கிய பிறகு தான் யோசிப்போம்" என்றுரைத்த பேண்ட்காரர் ஓர் உண்மை விளம்பியாவார்.

**பாசமுள்ள தந்தை**

கடன் வாங்கி துன்புற்று, தான் கட்டிய வீட்டிற்குத் தன்பெயரை வைக்கவில்லை. அவர், 'குமார் இல்லம்' எனத் தன் மகனின் பெயரையே வைத்தார். அப்பெயரையும், ஒரு சாண் உயர எழுத்துக்களாகச் சிமெண்டில் செய்து, மொட்டைமாடிச் சுவரில் ஏற்றி வைத்துப் பாசத்தை வெளிப்படுத்துகிறார்.

**பொறுப்பான தந்தை**

தன் மனைவி மக்களை நலமாகவும் வசதியாகவும் வாழவைக்கவே சொந்தமாக வீடு கட்டினார். எனவே, இவர் பொறுப்புணர்வு மிகுந்த தந்தை என்பது தெரிகிறது. தடைகளையும் இன்னல்களையும் தாண்டி வீட்டைக் கட்டிவிட்ட சாமர்த்தியசாலி இந்தப் பேண்ட்காரர்.

**நேர்மையாளர்**

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் வீட்டின் உரிமையாளர் "வேட்டி கட்டுகிறவன் கைலி கட்டுகிறவன் எல்லாம் சொந்த வீடு கட்டுகிறானே என்று எண்ணி , நானும் சொந்த வீடு கட்ட ஆசைப்பட்டது தவறாகப் போச்சு வாங்கிய கடன் கழுத்தை நெரிக்கிறது. இந்த வீட்டை ஈடாக வைத்துக் கொண்டு நாற்பதாயிரம் ரூபாய் கடனாகத்தாருங்கள். ஊரில் உள்ள நிலபுலன்களை விற்று மீட்டுக் கொள்கிறேன். உங்களுக்கும் முந்நூறு ரூபாய் வாடகை மிச்சமாகும் என்றார். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவே ஒவ்வொரு கல்லாய்ப் பார்த்துக் கட்டிய வீட்டையே ஈடு கொடுக்க துணிந்தார்.

**நல்ல மனிதர்**

மொத்தத்தில் வீட்டின் உரிமையாளர் குடும்பப் பொறுப்பு, கடமை உணர்ச்சி, நேர்மை நாணயம், மனித நேயம் நிறைந்த நல்ல மனிதராகக் காட்டப்பட்டுள்ளார்.

**முடிவுரை**

இக்கதையில் இடம்பெறும் மாந்தர்கள் வருவாய்க்கு மேல் செலவு செய்கின்றனர் சக்திக்கு மீறி கடன் வாங்குகின்றனர். இருந்தாலும் நேர்மையும் நாணயமும் தவறாத பண்புடைய, பொறுப்புடைய மாந்தர்களாகவே காட்டப் பெறுகின்றனர்.

**நீதி :**

வரவுக்கேற்ற செலவு வேண்டும். இல்லையெனில் கடன்பட்டு கலங்க நேரிடும்.

************

## 9. மண் (அய்க்கண்)

### இராமாயி - கதாபத்திரத் திறனாய்வு

**கதைச் சுருக்கம்:**

மகத்துவப் பிறப்பாம் மானிடப்பிறப்பு !

அதில் மங்கையராகப் பிறப்பதே பல தவங்களின் - வரங்களின் சிறப்பு! இதை மறந்து முல்லை அரும்புகளைக் கள்ளிப் பாலுக்கும் கடுக்காய்க்கும் காணிக்கையாக்கும் சமுதாய அவலத்தைச் சாடுவதே அய்க்கண் எழுதிய மண் கதையின் மகத்துவம்.

**கதாபாத்திரங்கள்**

கருப்பையா - இராமாயி என்ற தமிழ் தம்பதியர் ; ரிச்சர்டு - லிஸி என்ற ஆங்கிலேயத் தம்பதியர் ; சேவா தொண்டு நிறுவனர் கோவிராஜ், சூரப்பட்டி மக்கள், ' பெண் சிசுக்கொலை' என்ற சிக்கல் நிறைந்த சித்திரமே மண் வாசனை.

**மனம் கவர்ந்த கதாபாத்திரம்**

இராமாயிதான் இக்கதையின் நாயகி! சமூக சேவகி! என் உள்ளம் கவர்ந்த உத்தமி !



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**வறுமையிற் செம்மை**

சூரப்பட்டி கிராமம் வானம் பார்த்த பூமி, அங்கு ஆண்டு முழுவதும் விவசாய வேலை இருப்பது இல்லை. இராமாயி,

சோறு கிடைத்த போது உண்டு

கிடைக்காத போது சோங்கி வாழும்

எளிய - ஏழ்மை வாழ்க்கை உடையவள்தான். ஆனால், 'வறுமையிற் செம்மை' என்று பாராட்டத் தகுந்த உன்னத வாழ்க்கை அவளது வாழ்க்கை !

**வறுமையின் நிறம் சிவப்பு**

அந்த வட்டாரத்தில், நிலவுகளாய் - முத்துகளாய் - ஏழைகளின் இல்லத்தில் பிறப்பெடுக்கும் பெண் சிசுக்கள் ! வ றுமைத் தாண்டவமும் அறியாமையும் அந்தோ ! அந்த முல்லை அரும்புகளின் உயிர் குடிக்கும் !

**தொண்டுள்ளம் வாய்ந்த தொண்டர்**

கோவிராஜ் - இவர் மண்ணில் மங்கையர் நலம் காத்திட மறு பாரதியாய் உருக்கொண்டவர். அவர் செய்திட்ட சேவைகளைப் படித்த நாவெல்லாம் வாழ்த்தும், பார்த்த உள்ளமெல்லாம் உருகும். பெண்சிசுக் கொலையால் சமுதாயச் சமனிலை சீர்குலையும் என்பதைச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் போதிப்பவர்.

கோவிராஜின் அறிவுரைகள் கருப்பையா இராமாயி தம்பதியர் மனதைத் தொட்டன. இராமாயி இயல்பாகவே இரக்க மனம் உடையவள். கோவிராஜின் பேச்சால் அஞ்சா நெஞ்சம் பெற்றாள். அவளது ஈரமும் வீரமும் பெண்சிசுக் கொலைக்கு எதிராக போராட அவளுக்கு தோள்கொடுத்தன.

**தாய்ப்பாசம்**

கருப்பையா- இராமாயி தம்பதியர்க்கு இரண்டு பெண் மக்கள். இரண்டு முறையும் கள்ளிப்பாலுடன் வருகை தந்த ஊர்ப்பெண்களின் கால்களில் விழுந்து, கதறி அழுது தன் மழலைகளை மண்ணில் தவழச் செய்து விட்டாள் இராமாயி ! அந்தத் தாய்பாசம் - உயிர்நேசம் என்னைக் கவர்ந்தது. மூன்றாம் முறையாகத் தாய்மை அடைந்தாள் இராமாயி.

**நிலவிலும் ஒரு குறை**

'ஸேவா' தொண்டு நிறுவனத்திற்கு தோள் கொடுப்பவர்கள் ரிச்சர்டு - லிசி என்ற வெளிநாட்டுத் தம்பதியர். அவர்கள் உடல் நிறம் போலவே மனதும் வெள்ளை. பால் நிலவிலும் கறை ஒரு குறையாகவே உள்ளது போல இவர்களுக்குக் குழந்தைப் பேறு இல்லை என்பது ஒரு குறையாக இருந்தது. மடியில் தவழும் மழலைச் செல்வம் இல்லாது மறுகினர்! தமிழ் நாட்டுக் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க விரும்பினர். தமது விருப்பத்தைக் கோவிராஜிடம் கூறியிருந்தனர்.

**தாய்மையின் உன்னதம்**

"மூணாவது பொண்ணு முத்தமெல்லாம் பொன்னு"

என்று தன் மகவைக் கொஞ்சியவள் கள்ளிப்பாலுடன் வந்து நின்ற பெண்களைப் பார்த்து அதிர்ந்து போனாள். மரிக்கொழுந்தாக வலம் வரும் இராமாயி தன்குலக்கொழுந்தை உலகில் வாழ வைக்கத் துணிந்தாள் சூரப்பட்டி மங்கையர் நடுவே குட்டிச் சிங்கமாய்த் திகழ்ந்தாள். கள்ளிப் பாலுக்கு நடுவில் தாலாட்டுப் பாடும் இராமாயி கதாபாத்திரம் தாய்மையின் உன்னதம்!

**கருத்தொருமித்த வாழ்வு**

இந்தச் சூழலில் கோவிராஜ் வந்தார். ரிச்சர்டு - லிஸியின் முடிவைச் சொன்னார். மகவைக் காக்க வழி சொன்னார். சோர்ந்து போன தம்பதியர் சேர்ந்து சிந்தித்தனர். ஊர்மக்களின் மிரட்டலையும் மதியாமல் தத்துக் கொடுத்தனர். இவ்வாறு கணவனுடன் கருத்தொருமித்து வாழ்ந்த இராமாயி கதாபாத்திரம் என்னை ஈர்த்தது.

**வழிமேல் விழி**

பிள்ளையைத் தத்துக் கொடுத்ததை இராமாயி தவிர ஊரார் மறந்து ஆண்டுகள் 21 ஓடிப்போனது. தத்தாகப் போன மகவு வாலை இளங்குமரியாகத் தாய் மண்ணில் காலடி பதிக்கிறாள். இராமாயி மட்டுமல்ல சூரப்பட்டி கிராமமே விழாக்கோலம் பூண்டது. கோவிராஜ் விமான நிலையத்திலிருந்து அவர்களை அழைத்து வந்தார். அந்தப் பிள்ளைக்கு என்ன பெயரிட்டனரோ? குழந்தை கருப்போ? சிவப்போ என்ன மொழி பேசுமோ? என்று ஆயிரம் கேள்விகளோடு வழிமேல் விழி வைத்து நின்றாள் இராமாயி.

**பாசமழை பொழிந்த இராமாயி**

அப்பச்சி ! ஆத்தா எப்படி இருக்கீங்க! என்று சுந்தரத் தமிழ் பேசிய மகளை ஆரத்தழுவினாள். ஆங்கிலேய வளர்ப்பில் தமிழ் மணம் கமழ்வதை எண்ணி வியந்தாள். மகளின் பெயர் தன் மாமியாரின் பெயரான 'சின்னத்தாயி' என்பதைக் கேட்டு அசந்து போன இராமாயி பாசமழை பொழிந்தாள்.

**விருந்தோம்பல் பண்புடைய இராமாயி**

ரிச்சர்டு - லிஸி தம்பதியரை வரவேற்றாள். பண்புடன் உணவு தந்து உபசரித்தாள். தன் மகளை தமிழ் மண்ணுக்கேற்ற பெண்ணாக வளர்த்த பான்மைக்கு நன்றி பாராட்டினாள். தமிழர் பண்பை உபசரிப்பில் காட்டி விஞ்சி நின்றாள்.

**விழித்திரையில் நீர்த்துளி**

மூன்று நாட்கள் கழிந்தன. வந்தவர்கள் விடைபெறும் வேளை அது

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புண்கணீர் பூசல் தரும்"



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்ற வள்ளுவரின் வாய்மொழி மெய்யானது. இராமாயி தன் மகளை விழித்திரையில் நீர்த்துளி பெருக வழியனுப்பி வைத்தாள்.

**தமிழ் மண்ணின் மணமும் குணமும் நிறைந்த இராமாயி**

ரிச்சர்டு - லிஸி தம்பதியர் கோவிராஜிடம் இராமாயி குடும்பத்தின் வறுமைப் போக்க இரண்டு இலட்ச ரூபாய் மதிப்புள்ள பணத்தைச் சேர்த்து விடுமாறு மதுரை விமான நிலையத்தில் கொடுத்துச் சென்றனர். சூரப்பட்டி வந்த கோவிராஜ் அதை அந்த தம்பதியரிடம் கொடுத்தார். ஆனால், "எங்கள் குழந்தையை விலைக்கு விற்கவில்லை. தானமாகத் தந்தோம். தானமாகக் கொடுத்த ஒன்றிற்கு விலை பேசுவதோ, அதைத் திரும்பப் பெறுவதோ தமிழ் மண்ணிற்கு அழகல்ல" என்று கூறி அதைப்பெற திட்டவட்டமாக மறுத்துவிட்டாள் இராமாயி. அதுமட்டுமல்ல உடனே அதை அவர்களுக்கே திருப்பி அனுப்பி விடுமாறு கேட்டுக் கொண்டாள்.

**பாராட்டுப் பெற்ற இராமாயி**

தமிழ் மண்ணில் மட்டுமே இராமாயி, சின்னத்தாயி போன்ற பெண்கள் பிறக்க முடியும். திருக்குறளும், திருவாசகமும் தழைக்க முடியும் என ரிச்சர்டு பாராட்டும் பாக்கியம் பெற்றாள்.

**முடிவுரை:**

துணிவுத் தாரகையாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், மனித நேய மாண்புடையவளாய்த் திகழும் இராமாயி கதாபாத்திரம் உன்னதப் படைப்பு.

**நீதி :** பெண் சிசுக் கொலை கூடாது.

--------------------

## 10.பழிக்கு பழி

### அண்ணன் - கதை மாந்தர் திறனாய்வு

**முன்னுரை**

பழிக்குப் பழி என்ற சிறுகதையின் ஆசிரியர் த. ந. சேனாதிபதி. சமுதாயச் சிக்கல்களுக்கு தீர்வு தரும் இவரது சிறுகதைகள் காலத்தின் கண்ணாடி.

**மனம் கவர்ந்த கதாபாத்திரம்**

பாசம், பொறுப்புணர்வு நிறைந்த அண்ணன் கதாபாத்திரமே என் மனம் கவர்ந்த கதாபாத்திரமாகும்.

**அண்ணன் ஒரு கோயில்**

தாய் தந்தை இல்லாத குறை தெரியாமல் அண்ணன், கிட்டுவிடம் அன்பாக நடந்து கொண்டார். தம்பியிடம் பாசம் காட்டினார். நன்றாகப் படிக்கும்படி தம்பியை ஊக்குவித்தார். அண்ணியும் கிட்டுவை ஆதரவுடன் கவனித்தாள். பள்ளி இறுதி வகுப்பில் கிட்டு தேர்ச்சி பெற்றான்.

"அண்ணன் ஒரு கோயில் என்றால்

தம்பி அதில் தீபம் அன்றோ"

என்னும்படி வாழ்க்கை சென்றது.

கிட்டுவைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்த்தார் அண்ணன். கிட்டுவும் முதலாம் ஆண்டு நன்றாகப் படித்தான். தேர்ச்சி பெற்றான். கிட்டுவைப் பொறுத்தவரை அண்ணன் ஒரு கோயில் தான்.

**தாயும் நீயே! தந்தையும் நீயே!**

இரண்டாம் ஆண்டில் கிட்டு நேரத்துடன் வீட்டிற்கு வருவதில்லை, சரியாகப் படிக்கவில்லை. அதனால்அண்ணன் தம்பியைக் கண்டித்தார். அன்பில் அன்னை, கண்டிப்பில் தந்தை எனத் தம்பியைப் பாசத்துடன் வளர்த்தார் அண்ணன்.

**பேராசிரியரை சந்தித்ததில்**

ஒரு நாள் கிட்டுவின் வரலாற்றுப் பேராசிரியரைச் சந்தித்தார் அண்ணன். பேராசிரியரோ உங்கள் தம்பி கிட்டு இராமு இன்னும் நாலைந்து பேருடன் சேர்ந்து வகுப்பிற்கு மட்டம் போடுகிறான். கண்டிக்க கூடாதா? என்று கூறி சென்றார். அண்ணனும் தம்பியைக் கவனித்துக் கொள்வதாக அவரிடம் கூறினார்.

**கண்டிப்பு நிறைந்த தமையன்**

"இதோ பாரு ! நீ படிச்சாதான் உன் வாழ்வு வளம் பெறும் ; ஊர் சுற்றுவதை விடு ; ஒழுங்காக படி" என்று கண்டித்தார் அண்ணன். தம்பியைக் கண்டித்துத் திருத்திய இந்த அண்ணன் பொறுப்புணர்வு நிறைந்தவராகத் திகழ்கிறார்.

**இளகிய உள்ளம் படைத்த தமயன்**

அந்த ஆண்டு கிட்டுதேர்வில் தோல்வி அடைந்தான். "ஊர் சுற்றாதே என்று எச்சரித்தேனே ! கேட்டாயா?" என்று கிட்டுவைத் திட்டித் தீர்த்தார் அண்ணன். அதுவரை தன்னிடமிருந்து இப்படி திட்டு வாங்கியிராத தம்பியின் கண்களில் கண்ணீர்ஆறாகப் பெருகியதைக் கண்ட அண்ணனின் உள்ளம் உருகிறது. இளகிய உள்ளம் என்னைக் கவர்ந்தது.

**அறிவொளி ஏற்றிய அண்ணன்**

மனம் திருந்திய கிட்டு ஓயாமல் படித்தான். "இப்படி ஓயாமல் படித்தால் என்ன ஆகும்" என்று வருந்தினார் அண்ணன். நல்ல கதைப் புத்தகங்களைத் தேடி வாசிக்கக் கொடுத்தார். அவற்றுள் திவான் பகதூர் கண்ணப்ப முதலியார் எழுதிய 'பழிக்குப்பழி' என்ற நாடக நூலைக் கிட்டு விரும்பிப் படித்தான்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**பரிதவித்த உள்ளம்**

ஒருநாள் கிட்டுவைப் பார்க்க மாடிக்குச் சென்றார் அண்ணன் . அங்கே "அடே துஷ்டா ! துன்மார்க்கா ! என் குடியைக் கெடுத்த கோடரிக் காம்பே! பாவி' என்று கத்துவதும், தொடர்ந்து தொப்பென்று யாரோ விழும் சத்தமும் கேட்டது. அண்ணன் பதறிப் போனார். கதவைத் தட்டினார். அது உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. எதிர் வீட்டு சுப்பு, கிட்டு வேறு வழியாக வெளியேறியதாகக் கூறினான். கிட்டு அன்று இரவு வீட்டிற்கு வரவில்லை. தம்பியைக் காணாது பரிதவித்தான் அண்ணன்.

**இரத்தம் உறையச் செய்த காட்சி**

ஒருவேளை தம்பி சொந்த ஊரான நம் கிராமத்திற்குச் சென்றிருப்பானோ? என்று எண்ணி காலையில் இரயில் ஏறினார். இறங்கி இலுப்பைத் தோப்பு வழியாக நடந்தார். அங்கேயும் "அடே துஷ்டா! துன்மார்க்கா! என் குடியைக் கெடுத்த பாவி!" என்ற குரல் கேட்டது . தம்பியின் குரல் கேட்ட திசையை நோக்கி ஓடினார் அண்ணன். அங்கே அவர் கண்ட காட்சி அவர் இரத்தத்தை உறையச் செய்தது.

**இரத்த பாசம்**

கிட்டு இராமநாதன் (இராமு) மார்பின் மேல் அமர்ந்து கத்தியால் குத்த முயன்றான். "ஐயோ! கிட்டு இராமுவைக் கொல்லாதேடா! இராமு நம் தம்பியடா! என்று கூறிய போது இரத்த பாசத்தை வெளிப்படுத்திய அண்ணனாகக் காணப்பட்டார். தம்பி தவறிழைத்து விட்டால் அவன் வாழ்வு பாழாகிவிடுமே எனத் துடித்த அண்ணன் மூர்ச்சையாக்கிப் போனார்.

**பழிக்குப் பழி**

நினைவு திரும்பி அண்ணன் கண்விழித்தார். கிட்டுவும் இராமுவும்அண்ணன் முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சொன்ன பிறகு தான் அண்ணனுக்கு உண்மை தெரிந்தது. தசரா விடுமுறையில் ஊரில் ' பழிக்கு பழி' என்ற நாடகம் நடத்த திட்டமிருந்தனராம். அதில் கிட்டு கதாநாயகனாம். இராமு துன்மார்க்கனாம். அதற்கான ஒத்திகை தான் சென்னையிலும் இலுப்பைத் தோப்பிலும் தான் கேட்ட பார்த்த காட்சிகள் என்பதை அண்ணன் புரிந்து கொண்டார்.

**முடிவுரை:**

அன்னையைப் போல் அரவணைத்து, தந்தையைப் போல் கண்டித்து , அண்ணனாக அன்பு காட்டி, கண் போல் காத்து, வளர்த்து, கல்வியறிவூட்டிய கிட்டுவின் அண்ணன் என்னைக் கவர்ந்தது போலவே உங்களையும் கவர்ந்திருப்பார்.

**கதை உணர்த்தும் நீதி**

"பதறிய காரியம் சிதறும்" என்பதே இக்கதை உணர்த்தும் நீதியாகும்.

----------

## சட்டை (திறனாய்வு)

### ஜெயகாந்தன்

**முன்னுரை:** வாழ்வில் நடைபெறும் யதார்த்தங்களைப் பதார்த்தம் போல் கதை புனைவார் ; தன் சிறுகதைகளைப் படிப்போரைக் காந்தம் போல் கவர்வார் ;அவரே ஜெயகாந்தன் அவரது 'சட்டை' என்றும் இச்சிறுகதையில் வரும் பூந்தோட்டச் சாமியார் அன்பிலும் பண்பிலும் நாட்டுப் பற்றிலும் படிப்பவர் மனதில் உயர்ந்து நிற்கிறார்.

**கதை மாந்தர்கள்:** பூந்தோட்ட சாமியார்
கோயில் குருக்கள்
பட்டாளத்துப் பெரியசாமிப் பிள்ளை - மகன் சோமநாதன்
மாணிக்கம் செட்டியார் -அவரது மனைவி

**கதையின் கரு:** " நம் உடம்பு நமது ஆன்மாவிற்கு ஒரு சட்டை".

**சாமியாரின் அறிமுகம்:** அரையில் ஒரு துண்டு; நெஞ்சுக்குழி வரை அடர்ந்த தாடி தீட்சண்யமான பார்வை . இதுவே பூந்தோட்டச் சாமியாரின் தோற்றம். இவருக்கென உறவுகள் ஏதுமில்லை. சிவன் கோயில் தாள் இவருக்குத் தஞ்சம். கோயில் குருக்கள் தரும் பிரசாதமே இவரது உணவு.

**தொண்டு செய்யும் தூய உள்ளம்:** குருக்கள் வீட்டுத் தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பறிப்பார்; செட்டியார் வீட்டிற்கு என் மூட்டை சுமப்பார் நந்தவனச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவார் ; பூப்பறித்துத் தருவார். இவ்வாறு பூந்தோட்டச் சாமியார் எல்லாருக்கும் தொண்டு செய்யும் தூய உள்ளம் உடையவராக வாழ்ந்தார்.

**துயர் துடைக்கும் தூயவர்:** மாணிக்கம் செட்டியாரின் மனைவி, தன் மகன் இருக்கும் ஊரில் தற்போது சண்டை நடைபெறுவதால்அவனைக் காத்தருளவேண்டுமென விநாயகப் பெருமானை வேண்டினார். உருக்காமான அந்த வேண்டுதலைக் கண்ட சாமியார் "கவலை வேண்டாம் விக்னேஸ்வரர் துணையிருப்பார்" என்று ஆறுதல் கூறிய போது துயரி துடைக்கும் தூயவராகத் திகழ்கிறார்.

**சாமியாரின் நாட்டுப் பற்று:** கோயில் விழாவிற்காகச் சமுக்காளம் வாங்கச் பட்டாளத்துப் பெரியசாமி வீட்டிற்சுச் சென்றார் பூந்தோட்டச் சாமியார். பட்டாளத்துப் பெரியசாமிப் பிள்ளை இரு உலகப் போரில் பங்கு பெற்றவர். தன் ஒரே மகனையும் இராணுவத்தில் பணியாற்றிட அனுப்பி வைத்தவர். அந்தச் சோமநாதனோ போரில் வீர மரணம்அடைந்தான். எனினும் அவர் மனம் தளரவில்லை. "தீயோர் இருக்கும் வரை தீமைகள் இருக்கும் சண்டைகள் இருக்கும். ஆனால் தர்மம் ஒரு போதும் அழியாது"



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்ற பட்டாளத்தாரின் நாட்டுப் பற்று மிகுந்த பேச்சு சாமியார் மனதிலும் நாட்டுப் பற்றைப் பற்ற வைத்தது. இதுவரை இருளில் கிடந்த தன் வாழ்க்கைக்கு ஒளி கிடைத்து விட்டதாகஅவர் எண்ணினார்.

**சாமியாரை ஈர்த்த கீதை:** அன்று இரவு கோயிலில் பண்டிதர் ஒருவர், " இந்த உடம்பு நம் ஆன்மாவின் சட்டை ; சட்டை பழசானதும் ஆன்மா அதை உதறி விடுகிறது. எல்லா உயிர்களும் விரும்பியோ விரும்பாமலோ ஏதோ ஒரு தொழிலுடன் இணைக்கப்ட்டுள்ளன. கர்மத்தின் பலனில் பற்றில்லாமல் செய்ய வேண்டிய தொழிலைச் செய்பனே துறவி அவன் யோகி." என்று சொற்பொழிவு ஆற்றினார். கீதை காட்டிய இந்தப் பாதை சாமியாரை ஈர்த்தது.

**சாமியாரும் இலட்சியமும்:** சோமநாதனின் வீர மரணத்திற்குப் பிறகும் மனம் தளராமல் பட்டாளத்துப் பெரியசாமிப் பிள்ளை சாமியாரின் மனதில் உயர்ந்து நின்றார். அவரே உண்மையான துறவி என சாமியார் முடிவு செய்தார். அவரைப் போல் தம் வாழ்வை அமைத்து சாமியார் கொள்ளும் இலட்சியம் கொண்டார் ; உறுதியான முடிவெடுத்தார் யாரிடமும் சொல்லாமல் கோயிலை விட்டு வெளியேறினார்.

**சாமியாரும் நாட்டுப் பற்றும்:** மழுங்கச் சிரைத்த மோவாய்; உதட்டுக்கு மேல் முறுக்கி விட்ட மீசை; கிராப்புத்தலை; காக்கிச் சட்டைக்குள் புடைத்துக் கவசமிட்டது போல் கம்பீரமான மார்பு. நாட்டுப் பற்று நிறைந்த சாமியாரின் தோற்றம் கண்டு கோயில் குருக்கள் கண் கலங்கினார் . பட்டாளத்துப் பெரியசாமியோ தன் மகனாக எண்ணி அவரைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

**முடிவுரை:** 'வாழ்க்கையை வெறுப்பது மட்டும் துறவல்ல. நாட்டு மக்களின் நலன் காக்கப் போருக்குச் செல்வதும் துறவே' என்ற உயர்ந்த கருத்தை ஜெயகாந்தன் அனைவர் மனதிலும் ஆழமாகப் பதியச் செய்து விட்டார். பூந்தோட்டத்து ச் சாமியாரோ தமது தனிப் பண்புகளாலும் நாட்டுப் பற்றினாலும் நம் மனதில் உயர்ந்து நிற்கிறார்.

-----------------

**தமிழாக்கம்**

1. A friend in need is a friend in friend in deed.
   ஆபத்தில் உதவுபவனே உண்மை நண்பன்
2. A little knowledge is dangerous
   அரை குறை அறிவு ஆபத்தானது
3. A law maker should not be a law breaker
   வேலியே பயிரை மேயலாமா?
4. A penny saved is a penny gained
   சிறு துளி பெருவெள்ளம்
5. A young calf knows not fear
   இளங்கன்று பயமறியாது
6. A man of courage never wants weapons
   வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
7. A little stream will drive a light mill
   சிறு துரும்பும் பல் குத்த உதவும்
8. Adding fuel to the flame
   எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே
9. All covet all loss (or) Covet all lose all
   பேராசை பெரு நஷ்டம்
10. All that glitters is not gold
    மின்னுவதெல்லாம் பொன்னல்ல
11. An artist lives every where
    கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
12. Art is long and the life is short
    கல்வி கரையில கற்பவர் நாள் சில
13. As is the king so are his subjects
    அரசன் எவ்வழியோ மக்கள்அவ்வழி
14. As you row so shall you reap
    வினை விதைத்தவன் வினை அறுப்பான்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தினை விதைத்தவன் தினைஅறுப்பான்

15. Barking dog seldom bites
குரைக்கின்ற நாய் கடிக்காது
16. Birds of the same feather flock together
இனம் இனத்தோடு சேரும்
17. Blood is thicker than water
தானாடா விட்டாலும் தன் தசை ஆடும்
18. Calm before the storm
புயலுக்கு முன் அமைதி (அல்லது) புலி பதுங்குவது பாய்வதற்கு
19. Cast no pearls before swine
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
20. Do in Rome Romans do
ஊருடன் ஒத்து வாழ்
21. Distance lands enchantment to the view
இக்கரைக்கு அக்கரை பச்சை
22. East or West home its the best
எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
23. Empty vessels make much noise
குறைகுடம் கூத்தாடும்
24. Every vessels make much noise
சாண் ஏறினால் முழம் சறுக்கும்
25. Every ass loves his bray
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
26. Every homes some times nods
ஆனைக்கும் அடி சறுக்கும்
27. Face is the index of the mind
அகத்தின்அழகு முகத்தில் தெரியும்
28. Familiarity breeds contempt
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
29. Failure is the stepping stone to success
தோல்வியே வெற்றிக்கு முதல் படி
30. God is love
அன்பே கடவுள்
31. Honest is the best policy
நேர்மையே சிறந்த கொள்கை
32. Haste makes waste
பதறிய காரியம் சிதறும்
33. Knowledge is power
அறிவே ஆற்றல்
34. Look before you leap
ஆழம் தெரியமாமல் காலை விடாதே
35. Let every man praise the bridge he goes over
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
36. Love is God
அன்பே கடவுள்
37. Man proposes God disposes



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அன்பே கடவுள்

38. Make hay while the sun shines
    காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
39. Money makes many things
    பணம் பத்தும் செய்யும்
40. No rain go gain
    மாரியல்லாது காரியமில்லை
41. No pain no gain
    உழைப்பின்றி ஊதியமில்லை
42. Necessity has no law
    ஆபத்திற்குப் பாவமில்லை
43. Necessity has no law
    ஆபத்திற்குப் பாவமில்லை
44. Necessity is the mother of invention
    தேவையே கண்டுபிடிப்பின் தாய்
45. One flower makes no garland
    தனிமரம் தோப்பாகாது
46. Prevention is better than cure.
    வெள்ளம் வரும் முன அணை போடு (அல்லது) வரும் முன் காப்பதே மேல்
47. Practice makes one perfect
    விடா முயற்சியே ஒருவனை சிறந்ததாக்கும்
48. Self help is the best help
    தன் கையே தனக்குதவி
49. Slow and steady with the race
    பொறுத்தார் பூமி ஆள்வார்
50. Strike the rod while it is list
    காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
51. Too much of anything is good for nothing.
    அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்.
52. Tit for tat.
    பழிக்குப் பழி.
53. To err is human, to forgive is divine.
    தவறு செய்வது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வ இயல்பு.
54. The more haste the worse speed.
    பதறிய காரியம் சிதறும்.
55. Truth alone triamphs.
    வாய்மையே வெல்லும்.
56. The pen is thicker than the sword.
    வாய் முனையை விட பெனா முனை
57. To the good people world appeares good.
    நல்லோருக்கு உலகம் நல்லதாகவவே தோன்றும்.
58. Union is strength.
    ஒற்றுமையே வலிமை
59. United we stand, divided we fall.
    ஒன்றுபட்டால், உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

60. Where there is a will ther is a way.
மனமிருந்தால் மார்க்கம் உண்டு.
61. Well begun is half - done.
நல்ல தொடக்கும் பாதி வெற்றி.
62. keep off the grass.
புல்வெளி மீது நடவாதீர்.
63. Rain harvest is a must to improve ground water level.
நிலத்தடி நீரைப் பெருக்க மழைநீர் சேகரிப்பு அவசியமான ஒன்றாகும்.
64. Villages are the back bone of our country said Gandhiji.
கிராமங்களே நம் நாட்டின் முதுகெலும்புகள் என்றார் காந்தியடிகள்.
65. Physics is closely linked with other sciences.
இயற்பியல் மற்ற அறிவியலோர் நெருங்கி இணைந்தது.
66. Everybody thinks alike.
தன்னைப் போல் பிறரை நேசி.
67. Education should develop and promote good values.
68. Somethingis better than nothing.
ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூவே சர்க்கரை.
69. Students want to join computer education.
மாணவர்கள் மணிப்பொறிக் கல்வி பயில (அணைய) விரும்புகின்றனர்.
70. Walls have ears.
அக்கம் பக்கம் பார்த்து பேசு.
71. Sense of hounour a helathy way of life
வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டு போகும்
72. Experience is the best teacher
அனுபவமே சிறந்த ஆசான்
73. Work is workship
செய்யும் தொழிலே தெய்வம்
74. Hear much speak little.
குறைவாகப் பேசு; அதிகம் கேள்
75. An ideal teacher is a friend philosoper and guide off the student.
தனித்துவம் வாய்ந்த ஆசியரிர் மாணவர்களுக்கு நல்ல நண்பனாக , தத்துவாதியாக, வழி காட்டியாக இருப்பான்.
76. A bad workman blames his tools.
ஆடத் தெரியாதவனுக்கு தெரு கோணல்
77. Please confirm your exam result by telephone.
தயவுசெய்து தேர்வு முடிவை தொலைபேசி மூலம் உறுதி செய்து கொள்ளுங்கள்.
78. Think before you speak
சிந்தித்துப் பேசு.
79. Indian people always dislike viiolence
இந்திய மக்கள் எப்போதும் வன்முறையை வெறுப்வர்கள்
80. Keep of the grass
புல்லின் மீது நடவாதீர்.

## வாக்கியப் பிழையைத் திருத்துதல்

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | வண்டிகள் ஓடாது | வண்டிகள் ஓடா |
| 2. | அவை இங்கே உளது | அவை இங்கே உள |
| 3. | அது எல்லாம் | அவை எல்லாம் |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | | |
|---|---|---|
| 4. | மக்கள் கிடையாது | மக்கள் இல்லை |
| 5. | வருவதும் போவதும் கிடையாது | வருவதும் போவதும் கிடையா |
| 6. | ஒன்றோ அல்லது இரண்டோ தருக | ஒன்றோ இரண்டோ தருக |
| 7. | சென்னை என்ற நகரம் | சென்னை என்னும் நகரம் |
| 8. | எனது மகன் | என் மகன் |
| 9. | ஏற்கத் தக்கது அல்ல | ஏற்கத் தக்கது அன்று |
| 10. | அவளது தந்தை | அவள் தந்தை |
| 11. | புலி வந்தன | புலி வந்தது |
| 12. | எருதுகள் ஓடியது | எருதுகள் ஓடின |
| 13. | பூக்கள் மலர்ந்து மணம் வீசியது | பூக்கள் மலர்ந்தது மணம் வீசின |
| 14. | எனக்குப் பல வேலைகள் இருக்கிறது | எனக்கு வேலைகள் பல இருக்கின்றன |
| 15. | இங்குள்ளது எல்லாம் நல்ல பழங்களே | இங்குள்ளவை எல்லாம் நல்ல பழங்களே |
| 16. | எனக்குப் பல வீடுகள் உள | எனக்கு வீடுகள் பல உள்ளன |
| 17. | இது பொது வழி அல்ல | இது பொது வழி அன்று |
| 18. | விழாவில் பல அறிஞர் பேசினர் | விழாவில் அறிஞர் பலர் பேசினர் |
| 19. | தென்றல் மெல்ல வீசின | தென்றல் மெல்ல வீசியது |
| 20. | வாகனத்தை இடது பக்கம் திருப்பாதே | வாகனத்தை இடப்பக்கம் திருப்பாதே |
| 21. | பத்துப் பழங்களில் ஒரு பழமே நல்லன | பத்துப் பழங்களில் ஒரு பழமே நல்லது |
| 22. | வலது பக்கச் சுவரில் எழுதாதே | வலப்பக்க சுவரில் எழுதாதே |
| 23. | ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது | ஒவ்வொரு சிற்றூரிலும் ஊராட்சி உள்ளது |
| 24. | நம் தேசியக் கொடியில் மூவண்ணம் உள்ளது | நம் தேசியக் கொடியில் மூவண்ணங்கள்உள்ளன. |
| 25. | நான் ஒரு புதிய நூல் ஒன்று வாங்கினேன் | நான் ஒரு புதிய நூல் வாங்கினேன். |

26. மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.
    மாணவர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும்
27. அவர்தான் கூறினார் இவர்தான் கூறினார் என்று பாராது எவர் தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.
    அவர்தாம் கூறினார் இவர் தாம் கூறினார் என்று பாராது எவர்தாம் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.
28. நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.
    நல்லவையும் கெட்டவையும் பத்திரிபைகள் வெளியிடப்படுகின்றன.
29. கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர்
    கண்ணன் முருகன் வேலன் ஆகியோர் வந்தனர்.
30. சென்னைக்கு அருகாமயில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
    சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று.
31. தலைவி தலைவனோடு சென்றார்.
    தலைவி தலைவனோடு சென்றாள்.
32. இதனைச் செய்தவர் இவரல்லவா?
    இதனைச் செய்தவர் இவரல்லரோ?

**வல்லின மெய்களை இட்டு எழுதுக**

1. நெல்லிக்காய், தான்றிகாய் கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.
   நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் ஆகிய மூன்று சரக்குகளைக் கொண்டது திரிபலை எனப்படும்.
2. கொச்சை சொற்களும் வழூஉச் சொற்களும் மிகுதியாக புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை புறக்கணிக்க கூடுமோ?
   கொச்சைச் சொற்களும் வழூஉ சொற்களும் மிகுதியாகப் புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை புறக்கணிக்கக் கூடுமோ?
3. கலைத்துறை, மொழிதுறை, மருத்துவதுறை, இசைதுறை, சமயதுறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிதன்றோ?
   கலைத்துறை, மொழித்துறை, மருத்துவத்துறை, இசைத்துறை சமயத்துறை ஆகியவற்றிற்குஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிதன்றோ?
4. தமிழிசையில் ஆயபாலை, வட்டபாலை, திரிகோண பாலை, சதுரபாலை என்ற நான்கு இசைமுறைகள் இருந்தன.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தமிழிசையில் ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப் பாலை, சதுரப்பாலை என்ற நான்கு இசைமுறைகள் இருந்தன.

5. ஏட்டுச் சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
   ஏட்டுச் சுவடிகளில் சித்த மருத்துவச் செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
6. பட்ட பகலிலே பாவலர்க்கு தோன்றும் நெட்டை கனவு
   பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றும் நெட்டைக் கனவு
7. பதிக கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதல் ஆகும்.
   பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் ஆகும்.
8. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்கு தள்ளாது புத்தேள் உலகு.
   கள்வர்க்குத் தள்ளும் உயிர் நிலை கள்ளாக்குத் தள்ளாது புத்தேள் உலகு.
9. தேருளை புரவி வாரண தொகுதிம திறைகள் கொண்டு வரம் மன்ன
   தேருளைப் புரவி வாரணத் தொகுதி திறைகள் கொண்டு வரம் மன்ன
10. தொன் மூதாலத்து பொதியில் தோன்றிய நாலூர் கோசர்
    தொன் மூதாலத்துப் பொதியில் தோன்றிய நாலூர்க் கோசர்.
11. படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும் செல்வம்.
    படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும் செல்வம்
12. அறிவு குறைவு கவனக் குறைவு திறமை குறைவு ஆகியவற்றால் விபத்துகள் உண்டாகின்றன.
    அறிவுக் குறைவு கவனக் குறைவு திறமைக் குறைவு
13. ஊட்ட சத்து குறைவால் கருக் கொண்ட தீர்க்கும் உளவியல் சிந்தனைகளை சேர்க்க வேண்டும்.
    ஊட்டச்சத்துக் குறைவால் கருக் கொண்ட தாய் குறைபேற்றுக்கு ஆளாகலாம்.
14. பாடதிட்டத்தில் குமரபருவ சிக்கல்களை தீர்க்கும் உளவியல் சிந்தனைகளை சேர்க்க வேண்டும்.
    பாடத் திட்டத்தில் குமரப் பருவச் சிக்கல்களைத் தீர்க்கும் உளவியல் சிந்தனைகளைச் சேர்க்க வேண்டும்.
15. போதை பழக்கத்தால் ஊசிகளை பகிர்ந்து கொள்ளுதலும் எய்ட்ஸ் நோய்க்கு காரணம் ஆகும்.
    போதைப் பழக்கத்தால் ஊசிகளைப் பகிர்ந்து கொள்ளுதலும் எய்ட்ஸ் நோய்க்குக் காரணம் ஆகும்.
16. உணவு பொருள் தர குறைவாக விற்கப்படுவதால் நச்சுக் காளான் உண்டாகிச் செரிமானம் குறைகிறது
    உணவுப் பொருள் தரக்குறைவாக விற்கப்படுவதால் நச்சுக் காளான் உண்டாகிச் செரிமானம் குறைகிறது.
17. "செல்வ சிறுமீர்காள்! நீராட போதுவீர் !" என்றாள் கோதை
    " செல்வச் சிறுமீர்காள் நீராடப் போதுவீர் ! " என்றாள் கோதை
18. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.
    வெந்தயச் செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்
19. கொத்தி திரியும் அந்த கோழி
    கொத்தித் திரியும் அந்தக் கோழி
20. கிட்ட போனால் முட்ட பகை
    கிட்டப் போனால் முட்டப் பகை
21. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது
    சாரைப் பாம்பு குருவிக் கூட்டில் நுழைந்தது
22. ஆசிரியர் நடத்தா பாடத்திலிருந்து எந்த கேள்வியும் வரவில்லை
    ஆசிரியர் நடத்தாப் பாடத்திலிருந்து எந்தக் கேள்வியும் வரவில்லை
23. கேள்விகள் மாணவர் பயிலா பகுதியில் இருந்து வந்ததால் எழுத தெரியவில்லை
    கேள்விகள் மாணவர் பயிலாப் பகுதியில் இருந்து வந்ததால் எழுதத் தெரியவில்லை
24. எதையும் எழுதி பழக வேண்டும் என்று ஆசிரியர் எனக்கு சொன்னார்.
    எதையும் எழுதிப் பழக வேண்டும் என்று ஆசிரியர் எனக்குச் சொன்னார்.
25. அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்.
    அந்தச் சிறுவன் எந்தப் பள்ளியில் படித்துச் சிறந்தான்.
26. ஒட காண்பது வெள்ளம், ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்
    ஓடக் காண்பது வெள்ளம் ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
27. வாழைபழத்தை தின்ற பின் தோலை சாலையில் போடாது குப்பை கூடையில் போடு.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வாழைப்பழத்தைத் தின்ற பின் தோலைச் சாலையில் போடாது குப்பைக் கூடையில் போடு

28. t p ut hf nry; வண்டி வர போகிறது

விரைவாகச் செல் ; வண்டி வரப் போகிறது.

**பொருள் வேறுபாட்டை அறிந்து வாக்கியத்தில் அமைத்தல்**

**VI. ண, ந, ன வேறுபாடு அறிக:**

1. அரண் - மதில், பாதுகாப்பு , கோட்டை
   காடுகள் இயற்கை அரண்கள்
   அரன் - சிவன், அன்பே அரன் ஆகும்
2. அண்ணம் - மேல்வாய், மேல் அண்ணத்தை நா தொடுவதால் "ள" எனும் ஒலி பிறக்கிறது.
   அன்னம் - பறவை
   தமயந்தி நளனிடம் அன்னத்தைத் தூதாக அனுப்பினாள்.
3. ஆணி - கூரிய இரும்புத் துண்டு
   சுவரில் ஆணிஅடித்தார்.
   ஆனி - ஒரு மாதம்
   தமிழ் மாதங்களுள் ஒன்று ஆனி
4. ஆணை - கட்டளை
   பணியில் சேர ஆணை வந்தது
   ஆனை - யானை மிகப் பெரிய விலங்கு
5. உண்ணு - சாப்பிடு
   அளவாக உண்ணுமாறு மருத்துவர் கூறினார்
   உன்னு - நினைத்துப்பார்
   ஆபத்தில் உதவி செய்தவர்களை நன்றியுடன் உன்னுக
6. ஊண் - உணவு
   உரிய நேரத்தில் ஊண் உண்ணுக
   ஊன் - இறைச்சி
   ஊன் உணவைத் தவிர்க்கவும்
7. எண்ண - நினைக்க, எண்ணிப் பார்க்க
   எண்ண அலைகள் மனதில் ஓடின
   என்ன - கேள்வி
8. கணை - அம்பு
   பகைவர் மீது கணை தொடுத்தனர் வீரர்
   கனை - கனைத்தல்
   குதிரை கனைத்தது
9. கணம் - நேரம்
   ஒரு கணப்பொழுதும் சோர்வடையாதே
   கனம் - பளு, சுமை
   கனமான பொருள்களைத் தூக்க இயலாது
10. காண் - பார்
    முக்கூடல் சங்கமிக்கும் அழகைக் காண்
    கான் - காடு
    கான் ஆற்று வெள்ளம் கரை புரண்டு ஓடும்
11. தணி - அடங்கு
    கொத்தளித்த கோபம் ஓரளவு தணிந்தது
    தனி - தனித்திருந்தல்
    நவீன உலகில் தனிக் குடித்தனங்கள் பெருகி வருகின்றன



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

12. துணி - சிலை
பருத்தித் துணியே கோடை காலத்திற்கு ஏற்றது
துனி - துன்பம், கோபம், அச்சம்
கோப விபத்தைக் கண்ட மணி துனிப்புற்றான்
(துன்பம் அடைந்தான்)
13. திணை - நிலம், ஒழுக்கம்
குறிஞ்சித்திணை என்பது மலையும் மலை சார்ந்த பகுதியம் ஆகும்
தினை - தானிய வகை
வள்ளி திணைப் புனம் காத்தாள்
14. நாண் - கயிறு, நாணம், நாண் இழுத்தல் போட்டியிடல் எங்கள் அணி வென்றது
நான் - தன்னைக் குறிப்பது, தனமை இடப்பெயர்
இசைப்போட்டியில் நான் முதற்பரிசு பெற்றேன்.
15. வலை - மீனவர்கள் வலையுடன் கடலுக்குள் சென்றனர்
வளை - வளையல்கள் வாங்கி வந்தேன்
வழை - கடற்கரை பகுதியில் வழை மரம்( சுரபுன்னைமரம்) காணப்படும்
16. வால் - குரங்கின் வால் நீளமானது
வாழ் - நாம் உயிர் வார் நீர், காற்று, ஒளி போன்றவை தேவை
வாள் - வாளால் மரத்தை வெட்டினான்
17. வாழை - மரவகை
வாழை குலை தள்ளியது
வாளை - வாளை மீன் வறுவல் சுவையாக இருக்கும்
18. அறி - அறிதல்
பாடலின் பொருளை அறிந்து கொண்டேன்
அரி - திருமால்
அரியும் சிவனும் ஒன்று

**ஆங்கிலச் சொற்களை நீக்கி எழுதுதல்**

1. டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்து விடும் என்கிறாள் பாட்டி.
**தொலைக்காட்சித் தொடர்** பார்க்காவிட்டால் வாழ்க்கையே வெறுத்து விடும் என்கிறாள் பாட்டி.
2. இந்தசெஞ்சுரி டென்ஷன் நிறைந்தது.
இந்த **நூற்றாண்டு** மன **அழுத்தம்** நிறைந்தது.
3. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.
**மெலிகா** இருப்பதே **அழகு** என்ற எண்ணம் பரவி வருகிறது.
4. "வீக்ஆன ஆண்ட்டி ரெஸ்ட் எடுக்க வேண்டும்" என்று ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அட்வைஸ் கூறினார்.
**வலிமையற்ற** என் **அத்தை ஓய்வெடுக்க** வேண்டும் என்று **இதய மருத்துவ வல்லுநர் அறிவுரை** கூறினார்.
5. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
**நீரிழிவு நோயாளி இனிப்பு** சாப்பிடுவதை **நிறுத்திட** வேண்டும்
6. போலீஸ் ஸ்டேஷன் போய் கம்ப்ளெயிண்ட் கொடு.
**காவல் நிலையம்** சென்று **புகார் கொடு** .
7. ஏர்போர்ட் சென்று பிரெண்டை ரிசிவ் செய்ய வேண்டும்.
**விமான நிலையம்** சென்று **நண்பரை** அழைத்து வர வேண்டும்
8. பஸ் பிடித்து காலேஜ் போக வேண்டும்
**பேருந்தைப்** பிடித்து **கல்லூரிக்குப்** போக வேண்டும்.
9. எல்லா ஷாப்புகளிலும் காஸ்ட்லியாக உள்ளது.
எல்லாக் **கடைகளிலும் விலைஅதிகமாக** உள்ளது.
10. பர்த்டே வாழ்த்துக்கு ரொம்ப தாங்ஸ்
**பிறந்த நாள்** வாழ்த்துக்கு மிகவும் **நன்றி.**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

11. ஸ்கூல் பர்ஸ்ட் பெல் அடிச்சாச்சி நான் லேட்டா போறேன்
**பள்ளி முதல் மணி** அடித்தாகி விட்டது நான் **தாமதமாகச்** செல்கிறேன

12. பேரண்ட்ஸ் சொல்றபடி ஸ்டுடன்ஸ் கேட்க வேண்டும்.
**பெற்றோர்** கூறியவாறு **மாணவர்கள்** கேட்கவேண்டும்.

13. ஈவினிங்கில் என் மம்மியும் டாடியும் வாக்கிங் செல்வர்கள்.
**மாலையில்** என் **தாயும் தந்தையும் நடைப் பயற்சிக்குச்** செல்வார்கள்.

14. ரிஜிஸ்டர் போஸ்டில் அப்ளிகேஷன் அனுப்பவும்.
**பதிவுத் தபாலில் விண்ணப்பத்தை** அனுப்பவும்.

**அலுவலகக் கலைச் சொற்களுக்கு தமிழாக்கம்**

| **அலுவலகச் சொல்** | | **தமிழ்ச்சொல்** |
|---|---|---|
| ரெக்கார்ட் | - | ஆவணம் |
| செகரட்டரி | - | செயலர் |
| மேனேஜர் | - | மேலாளர் |
| பைல் | - | கோப்பு |
| புரோநோட் | - | ஒப்புச் சீட்டு |
| பால்கனி | - | முகப்பு மாடம் |
| பாஸ்போர்ட் | - | கடவுச் சீட்டு |
| டிசைன் | - | வடிவமைப்பு |
| சாம்பியன் | - | வாகை சூடி |
| விசா | - | நுழைவு இசைவு |
| டெலிகேட் | - | பேராளர் |
| ஸ்பெஷல் பஸ் | - | தனிப்பேருந்து / சிறப்புப் பேருந்து |
| புரபோசல் | - | கருத்துரு |
| ஆட்டோகிராப் | - | வாழ்த்தொப்பம் |
| விசிட்டிங்கார்டு | - | காண்புச் சீட்டு |
| பிரீப்கேஸ் | - | குறும் பெட்டி |
| வம்சம் | - | திரட்சித் தொகை |
| மெயின் ரோடு | - | முதன்மைச் சாலை |
| புரோட்டோ கால் | - | மரபுத் தகவு |
| செக் | - | காசோலை |
| ரசீது | - | பற்றுச் சீட்டு |

| **பிழை** | | **திருத்தம்** |
|---|---|---|
| பலாப்பிஞ்சு | - | பலா மூசு |
| வாழைப் பிஞ்சு | - | வாழைக்கச்சல் |
| முருங்கைப் பிஞ்சு | - | முருங்கைச் சரடு |
| அவரைப் பிஞ்சு | - | அவரைப் பொட்டு |
| மாம்பிஞ்சு | - | மாவடு |
| இளந்தேங்காய் | - | வழுக்கை |
| முற்றிய தேங்காய் | - | நெற்று |

| **பறவை** | | **மரபு ஒலி** |
|---|---|---|
| ஆந்தை | - | அலறும் |
| குயில் | - | கூவும் |
| கோட்டான் | - | குழறும் |
| குருவி | - | கீச்சிடும் |
| கோழி | - | கொக்கரிக்கும் |
| சேவல் | - | கூவும் |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மயில் - அகவும்
வண்டு - முரலும்
காகம் - கரையும்
கிளி - பேசும் / கொஞ்சும்

**விலங்கு ஒலி**

குதிரை - கனைக்கும்
கழுதை - கத்தும்
நரி - ஊளையிடும்
நாய் - குரைக்கும்
பசு - கதறும்
பன்றி - உறுமும்
யானை - பிளிறும்
சிங்கம் - முழங்கும் / கர்ச்சிக்கும்
சங்கு - முழங்கும்

**பறவை விலங்கு இருப்பிடம்**

கோழிப்பண்ணை
ஆட்டுப்பட்டி
மாட்டுத் தொழுவம்
யானைக் கூடம்
குதிரைக் கொட்டில்

**தாவங்களின் தொகுப்பு**

மாந்தோப்பு
பலாத்தோப்பு
சவுக்குத் தோப்பு
தென்னந்தோப்பு
வாழைத் தோட்டம்
பூந்தோட்டம்
பனங்காடு
பூஞ்சோலை
வேலங்காடு
சோளக் கொல்லை
தேயிலைத் தோட்டம்
வெற்றிலைத் தோட்டம்

**தாவர உறுப்பு**

வாழையிலை
மாவிலை
நெல்தாள்
பனையோலை
முருங்கைக் கீரை
தினைத்தாள்
வெங்காயத் தாள்
தென்னங்கீற்று
வேப்பந்தழை

1. காகம் கூவும். நாய் கத்தும்
காகம் **கரையும்** . நாய் **குரைக்கும்.**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

2. காட்ல யானை கத்தியது. புலி கூவியது
காட்டில் யானை **பிளிறியது**. புலி **உறுமியது**
3. நீரின்றி நஞ்சையும் புஞ்சையும் விளையவில்லை
நீரின்றி **நன்செய்யும் புன்செய்யும்** விளையவில்லை
4. யானை மேய்ப்பனோடு ஆட்டுப் பாகனும் வந்தான்
யானைப் **பாகனோடு** ஆட்டு **இடையன்** வந்தான்.
5. கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.
கரும்புத் **தோட்டத்திற்கு** அருகில் நாய் **குரைத்தது.**
6. மயில் கூவ குயில் அகவ கிளி பாடியது.
மயில் அகவ குயில் கூவ கிளி பேசியது
7. தேயிலைத் தோப்புக்கு அருகில் பலாத் தோட்டம் உள்ளது
தேயிலைத் **தோட்டத்திற்கு** அருகில் **பலாத்தோப்பு** உள்ளது
8. சோளக்காடு - ஆலங்கொல்லை
சோளக்கொல்லை- ஆலங்காடு
9. குதிரைத் தொழுவம் - யானைக் கூடம்
குதிரைக் கொட்டில் - யானைக் கூடம்
10. சவுக்குத் தோட்டம் -கம்பங்காடு
சவுக்குத் தோப்பு - கம்பங்கொல்லை
11. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்
சோறு உண்டு பழம் தின்று பால் பருகிப் படுத்தான்

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்**

1. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் உணர்ச்சி பொலிவும் நம்மைக் கவர்கின்றன.
இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் உணர்ச்சிப் பொலிவு
2. செம்பியன் மாதேவி போன்ற சோழ பேரரசியர் செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தம் கடமை எனக் கருதினர்
செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசியர் செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தம் கடமை எனக் கருதினர்.
3. சீத்தலை சாத்தன் என்றப் புலவர்ப் பெருமான் தனது காப்பியத்திற்கு மணிகலைத் துறவு என்றேப் பெயரிட்டார்.
சீத்தலைச் சாத்தான் என்ற புலவர் பெருமான் தனது காப்பியத்திற்கு மணிமேகலை துறவு என்றே பெயரிட்டார்.
4. பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர்ச் சொன்னவும் பன்னப் பெறுபவோ.
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.
5. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்று சஞ்சீவி பர்வதச் சாரல் பாடுகிறது.
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று சஞ்சீவி பர்வதச் சாரல் பாடுகிறது.
6. பாஞ்சாலிக் கண்ணனை பார்த்து கண்ணாக் காப்பாய் என்றுக் கூறினாள்.
பாஞ்சாலி கண்ணனைப் பார்த்து கண்ணா காப்பாய் என்று கூறினாள்
7. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.
வாழ்க _ தமிழ் என்று அவனா_ சொன்னான் அறிந்து_ சொல் எனக்கு.
8. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.
நீரோ_ சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டு_ செல்வேன்.
9. கபில பரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்கறியும் உண்டனர்
கபிலபரணர் வளர்பிறை ஒளியில் சுடு சோறும் காய் கறியும் உண்டனர்.
10. சோறுக் கொதிக்கிறது போத்தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்று பார்த்தான்.
சோறு_ கொதிக்கிறது போ_ தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்று_ பார்த்தான்
11. என்னொடுப் போந்த இளங்கொடி நங்கை
என்னொடு_ போந்த இளங்கொடி நங்கை
12. விடிக்காலை வேளை சுடுச்சோறு ஆக்கிப் பரிமாறக் கூடுமா?
விடி_காலை வேளை சுடு_சோறு ஆக்கிப் பரிமாறக் கூடுமா?
13. வெண்ணிலாக் கலக்கலவென்றுச் சிரித்தாள்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வெண்ணிலா_ கல_ கலவென்று_ சிரித்தாள்.

14. குபுக்குபுவென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது
குபு _குபுவென்று_ புகை மண்டிலம் சூழ்ந்தது.

15. துறவிக் குடிலுக்குள் வந்தச் சிறுவர் இரண்டுப் பேர்
துறவி_ குடிலுக்குள் வந்த_ சிறுவர் இரண்டு பேர்.

**பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக**

1. ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நாமகரணத்தை இந்தக் கப்பலுக்கு சூட்டுவதில் ஸந்தோஷமடைகிறேன்.
**திருவாளர்** வ.உ.சிதம்பரம் பிள்ளையின் **பெயரை** இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் **மகிழ்ச்சி** அடைகிறேன்.
2. நமஸ்காரம் என்று சாஷ்டங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன்.
**வணக்கம்** என்று **நெடுஞ்சாண்கிடையாக** விழுந்தவனை **வாழ்த்தினேன்.**
3. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடாச் செய்யப்பட்டது.
**பயணி பயணத்தை விலக்கியவுடன் பணம்** திரும்பச் **செலுத்தப்பட்டது.**
4. செல்வனுக்கும் கிள்ளைக்கும் தலா ஐந்து புத்தகம் கொடு.
செல்வன் கிள்ளை **ஆகிய ஒவ்வொருவருக்கும்** ஐந்து **புத்தகங்கள்** கொடு.
5. குறிஞ்சி தாக்கல் செய்த வழக்கு சுமுகமாகப் பைசல் செய்யப்பட்டது.
குறிஞ்சி **தொடுத்த** வழக்கு **நன்முறையில் தீர்க்கப்பட்டது**
6. ஸ்வாமிக்குப் பூஜை செய்ய புஷ்பங்களைப் பறித்து வை.
**இறைவனுக்கு வழிபாடு** செய்ய **மலர்களைப்** பறித்து வை.
7. கஜானா காலி என்று கவர்மெண்ட் கூறியது.
கருவூலத்தில் ஒன்றுமில்லை என்று அரசு கூறியது.
8. அவர்கள் இந்து சம்பிரதாயப்படி கல்யாணம் செய்து கொண்டனர்
அவர்கள் இந்து **முறைப்படி திருமணம்** செய்து கொண்டனர்.
9. சந்நிதியில் சகல ஜனங்களும் உபந்நியாசம் கேட்கத் திரண்டிருந்தனர்.
**இறைவன் திருமுன்பு** மக்கள் **அனைவரும்** ஆன்மீக உரை கேட்கத் திரண்டிருந்தனர்.
10. பந்து மத்திரர் சகிதம் வந்து ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.
**உறவினர் நண்பர்களுடன்** வந்து **வாழ்த்திட** வேண்டுகிறேன்.
11. கோயில் கர்ப்ப கிரகஹத்துக்குள் யாரும் பிரவேசிக்கக் கூடாது.
கோயில் **கருவறைக்குள்** யாரும் **நுழையக்** கூடாது.
12. என் ஏக புதல்வனின் ஜானவாசத்திற்குச் சகலரும் வரணும்
என் **ஒரே** மகனின் **மாப்பிள்ளை அழைப்பிற்கு அனைவரும்** வர வேண்டும்.

| **தமிழ்பெயர்** | | **வடமொழிப் பெயர்** |
|---|---|---|
| திருவரங்கம் | - | ஸ்ரீரங்கம் |
| திருச்சிற்றம்பலம் | - | சிதம்பரம் |
| திருமறைக்காடு | - | வேதாரணியம் |
| திருமுதுகுன்றம், பழமலை | - | விருத்தாச்சலம் |
| அங்கயற்கண்ணி | - | மீனாட்சி |
| அறம் வளர்த்தாள் | - | தர்மசம்வர்த்தினி |
| எரிசினக் கொற்றவை | - | ரௌத்திர துர்க்கை |
| ஐயாறப்பர் | - | பஞ்சநதீசுவரர் |
| குடமூக்கு | - | கும்பகோணம் |
| வாள்நெடுங்கண்ணி | - | கட்கநேத்ரி |
| செம்பொன் பள்ளியார் | - | சொர்ணபுரீச்சுரர் |
| நீள் நெடுகண்ணி | - | விசாலாட்சி |
| யாழினும் நன்மொழியாள் | - | வீணா மதுரபாஷினி |
| தேன்மொழிப் பாவை | - | மதுரவசனி |
| பழமலை நாதர் | - | விருத்தகிரீச்சுரர் |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## **கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

1. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க
   **ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்**
2. கோளிமுட்டை தாவாரத்தில் உருண்டது
   **கோழிமுட்டை தாழ்வாரத்தில் உருண்டது**
3. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா?
   **விடிவதற்குள் வெற்றிலை போடுவது** ஒரு **பழக்கமா?**
4. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா?
   **ஒருவன் ஒன்றியாய்ப்** போனல் அது **ஊர்வலமா?**
5. கொடுத்த செய்தியைக் கோர்வையாகப் பேசு
   கொடுத்த **செய்தியைக் கோவையாகப்** பேசு
6. குளந்த ஏன் அளுவுது?
   **குழந்தை** ஏன் **அழுகிறது?**
7. இன்னிக்கி சாய்ங்காலம் தங்கச்சி வருவா
   இன்று சாயுங்காலம் தங்கை வருவாள்
8. சோறு தின்று, பழம் உண்டு, பால் சாப்பிட்டுப் படுத்தான்
   சோறு **உண்டு** பழம் **தின்று** பால் **பருகிப்**படுத்தான்
9. ஆத்தங்கரையில் காணி நஞ்சை நிலம் உள்ளது.
   ஆற்றங்கரையில் ஐந்து காணி நன்செய் நிலம் உள்ளது.
10. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.
    **வலப்பக்கச் சுவரில் எழுதாதே**
11. வெறகு விக்கிற வெலையை பார்த்தியா?
    **விறகு விற்கிற விலையைப்** பார்த்தியா?
12. பீக்கங்காயும் பாவக்காயும் தின்னத் தெவிட்டது
    **பீர்க்கங்காயும்** பாகற்காயும் தின்னத் **தெவிட்டுகிறது.**
13. அவன் எண்ணையும் வெண்ணையும் வாங்கி வந்தான்
    அவன் **எண்ணெய்யும் வெண்ணெய்யும்** வாங்கி வந்தான்.

## **நிறுத்தற்குறிகள்**

1. "ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது", என்று என் தந்தை கூறினார்.
2. "செல்வச் சிறுமீர்காள்! நீராடப் போதுவீர் !" என்றாள் கோதை.
3. "ஒழுக்கமுடைமை குடிமை", என்பது வள்ளுவர் வகுத்த வரையறை.
4. சமயத்தை 'மதம்' என்றும் குறிப்பிடுவர். மதம் என்பதற்கு ' கொள்கையில் நிற்றல் ' என்று பொருள்.
5. சகோதரிகளே! சகோதரர்களே ! சமரசத்தைப் பற்றி எழுந்து பேச்சுகள் எத்துணை! எழுத்துகள் எத்துணை! அவைகட்கு அளவுமுண்டோ?
6. "இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல," என்று ஜான்சன் பதில் கூறினார்.
7. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் எழுதியுள்ள, 'தமிழியற் கட்டுரைகள்' என்ற நூல் எளிமையும் ஆழமும் கொண்டு விளங்குகிறது.
8. இயேசு மக்களை நோக்கி, "ஆயக்காரன் கோயிலுக்கு வெளியே நின்று,' தேவனே !! என்பால் இரக்கம் காட்டுங்கள்,' என்று வேண்டினான் என்பதை அறியுங்கள்" என்றார்.
9. வடமொழி, இலத்தீன், கிரிக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் ' உயர்தனிச் செம்மொழியே' ஆகும்.
10. "கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை," என்றார் கீட்ஸ்.
11. இதென்னஅறியாமை சமயம் என்பது ஒன்றே அதுவே சமரசம் ஆகும். .இதென்ன அறியாமை? சமயம் என்பது ஒன்றே. அதுவே சமரசம் ஆகும்.
12. உலகம் நாடாகவாவது இருக்கட்டும் காடாகவாவது இருக்கட்டும் எங்கேநல்லவர்கள் இருக்கிறார்களோ அங்கே அதுவும் நன்றாக இருக்கும் என்கிறது புறநானூறு.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"உலகம் நாடாகவாது இருக்கட்டும் ; காடாகவாவது இருக்கட்டும். எங்கே நல்லவர்கள் இருக்கிறார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்" என்கிறது புறநானூறு.

13. ஒருவன் ஒழுக்கத்தை இழந்தால் அனைத்தையும் இழந்தவனாகிறான் என்றனர் ஆன்றோர்.
"ஒருவன் ஒழுக்கத்தை இழந்தால் அனைத்தையும் இழந்தவனாகிறான்", என்றனர் ஆன்றோர்.

14. எச்சபை பொதுவான இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி என்ற சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.
"எச்சபை பொதுவெனஇயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி", என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.

15. பகடு நடந்த கூழ் என்கிறது நாலடியார்.
"பகடு நடந்த கூழ்", என்கிறது நாலடியார்.

**எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுதல்**

1. பரவை இறையாகப் பயறு வகைகளைத் திண்ணும்
பறவை இரையாகப் பயறு வகைகளைத் தின்னும்
2. ஆற்றில் வெல்லம் கறை புரண்டு ஓடுகிறது
ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது
3. வெந்ததைத் தின்று விதி வந்தாள் மாய்வோம் என்பது வீன் பேச்சு.
வெந்ததைத் தின்று விதி வந்தால் மாய்வோம் என்பது வீண் பேச்சு
4. நெள் வயலில் கலை பரித்தபோது அரவு கடித்ததால் அளறினான்
நெல் வயலில் களை பறித்தபோது அரவு கடித்ததால்அலறினான்
5. அதிகாலையில் கோலி கூவுமுன் எலுந்து பள்துலக்கியபின் படித்தேன்.
அதிகாலையில் கோழி கூவுமுன் எழுந்து பல்துலக்கிய பின் படித்தேன்
6. குலத்தில் தாமரைப்பூவும் அள்ளிப்பூவும் அளகாய்ப் பூக்கும்.
குளத்தில் தாமரைப்பூவும் அல்லிப்பூவும் அழகாய்ப் பூக்கும்.
7. பணையோளை விசிரியால் விசிரியதால் கைவிரல் வளித்தது.
பனையோலை விசிறியால் விசிறியதால் கைவிரல் வலித்தது.
8. இலைஞர்கள் மன்ரம் அமைத்துத் தமிள் வலர்க்க முடிவு செய்தனர்
இளைஞர்கள் மன்றம் அமைத்துத் தமிழ் வளர்க்க முடிவு செய்தனர்
9. காளையில் பல்லி சென்று கள்வி கற்றிட வேண்டும்.
காலையில் பள்ளி சென்று கல்வி கற்றிட வேண்டும்.
10. செந்தமிள் மொலியே தமிள் நாட்டவருக்கு விளியாகத் திகழ்கிறது.
செந்தமிழ் மொழியே தமிழ் நாட்டவருக்கு விழியாகத் திகழ்கிறது.
11. நிளாவொளியில் தாஜ்மகள் அதிக அளகாகத் தோண்றும்
நிலாவொளியில் தாஜ்மகல் அதிக அழகாகத் தோன்றும்
12. நல்ல எண்ணையும் புண்ணாக்கும் அன்னை வாங்கிவறச் சொன்னார்.
நல்ல எண்ணெய்யும் பிண்ணாக்கும் அன்னை வாங்கிவரச் சொன்னார்.
13. சுவற்றில் எளுதாதே
சுவரில் எழுதாதே
14. வாலப்பளம் தின்றபின் தோளை சாளையில் போடக்கூடாது
வாழைப்பழம் தின்றபின் தோலைச் சாலையில் போடக்கூடாது
15. குலந்தையின் அலுகையை மாற்ற தாய் வாலைப்பழம் தந்து தாளாட்டுப் பாடினால்
குழந்தையின் அழுகையை மாற்ற தாய் வாழைப்பழம் தந்து தாலாட்டுப் பாடினாள்
16. மொட்டு மளர்ந்து மனம் வீசியது
மொட்டு மலர்ந்து மணம் வீசியது
17. மாட்டுத் தொளுவத்தில் சானத்தை அழ்ழிச் சுத்தப்படுத்துக.
மாட்டுத் தொழுவத்தில் சாணத்தை அள்ளிச் சுத்தப்படுத்துக.
18. நாய் குறைத்ததும் வீட்டிள் உல்லோர் விழக்கை ஏற்றினர்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நாய் குரைத்ததும் வீட்டில் உள்ளோர் விளக்கை ஏற்றினர்

19. கோலிப் பன்னையில் கரிக்கோலிகள் வழர்க்கப்படுகின்றன.
கோழிப் பண்ணையில் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

20. காளையில் தேயிளைநீர் குடித்தால் சுருசுருப்பாக இருக்கிறது.
காலையில் தேயிலை நீர் குடித்தால் சுறுசுறுப்பாக இருக்கிறது.

21. தாய்ப்பாழ் குலந்தைகளுக்கு நள்ளது
தாய்ப்பால் குழந்தைகளுக்கு நல்லது

22. நூள் எளுவதும் போது கவணமாக இருக்க வேன்டும்.
நூல் எழுதும் போது கவனமாக இருக்க வேண்டும்

23. சந்தணம் பூசி, திருநீரு இட்டு பக்தியோடு செள்கிறாள்
சந்தனம் பூசி திருநீறு இட்டு, பக்தியோடு செல்கிறாள்

24. கதிர் அருக்கவும் கலை எடுக்கவும் கூளி குறைவாகத் தறுகிறார்கள்.
கதிர் அறுக்கவும் களை எடுக்கவும் கூலி குறைவாகத் தருகிறார்கள்

25. கிழி மறத்தின் கிலையிளே அளகைத் தேய்க்கிறது.
கிளி மரத்தின் கிளையிலே அலகைத் தேய்க்கிறது.

26. யாணை கோவிளைச் சுற்றி எங்கல் தெறுவில் வந்தது.
யானை கோவிலைச் சுற்றி எங்கள் தெருவில் வந்தது.

27. பளாப்பழச் சுலை, தேண் போழ் இணிக்கிறது.
பலாப்பழச் சுளை தேன் போல் இனிக்கிறது.

28. வெயிள் காளத்தில் வென்னீரில் குழிக்கலாமா?
வெயில் காலத்தில் வெந்நீரில் குளிக்கலாமா?

29. சழி, இறுமல் பிடித்து மிகவும் தொள்ளையாக உள்ளது.
சளி, இருமல் பிடித்து மிகவும் தொல்லையாக உள்ளது.

30. இளனீர் குடித்தாள் குழிர்ச்சியாய் இருக்கிறது.
இளநீர் குடித்தால் குளிர்ச்சியாய் இருக்கிறது.

31. கடற்பாறை கத்தரிக்கோள் இரண்டும் பக்கத்து வீட்டில் கேல்.
கடற்பாரை கத்தரிக்கோல் இரண்டும் பக்கத்து வீட்டில் கேள்.

32. தோட்டில் திருகானி களன்று தோடு தொழைந்து விட்டது.
தோட்டில் திருகாணி கழன்று தோடு தொலைந்து விட்டது.

33. மாணவனின் குரும்பை ஆசிறியர் பொருத்துக் கொண்டு உழவியல் முறையில் கற்பிக்க வேண்டும்.
மாணவனின் குறும்பை ஆசிரியர் பொறுத்துக் கொண்டு உளவியல் முறையில் கற்பிக்க வேண்டும்.

34. தீபாவலி பளகாரம் பொங்கள் வரைக்கும் தீரவில்லை.
தீபாவளி பலகாரம் பொங்கல் வரைக்கும் தீரவில்லை

35. நோண்பு காளத்தில் கஞ்சி குடிப்பது இஸ்ளாமியரின் வாழ்வு முறையாகும்.
நோன்பு காலத்தில் கஞ்சி குடிப்பது இஸ்லாமியரின் வாழ்வு முறையாகும்.

36. கன்னை விளித்துப் பார்த்ததும் மறுத்தவர் மயங்கினார்
கண்ணை விழித்துப் பார்த்ததும் மருத்துவர் மயங்கினார்.

37. வைக்கோள் மாடுகலுக்கு உணவாகிறது.
வைக்கோல் மாடுகளுக்கு உணவாகிறது.

38. நண்செய் நிளம் குரைந்த விளைக்கு வாங்கினேன்.
நன்செய் நிலம் குறைந்த விலைக்கு வாங்கினேன்

39. சமையழ் கட்டிள் சிரைப்பட்டுக் கிடப்பதா பெண்மையின் வால்வு.
சமையல் கட்டில் சிறைப்பட்டுக் கிடப்பதா பெண்மையின் வாழ்வு.

40. சாயுங்காளம் முடிந்து அந்தி வந்ததும் நிளவு வாணில் உளவும்.
சாயுங்காலம் முடிந்து அந்தி வந்ததும் நிலவு வானில் உலவும்.

****



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

www.waytosuccess.org

## இலக்கிய நயம் பாராட்டல்

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

- பாரதிதாசன்

### ஆலில் குரங்கு

**முன்னுரை :** பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் புரட்சிமிகு கருத்துகளைப் பாக்களாய்ப் பாடி புகழ் பூத்தவர். இவரது எண்ணத்தில், எழுத்தில் புரட்சிகள் வெடித்தன. மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்பன இவர் மனதில் மண்டிக் கிடந்த பற்றுகள். "பாரதிதாசன் கவிராசன் ; இந்தப் பாரினுக்கே தூய நேசன் " என்று பாரதியால் பாரட்டப்பட்டவர். அவரது இப்பாடலில் பயின்று வரும் நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:** வளமான ஓர் ஆலமரம். அந்த ஆலமரத்திலே விழுதுகள் பல தொங்கிக் கொண்டிருந்தன. விழுதுகளுடன் ஒரு பாம்பும் தொங்கியது. கிளை தோறும் தாவிக் குதித்தது ஒரு குரங்கு. அது விழுதென நினைத்து பாம்பைத் தொட்டது. பாம்பு என அறிந்ததும் விளக்கைத் தொட்ட பிள்ளை உடனே கையை விலக்குவது போல - வெடுக்கெனத் தன் கையை விலக்கிக் கொண்டது. எனினும் அச்சம் தீரவில்லை . விழுதெல்லாம் அதற்குப் பாம்பாகத் தோன்றியது. தன் வாலையும் 'பாம்போ' என்ற அச்சத்தில் பார்த்தது.

**மையக்கருத்து :** இப்பாடல் பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் இடம் பெற்றுள்ள பாடல். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற பழமொழியை நினைவூட்டுகிறது இப்பாடல். விழுதுகளை மட்டுமல்ல தன் வாலையே பாம்பாக எண்ணி அஞ்சுவது நகைச்சுவையின் உச்சம். ஐயமின்றி, அச்சமின்றி வாழ வேண்டும் என்பதை மையமாக வைத்து பாடப்பட்ட பாடல் இது.

**சொல் நயம் :** எல்லாச்சொற்களும் பொருள் உடையன. ஆனால் பாடலில் பயன்படுத்தப்படும் சொற்கள் கேட்பவரை ஈர்க்க வேண்டும். கேளாதவரை ஏங்கச் செய்ய வேண்டும். இந்தப் பாடலில் 'பாம்பு தொங்க', 'குரங்கு தொட்டு கிளைதோறும் குதித்து', 'ஒளிப்பாம்பாய்' என்றும் தொடர்கள் வறுமையில் செம்மை போல எளிமையில் ஏற்றம் தருவனவாக உள்ளன.

**பொருள் நயம் :** பொருளில்லாப் பாடல் விளக்கில்லா வீடு போன்றது. பாடலின் பொருள் நயம் கவிஞர் எடுத்தாளும் அணி நலன்களாலும் உவமை நலன்களாலும் வெளிப்படும் கசப்பான மருந்தை இனிப்புடன் கலந்து கொடுப்பது போல அச்சத்தையும் ஐயத்தையும் நீக்க வேண்டும் என்ற கருத்து நகைச்சுவையாகக் கூறப்பட்டுள்ள திறன் பாராட்டுக்குரியது; பொருள் செறிவு உடையது.

**தொடை நயம் :** தொடை நயத்தால் கவிதையின் நடைநயம் சிறக்கும்

ஒரு பாடல் எதுகை, மோனை, இயைபு முரண் ஆகிய தொடைகளால் தொடுக்கப்பட்டால் படிப்பவர் மனதில் விழும். அவர்தம் எண்ண அலைகளில் மோதும் .புதிய சிந்தனைகள் எழும்.

**எதுகைத் தொடை:** அடிகளிலும் சீர்களிலும் முதல் எழுத்து அளவில் ஒத்து இரண்டாம் எழுத்து ஒன்று போல் அமைவது எதுகைத் தொடையாகும்.

| | |
|---|---|
| கிளையினில் } | விளக்கினை } |
| கிளைதோறும் } | ஒளிப்பாம்பாய் } |

இப்பாடலில் எதுகைச் சீர்கள் ஓர் ஒழுங்குடன் அமைந்துள்ளன.

**மோனைத் தொடை:**

சரஸ்வதி கையில் உள்ளது வீணை
பாடலில் பயில்வது மோனை

அடிகளிலும் சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை

| | | |
|---|---|---|
| விளக்கினை } | கிளைதோறும் } | ஒளிப்பாம்பாய் |
| வெடுக்கென } | கீழுள்ள } | உச்சிபோய் |

இறுதி மூன்று அடிகளிலும் முதலெழுத்து ஒன்றி வந்து மோனைத் தொடை அமைந்து கவிதைக்கு இன்னோசை தருகின்றது.

**சந்த நயம் :** சந்தம் என்பதற்கு ஓசை, இசை என்று பொருள். அது கேட்போரின் செவிக்கு இன்பம் தரும். சந்தமில்லாப் பாடல் சொந்தமில்லா வீடு போன்றது. இப்பாடல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த 'பா' ஆகும்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | |
|---|---|
| பா | ஓசை |
| வெண்பா | செப்பல் ஓசை |
| ஆசிரியப்பா | அகவல் ஓசை |
| கலிப்பா | துள்ளல் ஓசை |
| வஞ்சிப்பா | தூங்கல் ஓசை |

'ஆசிரிய' விருத்தம் என்பதால் இப்பாடல் அகவல் ஓசை பெற்று பாடி மகிழ்வதாகவும் உள்ளது.

**சுவைநயம் :** நகை, அழுகை, இனிவரல், மருட்கை, அச்சம் பெருமிதம் என்னும் சுவையில்லாப் பாடல் மணமில்லா மலர் போன்றது. ஆலமரத்தின் விழுதுகளை பிடித்துக் குரங்குகள்தாவிக் குதிப்பது இயற்கை. இந்த இயற்கை நிகழ்வில் தமது கற்பனைத் திறனைக் - நகைத் திறனைக் கலந்து விட்ட கவிஞரின் படைப்பு தனிச்சிறப்பு உச்சி போய்த் தன் வாலையும் அச்சத்துடன் பார்த்தது என்பது நகைச் சுவையின் - கற்பனைத் திறனின் உச்சம்.

**உவமைச் சிறப்பு:**

உவமை : விளக்கைத் தொட்ட பிள்ளை வெடுக்கென குதித்தல்

உவமேயம் : பாம்பைத் தொட்ட குரங்கு கையை நீக்குதல்

உவம உருபு : போல

பொருத்தம் : எரியும் சுடரைத் தொட்ட குழந்தை கையை விரைந்து நீக்குவது போல பாம்பைத் தொட்ட குரங்கு கையை நீக்கிற்று என்பது பொருத்தமான உவமை.

**அணி நயம்:** அணியில்லாப் பாடல் அழகில்லா நங்கை போன்றது அணி என்பதற்கு அழகு என்று பொருள். நாம் அணியும் கலன்கள் நம்மை அழகு செய்வன போன்று செய்யுளை அழகுபடுத்துவன செய்யுள் அணிகள். அந்த வகையில் இப்பாடலில் பயின்று வரும் அணி உவமை அணி ஆகும். உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் அமைய உவம உருபு வெளிப்பட்டு நிற்பதால் உவமையணி ஆகும்.

**முடிவுரை:** 'ஆலில் குரங்கு' என்றும் இப்பாடல் நம்மைச் சிரிக்கவும், சிந்திக்கவும், ஆடிப்பாடவும் வைத்து விட்டது. அழகின் சிரிப்பில் அமைந்த பாவேந்தரின் இப்பாடல் வெறும் காவியமன்று ; அழியாத சொல்லோவியம்; நிலையான கலைக் கோபுரம் என்றால் அது மிகையன்று.

3. நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
    நிலத்தில் பார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
    செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
    உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதயகன்னி உரைப்பது கேட்டீரோ

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
    ஒது பற்பல நூல்வகை கற்கவும்
இலக சீருடை நாற்றிசை நாடுகள்
    யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கு
திலக வாணுத லார் நாங்கள் பாரத
    தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்லோர் பொந்தில் வளர்வதை
    வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்போம்

சொல்நயம் - உமிழ்ந்து தள்ளுதல்
அல்லது வாணுதலார்

பொருள் நயம் - உதயகன்னி பெண் உலகிற்குக் கூறுவது போல் கருத்துக்களைக் கூறல்

அணிநயம் - உருவக அணி - பேரிருள் அறியாமை

சந்தநயம் - எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப்பா, அகவல் ஓசை

4. எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி
    இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
    முடிந்ததும் இந்நாடே -அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழத்ததேனோ? - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?
இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே-அவர்
கன்னியராக நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே- தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி இல்
போந்ததும் இந்நாடே - இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்ககேனோ?

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | ‘வாயுற வாழத்தி’ |
| பொருள்நயம் | - | ‘வாழ்த்தாமல்’ இருப்பேனோ என்ற வினாவில் வாழ்த்தும் காரணங்கள் கூறல் |
| அணிநயம் | - | சொற்பொருள் பின்வரு நிலையணி ‘வந்தே மாதரம்’ பொருள் தாயை வணங்குவோம் |
| சந்தநயம் | - | பாவகை - சிந்து செப்பல் ஓசை |

5. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டுமட்
உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கம்
கவிப்பெருக்கும் மேவு மாயின்.
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்று பதவி கொள்வார்
தொள்ளுற்ற தமிழமுதின் சுவைக்ணடார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | பழங்கதைகள் |
| பொருள்நயம் | - | ஆணையிடுவது போல் கருத்துகளைச் சொல்லல் |
| இயைபு | - | ‘வேண்டும், வேண்டும் |
| அணிநயம் | | |
| உவமையணி | - | வெள்ளத்தின் பெருக்கைப் போல் |
| சந்தநயம் | - | அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா அகவல் ஓசை |

6. ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம் கீழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநி கர்ச



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மானமாக வாழ்வே!

மாதர் தம்மை இழிவு செய்வோம்
மடமை யைக்கொ ளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில எந்த
வகையினும் நமக்குள்ளே
நாதர் என்ற நிலைமைமாறி
ஆண்களொடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே !

சொல் நயம் - கொளுத்துவோம்
பொருள் - நாம் இவ்வாறு வாழ்வோம் என்று கருத்துக்களைக் கூறுவது
அணிநயம் - கொற்பொருள் பின்வரு நிலையணி 'வாழ்வம்'
பொருள் - வாழ்வோம்
சந்தநயம் - எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தப்பா அகவல் ஓசை

## பாரதிதாசன் பாடல்கள்

1. நீலவான் ஆடைக்குள். உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோலமுழு தும் காட்டி விட்டால் காதற்
கொள்கையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதிப் கடலில் மூழ்கி
கானல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ

சொல்நயம் - 'ஒளிமுகம்'
பொருள்நயம் - நிலவோடு நேரில் பேசுவது போல் கருத்தை அமைத்தல்
அணிநயம்
உவமையணி - வானச்சோலை பூவோ அமுதோ ஊற்றோ ஒளிப்பிழம்போ
சந்தயம் - எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா- சாமோ, பூவோ, குடமோ, ஊற்றோ எனும் சந்தநயச் சொற்கள் அகவல் ஓசை

2. கனியிடை ஏறிற சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்- காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரின நீரும்
இனியன என்பேன் எனினும் -தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

சொல்நயம் - 'முற்றலும் கழை'
பொருள்நயம் - இருவகை ஒப்பீடு
அணிநயம் - வேற்றுமையணி இனியபொருள்- தமிழ் இனியது எனினும் - உயிர்
சந்தநயம் - பாவகை - கண்ணிகள் அகவல் ஓசை

3. காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
நலம் காணார்

சொல்நயம் - காரீரள்
பொருள்நயம் - பத்திரிகையைப் பெண்ணாக உருவகப்படுத்திக் கருத்துகள் சொல்வது
அணிநயம் - உருவகஅணி
'பத்திரிசைப் பெண்'
'இதழ்ப்பெண்'
சந்தநயம் - அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாஅகவல் ஓசை

4. பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோ!
ஒரூருக் கொருநாட்டுக் குரிய தான்
ஒட்டைச்சாண் நினைப்புடையவர் அல்லர் மற்றும்
வீரர் அவர் ! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும்ம என்போர்
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்

பழையநடை, பழங்கவிதை, பழந்த மிழ்நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தா ரில்லை;
பொழிந்திடுசெவ் வியஉள்ளம் கவிதை யுள்ளம்
பூண்டிருந்த பாரதியா ராலே இந்நாள்
அழுந்தியிருந் திட்டதமிழ் எழுந்த தென்றே
ஆணையிட்டுச் சொல்லிடுவோம் அன்னை மீதில்!
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவி என்றால் புவிமேற் குற்றம்!

சொல் நயம் - 'செவ்விய உள்ளம்'
முரண் - மேல் கீழ்
அணி - இயல்பு நவிற்சியணி
சந்தம் - எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் அகவல் ஓசை

5. எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டுமுரசே- வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டு முரசே!
இல்லாமை ன்னும் பிணி
இல்லாமல் கல்விநலம்
எல்லார்க்கும் என்று சொல்லி
கொட்டுமுரசே -வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே!
ஈன்று புறந்தருதல்
தாயின் கடன் உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டுமுரசே! - வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொட்டுமுரசே

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | கட்டு - மூடநம்பிக்கை |
| பொருள்நயம் | - | கொட்டு முரசே எனச் சொல்லிக் கருத்து விளக்குதல் |
| அணிநயம் | - | சொற்பொருள் பின்வரு நிலையணி |
| சந்தயம் | - | பாவகை- சிந்து, கொட்டு முரசே |
| | | பலமுறை வருதல் |
| | | செப்பல் ஓசை |

6. அச்சம் தவிர்நதது - வாழ்வு - நல்
லன்பின் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவ- ரேனும் - அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!
உச்சி மலைவிளக்காக - உல
கோங்கும் புகழ்கொண்ட தான
பச்சைப் பசுந்தமிழ் நாட்டில் -தமிழ்
பாய்ந்திட வாழ்வது வாழ்வு!

மூதறி வுள்ளது வாழ்வு - நறும்
முத்தமிழ் கற்பது வாழ்வு!
காதினில் கேட்டதைக் கண்ணின் - முன்
கண்டதை ஓவியம் ஆக்கும்
பாதித் தொழில்செய லின்றி - உளம்
பாய்ச்சும் கருத்திலும் செய்கை
யாதிலும் தன்னை விளக்கும் - கலை
இன்பத்தில் வாய்ப்பது வாழ்வு!

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | ‘மூதறிவு’ அல்லது ‘நறும் முத்தமிழ்’ |
| | | அறிவுரை சொல்வது பால் |
| பொருள்நயம் | - | அறிவுரை சொல்வது போல் |
| இயைபு | - | ‘வாழ்வு’ |
| சொற்பொருள் பின்வருநிலையணி | | |
| சந்தயம் | - | பாவகை - சிந்து + ‘வாழ்வு’ - மிகுத்து வருதல் |
| | - | செப்பல் ஓசை |

**நாமக்கல் கவிஞர் பாடல்கள்**

1. சொல்வது எல்லார்க்கும் சுலபமாகும்
    சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
    எழுதியது பிறருக்கே தமக்கென் றெண்ணார்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
    சொன்னது போல் செயல் முயன்றார் இவரைப் போல
இல்லையென்னும் மோகன்தாஸ் கரம்சந்த்காந்தி
    இந்தியத் தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்!

| | | |
|---|---|---|
| சொல் நயம் | - | ‘ஈந்தசெல்வம்’ |
| பொருள்நயம் | - | உவமையைப் பயன்படுத்திச் கூறல் |
| அணிநயம் | - | உருவக அணி செல்வம் ( காந்தி) |
| | - | உவமையணி இவரைப்போல் இல்லை |
| சந்தயம் | - | எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா அகவல் ஓசை |

2. சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
    சுதந்திர உணர்வே மேலாகும் !
கூறும் நலங்களை விலை கொடுத் தாயினும்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொள்ளத் தகுந்தது சுதந்திரமே !
வீறும் கருணையும் வித்தக ஞானமும்
விளைவது சுதந்திர விருப்பத்தால்!
தேறும் பொழுதினில் சுதந்திரம் தொழத்தரும்
தெய்வம் என்பது தெளிவாகும்!

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | ‘வித்தகஞானம்’ |
| பொருள்நயம் | - | ஒரு வினாவிற்கு விடை கூறும் முறையில் கவிஞர் கருத்தைக் கூறுவது |
| அணிநயம் | - | இயல்பு நவிற்சியணி |
| சந்தநயம் | - | எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா ‘அகவல் ஓசை’ |

3. அன்பறம் வளர்ந்தி டாமல்
ஆற்றலும் அறிவும் குன்றும்
வன்புகள் சூதும் வாதும்
வழக்குகள் வளரும் வாழ்வின்
இன்பமும் ஊக்கமும் ஆன்ம
எழுச்சியும் இன்றி என்றும்
துன்பமும் சோம்பல் சூழும்
சுதந்திரம் இல்லா நாட்டில்

| | | |
|---|---|---|
| சொல் நயம் | - | வன்புகழ் |
| பொருள்நயம் | - | எங்கே எங்கே எனும் ஆர்வத்தைப் படிப்போரிடம் எழுப்பி இறுதியில் ‘சுதந்திரம் இல்லா நாட்டில்’ என்ற விடையை இறுதியில் கூறுவது. |
| அணிநயம் | - | இயல்பு நவிற்சி அணி |
| சந்த நயம் | - | அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா அகவல் ஓசை |

4. படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடை வள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க
இரவாமை அறம் என்னும் தமிழ்நாடு வாழ்க!

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | ‘இரவாமை’ |
| பொருள்நயம் | - | எதிர்மறைவார்த்தைகளைக் கூறி இவை இல்லாத தமிழ்நாடு என்று கூறல் |
| அணிநயம் | - | சொற்பொருள் பின்வருநிலையணி தமிழ்நாடு (அ) வாழ்க |
| சந்தநயம் | - | எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா ‘அகவல் ஓசை’ |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் பாடல்கள்

1. ஓடும் உதிரத்தில் - 'வடிந்து'
    ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
    தெரிவதுண் டோ அப்பா?
எவர் உடம்பினிலும் - சிவப்பே
    இரத்த நிறமப்பா!
எவர் விழிநீர்க்கும் - உவர்ப்பே
    இயற்கைக் குணமப்பா!

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
    பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
    செயற்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
    நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே-அண்டித்
    தீண்ட ஒண்ணாதார்!

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | 'தேடிப்பார்த்தாலும்' |
| பொருள்நயம் | - | அன்பால் அறிவுரை கூறுவது போல் கருத்து அமைத்துச் செல்லல் |
| இயைபு | - | அப்பா |
| அணிநயம் | - | சொற்பொருள் பின்வரு நிலையணி<br>'அப்பா' - மீண்டும் வந்து |
| சந்தயம் | - | பாவகை கலித்துறை<br>ஐந்துச் சீர்கள் பெற்று<br>வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவிவரும் சந்தம் |

2. ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்
    உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரியே வேண்டாம் - இன்னும்
    வீணாய் புராணம் விரிக்க வேண்டாம்

சாதி இரண்டலால் வேறுளதோ? - ஔவைத்
    தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி இறைவன் வகுத்ததுமோ? - மக்கள்
    ஆக்கிய கற்பனை தானிதுவோ?

மன்னுயிர்க் காக முயல்பவரே - இந்த
    மாநிலத் தோங்கும் குலத்தினராம் !
தன்னுயிர் போற்றித் திரிபரே - என்றும்
    தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா !

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | திரிபவரே (அ) ஆக்கிய |
| பொருள்நயம் | - | வினாக்களை மிகுதியாக எழுப்பிச் சிந்தை தூண்டிச் செல்லும் கருத்துவளம் |
| அணிநயம் | - | இயல்பு நவிற்சி அணி |
| சந்த நயம் | - | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா 'அகவல் ஓசை' |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

3. செங்கதிர் வெம்மை தணிந்ததடி! வாசத்
தென்றல் உலாவி எழுந்தடி!
பொங்கி வருஞ்சேணை மாநதியும் - ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலிந்ததடி
முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி! - ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி!
எல்லை யிலாமலர்ச் சோலையிலே - வண்டும்
இன்னிசை பாடித் திரிந்தடி !
தாயும் இரங்கி வருகுதடி! கன்றும்
தாவிக் குதித்தோடிச் சொல்லுதடி !
ஆயும் பொழில் பறவையெல்லாம் - அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி !

| | | |
|---|---|---|
| சொல்நயம் | - | 'அந்தி அங்காடி' |
| பொருள் நயம் | - | நேரில் காணும் காட்சிபோல் கவிஞர் கருத்துக்களைக் கூறுவது |
| இயைபு | - | 'அடி' (அடிதோறும் இயைந்தது) |
| அணிநயம் | - | உவமையணி 'அந்தி அங்காடி போல ஒலிக்குதடி' |
| சந்த நயம் | - | எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தப்பா அகவல் ஓசைச் சத்தம் எழுந்ததடி, பொலிந்ததடி,திறந்ததடி என்பன போன்ற நயமிகு சொற்களும் பாடல் இசையோடு பாட, சந்தம் அமைத்தன. |

4. எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதிஎழுதி மேற்செல்லும்
தொழுது போற்றி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
அழுது கண்ணீர் விட்டாலும்
அபயம் அபயம் என்றாலும்
வழுவிப் பின்னால் ஏகியொரு
வார்த்தை மாற்றம் செய்திடுமோ?
பாரி போலக் கொடுத்தவரும்
பணத்தைப் புதைத்து வைத்தவரும்
தேரின் மண்ணாய்ப் போனதலால்
செம்பொன்னானது அறியோமே:
ஊரில் அவர்தம் உடலை யெடுத்து
உரையும் நிறையும் காணாரே
ஒரும் உள்ளத் துண்மையிதை
ஊன்றி நோக்கி உணர்வாகியே
(உமர்கய்யாமின் - பாரசீகம்)

**வாழ்வியல் நிகழ்வுகள்**

1. பழமொழி: 'முயற்சி திருவினை ஆக்கும்'
உணர்த்தும் பொருள் : முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செய்தால் வாழ்வில் உயர்வு கிட்டும்.
வாழ்வியல் நிகழ்வு :

நான் ஆறாம் வகுப்பு பயின்று கொண்டிருந்த போது புதிய மாணவனாகச் சேர்ந்தான். அவன் இதுவரை சரியாகப் படிக்காததனால் வகுப்பில் 'அவன் ஆங்கிலம் வாசித்தாலும் தமிழ் வாசித்தாலும் தவறாக அவன் வாசிப்பதைக் கேட்டு வகுப்பே சிரிக்கும்'. ஆனால் அவன் அதற்காக வெட்கப்படவில்லை. பள்ளி முடிந்ததும் என்னைப் போன்று நன்றாக வாசிக்கக் கூடிய மாணவர்களிடம் பழகி வாசிக்கக் கற்றான். அவன் பள்ளியின் தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் தனிமையில் நின்று



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மேடையில் பேசுவது போல் உரக்க பேசிப் பழகினான்.

பள்ளிப் பேரவையின் பொறுப்பாசிரியடம் " ஒரே ஒரு முறை வாய்ப்பைக் கொடுங்கள் தயவு செய்து தயவு செய்து" என்று கெஞ்சினான். அன்று தீபாவளித் திருநாளைப் பற்றி பேசினான். கேட்டோர் " நம்ம ராஜ்குமாரா?" என்று வியந்தனர். அன்று முதல் தமிழாசிரியர்கள் அவளைப் பல போட்டிகளுக்கு அனுப்பினார். பெரும்பாலான போட்டிகளில் வென்ற ராஜ்குமார் இப்போது 12 ஆம் வகுப்பு படிக்கின்றான். பள்ளியில் இன்று அவன் புகழ் பேசாதவர் ஒருவருமிலர். அவனும் பள்ளிக்குப்பெருமை சேர்க்கும் தலைமாணாக்கனாக எங்களோடு பயின்று கொண்டு இருக்கிறான்.

2. பழமொழி: 'சிறு துரும்பும் பல்குத்த உதவும்'

உணர்த்தும் பொருள் : சிறிய பொருள் என்று எதனையும் இகழக் கூடாது. உலகில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பயன்பாடு உண்டு.

வாழ்வியல் நிகழ்வு :

எங்கள் அண்டை வீட்டுக்காரர் நோயாளி. அவர் தினமும் தனக்குத் தானே ஊசி போட்டுக் கொள்வார். காலியான குப்பியை எங்கள் வீட்டின் எல்லைக்குள் தூக்கிப் போட்டு விடுவார் " உன் மருந்து பாட்டில் குப்பையை ஏனய்யாஎன் வீட்டுக்குள் போடுற என்று எங்கள் அப்பா அவரிடம் கடுமையாகப் பேசுவது உண்டு அவர் கேட்பதே இல்லை. அந்தச் சிறுகுப்பிகளை ஒரு சாக்குப் பையில் நான் சேர்த்து வைக்கத் தொடங்கினேன். அப்பாவின் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. எங்கள் பள்ளியில் வீணாகும் பொருள்களில் கலைப்பொருள் உருவாக்கும் போட்டி நடந்தது. என்னிடம் இருந்த அந்த மருந்துக் குப்பிகளைக் கொண்டு தாஜ்மகால் கட்டிடம் உருவாக்கினேன். கண்டோர் வியந்தனர். போட்டி நடுவர்கள் இந்தக் குப்பிகளை இப்படிப் பயன்படுத்தலாமா? அழகாக உள்ளதே! என்று பாராட்டினார். முதற்பரிசும் எனக்குக் கிடைத்தது வெற்றிச் சான்றிதழை அப்பாவிடம் காண்பித்தேன். அவர் என்னை அணைத்துக் கொண்டு "சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்பதை மெய்ப்பித்து விட்டாயடா" என்று பாராட்டினார்.

3. பழமொழி: 'ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்'

உணர்த்தும் பொருள்: மனவலிமையற்ற மனிதர்களின் ஒற்றுமையை எளிதாக அழித்து விடலாம்.

வாழ்வியல் நிகழ்வு :

எங்கள் அப்பா ஒரு தொழிற்சாலையில் எழுத்தராகப் பணியாற்றுகிறார். இந்த ஆண்டு நல்ல உற்பத்தி, எனவே தங்களுக்கு பண்டிகைக்குப் பரிசுத் தொகை குறைந்தது 5000 ரூபாய் வழங்க வேண்டும் என்று தொடர் போராட்டத்தில் ஊழியர்கள் குதித்தனர். நிர்வாகிகள் போராட்டத்தைக் கண்டு கொள்ளாததால் ஊழியர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களோடு தொடர் உண்ணா விரதப் போட்டியில் ஈடுபட்டனர். போராட்டம் தீவிரம் அடைந்தது. நிலைமையை உணர்ந்த நிர்வாகம் ரூபாய் 3000 தருவதாகவும் மாதம் மாதம் 10 கிலோ அரிசிதருவதாகவும் கூறியது. இதைக் கேட்டதும் பெண்கள் கூட்டம் போராட்டத்தைக் கைவிட்டது. உழைப்பாளிகளுக்கு மாதம் மாதம் கிடைக்கப் போகும் அரிசியை எண்ணிப் போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டார். மறுநாள் எல்லாத் தொழிலாளர்களின் வீடுகளுக்கம் அரிசி வந்து சேர்ந்தது. அன்று பிற்பகலே தொழிற்சாலைக்கு வழக்கம் போலவே ஊழியர்கள் சென்று விட்டனர்.

ஆயிரம் காக்கைகள் - தொழிலாளர்கள் + குடும்பத்தினர்
ஒரு கல் - ஒவ்வொரு வீட்டிற்கும் வந்த 10 கிலோ அரிசி

4. பழமொழி: 'அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு'

உணர்த்தும் பொருள் : மனிதனுக்கு நன்மை தரும் பொருளையும் அளவோடு பயன்படுத்த வேண்டும். அளவிற்கு மீறினால் நன்மையே தீமையாக மாறிவிடும்.

வாழ்வியல் நிகழ்வு :

என் நண்பன் குமார் அவன் நன்றாகப் படிப்பான். தான்இன்னும் நன்கு படிக்க கணினி வாங்கித் வாங்கித் இதனால் ஒரு நாளைக்குப் பலமணி நேரங்கள் கணினியோடு நேரத்தைச் செலவிட்டான். கணியில் பொறியியல் கல்வி பயின்று உடனடியாக நல்ல வேலையில் சேர்ந்து கை நிறைய சம்பாதித்தான். திடீரென்று ஒருநாள் " கண் தெரியவில்லை" என்றான் குமார். அவனைப் பரிசோதித்த மருத்துவர் இவர் இரவு பகல் என்று தொடர்ந்து ஓய்வின்றி கணினியில் பணியாற்றியதில் இவரின் கண்சார்ந்த நரம்புகள் செயலிழந்து மவிட்டதாகவும், மீண்டும் நல்ல பார்வை வருவது கடினம் என்றனர். குமார் வேலையை இழந்து, இப்போது வீட்டில் இருக்கிறார்.

அமிழ்து - கணினியால் வாழ்வில் உயர்ந்தது.
நஞ்சு - பார்வையை இழந்தது.

5. பழமொழி: 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'

உணர்த்தும் பொருள் : ஒரு மிகப்பெரிய குழுவினரின் பண்பு நலன்களை ஒருவரைக் கொண்டே உலகம் அறிந்து கொள்ளும்.

வாழ்வியல் நிகழ்வு :

என்னோடு வகுப்பில் படிக்கும் கார்த்திகேயன் 8,9 ஆம் வகுப்பு பயின்ற போது தேசிய மாணவர் படையில் இருந்தனர். 11, 12 வகுப்புகளில் நாட்டு நலப்பணித்திட்த்தில் சேர்ந்து சேவை செய்கிறான். இரண்டு வாரங்களுக்கு முன் அவன் கிராமத்தில் இருந்து பள்ளி வருகின்ற வழியில் ஒரு கல்லூரி மாணவன். இரு சக்ர வாகனத்தோடு மயங்கிக் கிடந்தான். மக்கள் கூட்டம் பார்த்துவிட்டு அவரவர் பணிகளுக்குச் சென்றனர். அங்கு வந்த கார்த்திகேயன் உடனே ஒரு ரூபாய் கட்டணத் தொலைபேசியில் காவல்துறைக்கும் அடிப்பட்ட இளைஞரின் வீட்டிற்கும் அடுத்த அரைமணி நேரத்திற்குள் அவனின் குடும்பத்தாரும் காவலர்களும் வந்து விபத்துக் காப்பு வாகனத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். உரிய நேரத்தில் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். உரிய நேரத்தில் மருத்துவ மனைக்குச் சென்றதால் அந்த இளைஞர் உயிர் பிழைத்தான். மகிழ்ந்த அவனது தாய்,



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கார்த்திகேயனுக்கு ஒரு கைக்கடிகாரம் கொண்டு வந்திருந்தார். கார்த்திகேயனோ தான்செய்ய வேண்டிய கடமையைத் தான் செய்ததாகவும் அதற்குப் பரிசு வேண்டாம் என்றும் மறுத்து விட்டான். அந்த தாயோ "உங்கள் பள்ளிதன்னலமற்ற சேவை செய்யும் மாணவர்களைஉருவாக்குகின்றது என்பதற்கு இந்த ஒரு மாணவனே போதும்" என்று கூறி கார்த்திகேயனை வாழ்த்தினார்.

ஒரு பானை - பள்ளி
ஒரு சோறு - மாணவன் கார்த்திகேயன்

6. பழமொழி: 'இக்கரைக்கு அக்கரை பச்சை'

உணர்த்தும் பொருள் : அருகில் கிடைக்கும் வாழ்வியல் இன்பங்களைவிட வேற்று இடத்தில் தொலைவில் கிடைக்கும் இன்னபம் மிக உயர்ந்ததாக ஒரு மாயத் தோற்றம் தோன்றும்.

வாழ்வியல் நிகழ்வு :

என் அண்ணன் ரவிசங்கர் மருத்துவக் கல்லூரியில் முதல் மாணவனாக வெற்றி பெற்று அறுவை சிகிச்சை நிபுணருக்குரிய உயர் கல்வியையும் கற்றான். ஒரு பெரிய தனியார் மருத்துவமனையில் மாதம் ரூபாய் 50,000 சம்பளத்தில் பணியாற்ற என்அண்ணன் அழைக்கப்பட்டான். ஒரு ஆண்டு அங்கு பணியாற்றினான். உடன் பணியாளர்களும் உயர் மருத்துவர்களும் அவனைப் பாராட்டினர். அமெரிக்காவில் இந்திய மருத்துவர்களும் மாதச் சம்பளம் குறைந்தது 2 இலட்சம் என்பதையும் இதர வசதி வாய்ப்புகளும் உண்டு என்றும் நண்பர்கள் கூறியதைக் கேட்டு அமெரிக்கா சென்றான். அவனுக்கு நியூயார்க்கில் ஒரு தனியார் மருத்துவ மனையில் வேலை கிடைத்தது. மாதச் சம்பளம் 3 இலட்சம் எல்லோரும் அவன் வாழ்வு இனிமேல் செழிப்பாக இருக்குமென்று எண்ணினோம். அங்குள்ள சிரமங்களை அனுபவித்து விட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவை விட்டு மீண்டும் தான் பணியாற்றிய மருத்துமனையிலே பணிக்குச் சேர்ந்தான். என அண்ணனுக்கு இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதைப் புரிந்து கொள்ள இரண்டு வருடம் ஆனது . இக்கரை - இந்தியாவில் மருத்துவப் பணி அக்கரை - அமெரிக்காவில் மருத்துவப் பணி

7. பழமொழி: 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'

உணர்த்தும் பொருள் : ஒரு மனிதனின் சிறந்த பண்புகளும் திறமைகளும் அவனது சிறு பிள்ளைப் பருவத்திலே வெளிப்படும்.

வாழ்வியல் நிகழ்வுகள் :

மதுரையில் அது வறுமையில் வாடிய குடும்பம் அந்தக் குடும்பத்தில் கறுப்பு வைரம் போல எட்டாவதாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பள்ளிப் பருவத்தில் அந்தக் குழந்தை பல பரிசுகளையும் பெற்று அம்மாவிடம் கொடுத்தது "பரிசு பணமாக இருந்தால் இவனுக்கு இன்னும் நல்ல உணவு கொடுப்பேனே!" என்று அந்த அம்மா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். அவன் வளர்ந்து தனது பேச்சாற்றலால் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பேராசிரியரானார். பிறகு யாவரும் விரும்பிக் கேட்கும்படி உரையாற்றும் பேச்சாளரானார். பட்டிமன்ற நடுவரானார். பிள்ளைப் பருவத்தில் இவரிடம் இருந்த பேச்சாற்றல் இன்று இவரை உலகம் அறிநத் உயர்ந்த பேச்சாளராகப் போற்றும் நிலைத்துக் கொண்டு வந்துள்ளது அவர் தான் பட்டிமன்றத்தில் புகழ் பெற்ற திரு. சாலமன் பாப்பையா அவர்கள் அவரது ஊரும் உறவும் விளையும் பயிர் முளையிலே தெரிந்தது என்று சொல்கிறது. விளையும் பயிர் - பேச்சாற்றல் நிறைந்த எட்டாவது பிள்ளை விளைந்த பயிர் - உலகு போற்றும் திரு. சாலமன் பாப்பையா

8. பழமொழி: 'தோல்வியே வெற்றிக்குப் படித்தல்'

உணர்த்தும் பொருள் : தோல்விக்கு உரிய காரணத்தை ஆராய முயன்றவருக்கு அந்தத் தோல்வியே வெற்றிக்குரிய வழிகளை அமைக்கும்.

வாழ்வியல் நிகழ்வு :

என்னோடு 10 ஆம் வகுப்பில் பயின்றவன் அருண் அவன் பொதுத் தேர்வில் தோற்றுப் போனான். வீட்டிலே முடங்கி அழுது கொண்டிருந்தான் அவனது அம்மா என் வீட்டிற்கு வந்து அவனை ஆறுதல் படுத்தச் சொன்னாள். அவனிடம் நான் சென்றேன் வாழ்வியல் தோல்வியுற்று வென்ற அறிவியலின் தந்தை ஐன்ஸ்டீன் பற்றி எடுத்து சொன்னேன். நீ தோற்றதற்கான காரணத்தைக் கண்டுபிடி. அதுவே உன் வெற்றிக்கு முதற்படி என்றேன். குறிப்பிட்ட கேள்விகளை மட்டும் தேர்ந்து எடுத்துப் படித்து, மற்ற கேள்விகளைபட் படிக்காமல் இருந்தது தான் - தனது தோல்விக்குக் காரணம் என்றான். வெகு நேரத்திற்குப் பின் நீ நன்றாக படித்து எழுதிப் பார்க்க நான் எல்லா வழிகளிலும் உதவுகிறேன் என்று உறுதி அளித்தேன். அவ்வாறே அவனது 10 ஆம் வகுப்புத் தேர்விற்கு அவனுக்கு உதவியாக இருந்தேன்.

தோல்வி - தேர்ந்து எடுத்துப் படித்து
வெற்றி - எல்லாம் படித்ததால் வந்தது

9. பழமொழி : 'ஒன்று பட்டால் உண்ட வாழ்வு'

உணர்த்தும் பொருள் : உலகில் மனிதர்கள் ஒன்று கூடி ஒரு செயலைச் செய்தால் அதில் வெற்றி கிட்டும்.

வாழ்வியல் நிகழ்வு :

எங்கள் வீட்டிற்கு முன் தெருவின் சாக்கடை ஓடுகிறது. இரண்டு நாட்களாக ஏதோ அடைத்துத் துர்நாற்றம் வீசத் தொடங்கியது. என் அப்பா நகராட்சி அலுவலகம் சென்று சாக்கடையைச் சுத்தம் செய்ய விண்ணப்பம் கொடுத்தார். பரிசீலிப்பதாகவும் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் பதில் கூறினார்களே தவிர மூன்று நாட்கள் ஆகியும் சாக்கடையைச் சுத்தம் செய்ய வரவில்லை. மறுநாள் என் அப்பா எங்கள் பகுதியில் இருந்த எல்லா வீட்டினரையும் சந்தித்து வீட்டிற்கு ஒருவர் விகிதம் தன்னோடு மற்றொரு மனுவைக் கொடுக்க வருமாறு அழைத்தார். ஏறக்குறைய 200 பேர் சேர்ந்து



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒரு கூட்டு விண்ணப்பம் எழுதி மாநகராட்சிக்கு சென்றனர். கூட்டத்தைப் பார்த்தமேலதிகாரியே நேரில் வந்து நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறினார். அன்று பிற்பகல் 2 மணிக்கு நகராட்சி ஊழியர்கள் வந்து சாக்கடை அடைப்புகளை நீக்கி சுத்தப்படுத்தினர். எங்கள் நகரின் துர்நாற்றம் நீங்கியது. என் அப்பா தன்னுடன் வந்தவர்களுக்கு நன்றி கூறினார்.

தனி விண்ணப்பம் - தோல்வி

கூட்டு விண்ணப்பம் - வெற்றி

10. பழமொழி - 'தன் கையே தனக்குதவி'

உணர்த்தும் உண்மை : தன் முன்னேற்றத்திற்காக தானே காரணமாக வேண்டும் என்று முயன்று வாழ்க.

வாழ்வியல் நிகழ்வு :

என் அண்ணன் தீபன் 11 ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் நன்றாகப் படிப்பாள். அவன் "IIT இல் சேர்ந்து படித்தால் மகிவும் நல்லது என்கிறார்கள். ஆனால் அதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை" என்று கூறி வருந்ததுவான். எங்கள் அப்பா படிக்காத விவசாயி என்பதால், என் அண்ணனுக்கு இது பற்றி அப்பா உதவ இயலவில்லை. எங்கள் தெருவிற்கு அடுத்த தெருவில் ஒரு மாணவன் IIT இல் சேர்ந்து படித்து வந்தான். அவனின் பெற்றோர்களிடம் எப்படிச் சேர்வது? எங்கெங்கு பயிற்சிக்குச் செல்வது என்றெல்லாம் அண்ணன் கேட்டான் அவர்கள் சரியாகப் பதில் சொல்லவில்லை.

பிறகு இணையதளத்தில் தகவல்களை அக்கா சேகரித்தாள. 11 ஆம் வகுப்பு விடுமுறையில் சென்னையில் உள்ள பயிற்சிக் கூடம் சென்று IIT நுழைவுத் தேர்விற்குப் படித்தாள். 12 - ஆம் வகுப்பு முடித்த பிறகும் பயிற்சிக்குச் சென்றாள்.

சென்னையில் அதற்குரிய நுழைவுத் தேர்வில் வென்று இன்று IIT மாணவியாக அக்கா படித்துக் கொண்டிருக்கிறாள். பிறரை நம்புவதை விட நம்மை நம்ப வேண்டும் எனும் பாடத்தை என் அக்காவிடம் இருந்து நான் கற்றுக் கொண்டேன்.

11. பழமொழி 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' உணர்த்தும்

பொருள் : புகழ்பெறுவன எல்லாம் மெய்யானவை அல்ல போலிகளும் உண்டு

வாழ்வியல் நிகழ்வு : எங்கள் பேட்டையில் இரண்டு ஆண்டகளுக்கு முன்பு பாபு என்பவர் தனியார் சேமிப்பு வங்கி ஒன்றைத் தொடங்கினார். "தேசிய வங்கிகள் வழங்குவதை விட அதிக வட்டி தருவோம்" என்று ஊரெங்கும் விளம்பரம் செய்தார். எங்கள் பகுதி மக்கள் உழைத்து உழைத்துச் சேர்த்த பணத்தை அந்தத் தனியார் வங்கியில் கூடுதல் வட்டிக்கு ஆசைப்பட்டு முதலீடு செய்தனர். மேலும் அந்த பாபு தேசிய வங்கிகளை விடக் குறைந்த வட்டிக்கு ஒன்று இரண்டு பேருக்கு கடன் கூடக் கொடுத்தார். 'இது அருமையான வங்கி' என்று மக்கள் நம்பி, அதில் ஏராளமான பணத்தை முதலீடு செய்தனர். ஆனால் சென்ற மாதத்தில் ஒரு நாள் பாபுவின் குடும்பம் ஊரை விட்டே சென்று விட்டது. பணம் போட்டிருந்த மக்கள் காவல் நிலையத்தின் முன்பு நின்று கதறி அழுதனர். 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்று நம் முன்னோர் சொல்லிக் கொடுத்ததை அறியாமல் இப்படி ஏமாந்து விட்டீர்களே நான் தகுந்த நடவடிக்கை எடுக்கிறேன்" என்று கூறி காவல்துறை ஆய்வாளர் மக்களை அமைதிப்படுத்தினார்.

12. பழமொழி : 'காற்றுள்ள போதே தூற்றி கொள்'

உணர்த்தும் பொருள் : வாய்ப்புக் கிடைக்கின்ற போதே முழுமையாகப் பயன்படுத்தி வெற்றிகொள்.

வாழ்வியல் நிகழ்வு : எங்கள் பகுதியில் ஆயத்த ஆடையகம் வைத்திருப்பவர் வேலன். இவர் தீபாவளி வரப்போகும் ஒரு மாதத்திற்கு முன்பே மிகுதியான விளம்பரங்களைக் கொடுப்பார். வியாபாரத்திற்கு இவ்வளவு விளம்பரம் தேவையா? " என்று அவர் மனைவி கேட்பார்." தீபாவளி முடிகிறதுக்குள்ளே சம்பாதித்தால் தான் உண்டு என்று சொல்லும் அவர் தீபாவளிக்கு ஒரு வாரம் முன்பு ஏராளமான பரிசுத் திட்டங்களை அறிவித்தார். விற்பனையைப் பெருக்கினார். தீபாவளிக்கு முந்தைய நாள் அதிரடித்தள்ளுபடி என்று மிகக் குறைந்த விலைக்கு ஆயத்த ஆடைகளை விற்றார். குறைவாக இலாபம் வைத்து விற்கிறீர்களே" என்று வருத்தத்தோடு கேட்கும் மனைவியிடம் மக்கள் துணி வாங்கிறதே தீபாவளிக்கு மட்டும் தான் அந்த நேரம் எவ்வளவு வியாபாரம் செய்ய முடியுமோ அவ்வளவு வியாபாரம் செய்வது தான் புத்திசாலித்தனம். இதைத்தான் நம்முடைய மூத்தோர்கள் காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று கூறினார். அவர் மனைவியும் அதை ஒப்புக் கொண்டாள்.

பழமொழிகளை வாழ்க்கை நிகழ்விலி அமைத்து எழுதுக:

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
2. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு
3. அகத்தின் அழகு முகத்தில்தெரியும்
4. கரும்பு தின்னக் கூலி வேண்டுமா
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
6. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
7. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
8. அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்
9. பதறிய காரியம் சிதையும்
10. சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்

~~~~~~~



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/
~~~~~~~